# எங்கள் தேசம்


மாதம் இரு முறை

Engal Thesam    එංගල් දේසම්

GPO/QD/21/NEWS/2016

மலர்: 15 | இதழ்: 10 | மே 15 – 31 ஹிஜ்ரி: 1437 | பக்கங்கள்: 20 | விலை: ரூபா 40.00 317





02 பங்களாதேஷ் ஆட்சியின் கொடுங்கோன்மை



11 நேர்காணல் ஏ.எல்.எம். அதாஉல்லா



12 செப்டெம்பர் 11 தாக்குதல்


# சம்பூரில் அனல் மின்நிலையம்

# மக்களின் எதிர்ப்பையும் மீறி அரசு திணிப்பு




திருகோணமலை மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சம்பூர் பகுதியில் அனல் மின்சார நிலையம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்ற நிலையில் இந்த அனல் மின்சார நிலையத்தை தடை செய்யுமாறு தெரிவித்து கடந்த 13 ம் திகதி வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகையையடுத்து தோப்பூரில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது. இவ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மூதூர் பசுமைக் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இவ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் கருத்து தெரிவிக்கும் போது,

சம்பூர், தோப்பூர், மூதூர்பிரதேசங்கள் விவசாயத் தொழிலையும் மீன்பிடித் தொழிலையும் அடிப்படையாகவும் ஜீவனோபாயமாகவும் கொண்ட பிரதேசங்கள்.

சம்பூர் பிரதேசத்தில் அனல் மின்சார நிலையம் அமைக்கப்படுமாக இருந்தால் இவ் அனல் மின் நிலையத்திலிருந்து வெளியாகும் இரசாயன கழிவுகளும் புகைகளும் எமது ஜீவனோபாயத் தொழிலை பாதிப்படையச் செய்வதோடு எமது பிரதேசத்தை அண்டிய பிரதேசங்களில் உடலியல் ரீதியான நோய்களைத் தோற்றுவிக்கும் அபாயமும் காணப்படுகின்றது எனத் தெரிவித்தனர்.

அத்தோடு திருகோணமலை மாவட்ட அரசியல்வாதிகள், சம்பூர் பிரதேசத்தில் அமைக்கப்பட உள்ள அனல் மின்சார நிலையத்தைத் தடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்து எமது எதிர்பார்ப்பினை நிறைவேற்ற வேண்டுமெனவும் தெரிவித்தனர்.

➡14

## பங்களாதேஷுக்கான துருக்கி தூதுவர் திருப்பி அழைப்பு



பங்களாதேஷின் பிரதான அரசியல் கட்சிகளுள் ஒன்றான ஜமா அத்தே இஸ்லாமியின் தலைவர் தூக்கிலிடப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பங்களாதேஷுக்கான துருக்கி தூதுவர் திருப்பி அழைக்கப்பட்டுள்ளார்.

முதியுர் ரஹ்மான் நிஸாமி தூக்கிலிடப்பட்ட சம்பவம் தொடர்பில் துருக்கிய தூதரகம் தனது உள்ளார்ந்த கவலையை வெளிப்படுத்தியுள்ளதுடன் இவ்வாறான மரண தண்டனைகளை தள்ளி வைக்கும்படி பங்களாதேஷ் தலைவர்களிடம் தொடரான வேண்டுகோள்களை தாம் விடுத்து வந்ததாகவும் இதனால் ஏற்படும் நல்லிணக்க சீர்குலைவு மற்றும் நாட்டின் அமைதித் தன்மையில் ஏற்படக்கூடிய பங்கம் பற்றியும் அவர்களின் கவனத்திற்கு ஏற்கனவே கொண்டுவந்திருந்தோம் எனவும் துருக்கிய தூதரகம் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, பங்களாதேஷின் மக்கள் சமூகத்தை சகோதரத்துவ வாஞ்சையின் பிரகாரம் நிலைப்படுத்துவதையும் சமூக அமைதி நிலவுவதையுமே துருக்கி எதிர்பார்ப்பதாகவும் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கிறது.

➡16

## வடமாகாண சபையின் பிரேரணைக்கு NFGG வழங்கிய ஆதரவு வாபஸ்



வடமாகாண சபையின் அரசமைப்பு ஆலோசனைக்கான தனது ஆதரவை மீளப் பெறுவதாக நல்லாட்சிக்கான தேசிய முன்னணி அறிவித்துள்ளது.

வடக்கு மாகாண சபை அரசியலமைப்பு தொடர்பான ஆலோசனை முன்மொழிவுகளை அண்மையில் முன்வைத்திருந்தது. மேற்படி அரசியலமைப்பு தொடர்பான ஆலோசனை முன்மொழிவிற்கு நல்லாட்சிக்கான தேசிய முன்னணி (NFGG) சார்பில் அதன் பிரதிநிதியும் வடக்கு மாகாண சபை உறுப்பினருமாகிய அ. அஸ்மின் ஆறு அம்சங்களை உள்ளடக்கி ஆலோசனைகளை முன்வைத்திருந்தார்.

மேற்படி ஆலோசனைகள் குறித்த பிரேரணையில் இணைத்துக் கொள்ளப்பட்டால் மாத்திரமே பிரேரணைக்கு தனது ஆதரவினை வழங்க முடியும் என்று தெரிவித்திருந்தார். மேற்படி திருத்திய பதிப்பு உறுப்பினர்களின் பார்வைக்கு வழங்கப்படாமையினைத் தொடர்ந்து தன்னுடைய ஆதரவினை மீளப் பெற்றுக் கொள்வதாக வடக்கு மாகாணசபை உறுப்பினர் அ.அஸ்மின் தெரிவித்துள்ளார்.


இது தொடர்பாக NFGG இன் தலைவர் அப்துர் ரஹ்மான் கருத்துத் தெரிவிக்கையில், அரசியல் யாப்புத் திருத்தம் மற்றும் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பில் வடமாகாண சபையினால் கொண்டு வரப்பட்ட பிரேரணையைப் பரிசீலித்த NFGG யின் தலைமைத்துவ சபை நிபந்தனைகளுடனான ஆதரவை வழங்குவதெனத் தீர்மானித்திருந்தது. அந்த வகையில் அரசியல் அதிகாரப் பரவலாக்கம் தொடர்பில் உள்வாங்கப்படவேண்டிய திருத்தங்களாக ஆறு விடயங்கள் வடமாகாணசபையின் கவனத்திற்கு NFGG பிரதிநிதி மூலமாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அவை உள்வாங்கப்படும் சந்தர்ப்பத்தில் மாத்திரமே பிரேரணைக்கான ஆதரவு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

➡02

மனிதம் வாழுமிடமெல்லாம் எங்கள் தேசமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் வருடாந்தம் 240,000 கருக்கலைப்புக்கள்



இலங்கையில் நாளொன்றுக்கு 658 கருக்கலைப்புக்கள் இடம்பெறுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இதன்படி வருடாந்தம் 240,170 கருக்கலைப்புக்கள் இடம்பெற்று வருவதாக சுகாதார கல்விப் பணிமனை தெரிவித்துள்ளது. தாய்க்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்படலாம் என்ற சந்தர்ப்பம் தவிர்ந்த ஏனைய நிலைகளில் கருக்கலைப்பு செய்வது இலங்கையில் சட்டவிரோதமாகும். பாதுகாப்பற்ற கருக்கலைப்பு காரணமாக அநேகமான தாய் மரணங்கள் இடம்பெறுவதாகவும் வைத்தியர்கள் சுட்டிக்காட்டினர். சுகாதாரம் போஷாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் சுகாதார கல்விப் பணிமனையில், கருக்கலைப்பை சட்டபூர்வமாக்க வேண்டுமா என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது இந்தத் தகவல் வெளியானது. இலங்கையில் குடும்ப வாழ்க்கையில் ஈடுபடுவோர் மத்தியிலேயே அதிகளவில் கருக்கலைப்புக்கள் இடம்பெறுவதாக சுகாதாரத் தரப்பினர் சுட்டிக்காட்டுகின்றனர்.

## ரயிலில் டிக்கெட் இன்றி பயணிப்பவர்களுக்கான அபராதம் உயர்வு



ரயிலில் பிரவேசச் சீட்டின்றி (டிக்கட்) பயணிப்பவர்களுக்கு விதிக்கப்படும் அபராதத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி தற்போது 1500 ரூபாவாக இருந்த அதிகபட்ச அபராதத் தொகை 3,000 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வாவால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளதாக, அமைச்சரவை ஊடகப் பேச்சாளர், அமைச்சர் கயந்த கருணாதிலக்க அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கையில் புதிய பாதுகாப்புச் சட்டம்



புதிய பாதுகாப்புச் சட்டமூலத்தை ஜூன் மாத இறுதியில் அறிமுகப்படுத்த எதிர்பார்த்துள்ளதாக, பாதுகாப்பு செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். இதன்படி, தற்போதுள்ள தீவிரவாத ஒழிப்பு சட்டமூலத்துக்கு பதிலாக, தேசிய புதிய சட்டமூலத்தை அறிமுகப்படுத்தவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த சட்டமூலம் தொடர்பான நடவடிக்கைகள் சட்ட மாஅதிபர் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தீவிரவாத ஒழிப்புச் சட்டமூலத்திலுள்ள குறைபாடுகள் காரணமாக தற்போதுள்ள நிலைமைக்கு ஏற்றவாறு புதிய சட்டமூலத்தை அறிமுகப்படுத்தவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# ஜமாஅத்தே இஸ்லாமி கட்சித் தலைவருக்கு தூக்கு பங்களாதேஷ் ஆட்சியின் கொடுங்கோன்மை

ஜப்பார் அலி

பங்களாதேஷின் பிரதான அரசியல் கட்சிகளுள் ஒன்றான ஜமாஅத்தே இஸ்லாமியின் தலைவரும் முன்னாள் விவசாயத்துறை, வணிகத்துறை அமைச்சருமாகிய முதியுர் ரஹ்மான் நிஸாமி கடந்த 11 ஆம் திகதி புதன் கிழமை தூக்கிலிட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டார். அவர் 1971 ஆம் ஆண்டு இடம்பெற்ற பங்களாதேஷ் சுதந்திரப் போராட்டத்தின் போது போர்க் குற்றங்களைப் புரிந்தார் என்ற குற்றச்சாட்டின் பெயரில் பங்களாதேஷ் சர்வதேசக் குற்ற தீர்ப்பாயத்தின் (ICT) தீர்ப்பின் பிரகாரம் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டார்.

குறித்த மரண தண்டனைக்கு எதிராக நிஸாமி மேன்முறையீடு செய்திருந்தும் பங்களாதேஷ் உச்ச நீதிமன்றம் அவரது மனுவை நிராகரித்தது. எனினும், குற்றங்களை ஒப்புக் கொண்டு தனக்கு மன்னிப்பளிக்கும் படி பங்களாதேஷ் ஜனாதிபதியிடம் கருணை மனு கோரிக்கை விடுப்பதற்கான இறுதி சந்தர்ப்பம் வழங்கப்பட்டபோதிலும் நிஸாமி அதனை நிராகரித்தார். இந்நிலையிலேயே அவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

2001 ஆம் ஆண்டு பங்களாதேஷில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பேகம் காலிதா ஸியா தலைமையிலான பங்களாதேஷ் தேசியக் கட்சி (BNP) யுடன் இணைந்து ஜமாஅத்தே இஸ்லாமி பெரு வெற்றியீட்டும் வகையில் கட்சியை நிஸாமி தலைமை தாங்கி வழி நடத்தியிருந்தார். அத்துடன் ஜமாஅத்தே இஸ்லாமியின்பங்களிப்புடன் அமையப் பெற்ற அரசாங்கத்தில் 2001 முதல் 2006 வரை முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களை வகித்து தேசத்தின் எழுச்சிக்காக உழைத்தார்.

பங்களாதேஷில் 2015 இல் 197 பேர் மரண தண்டனை விதிக்கப்பட்டனர். 2015 இல் பங்களாதேஷ் 04 பேரை தூக்கிலிட்டது. அதில் 03 பேர் ICT ஆல் தூக்கிலிடப்பட்டோர் ஆவர். ICT என்பது 1971 இல் சுதந்திரப் போராட்டத்தின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்களை விசாரிப்பதற்காக 2009 இல் பங்களாதேஷிய அரசால் நிறுவப்பட்ட ஒரு நீதிமன்றமாகும். ஆனால், குறித்த நீதிமன்றானது வழக்குகளை விசாரிப்பதில் பாரிய மனித உரிமை மீறல்களை இழைத்து வருகின்றது. குற்றம் சுமத்தப்பட்டவர்கள் தாங்கள் நிரபராதி என்பதை நிரூபிப்பதற்கான சான்றுகளை முன்வைப்பதற்கான அவகாசத்தை அது வழங்க மறுத்து வருகின்றது. நிஸாமிக்கு எதிரான வழக்கிலும் கூட 22 சாட்சிகளை விசாரிக்க அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த பொழுதிலும் வெறும் 4 சாட்சிகளை மட்டுமே விசாரிக்க பாதுகாப்புப் பிரிவு அனுமதியளித்தது. முதியுர் ரஹ்மான் நிஸாமியின் சட்டத்தரணிகளுக்கு குறுக்கு விசாரணை செய்யும் அனுமதியும் மறுக்கப்பட்டிருந்தது. மேலும் இவ்வழக்கை விசாரணை செய்வதற்கு வழங்கப்பட்ட காலமும் மிகக் குறைவானதாகவே காணப்பட்டது.

இதேவேளை தற்போது ஆட்சியிலுள்ள பிரதமர் ஷேக் ஹசீனா தலைமையிலான அரசாங்கம் ஜமாஅத்தே இஸ்லாமி கட்சியை அழித்தொழிக்கும் நோக்கில் பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து தமது தலைவர்களை பழிவாங்குவதாக அக்



முதியுர் ரஹ்மான் நிஸாமி

கட்சி தெரிவித்துள்ளது. அத்துடன் நிஸாமி உட்பட ஏனைய தமது கட்சியின் தலைவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் பொய்யானவை என்றும் அக்கட்சி சுட்டிக் காட்டியுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் துருக்கிய தூதரகம் தனது உள்ளார்ந்த கவலையை வெளிப்படுத்தியுள்ளது. இவ்வாறான மரண தண்டனைகளை தள்ளி வைக்கும்படி பங்களாதேஷ் தலைவர்களிடம் தொடரான வேண்டுகோள்களை தாம் விடுத்து வந்ததாகவும் இதனால் ஏற்படும் நல்லிணக்க சீர்குலைவு மற்றும் நாட்டின் அமைதித் தன்மையில் ஏற்படக்கூடிய பங்கம் பற்றியும் அவர்களின் கவனத்திற்கு ஏற்கனவே கொண்டு வந்திருந்தோம் எனவும் துருக்கிய தூதரகம் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வாறான மரண தண்டனைகள் ஏற்கனவே நடந்து முடிந்த பிரச்சினைக்கான சரியான தீர்வுகளாக அமையாது என்றும் அதற்கு மாற்றமாக பங்களாதேஷுக்குள் சகோதரத்துவத்திற்கு எதிரான காழ்ப்புணர்வுகளையும் பகைமையையுமே அவை தூண்டிவிடப் போகின்றன. எனவே, பங்களாதேஷின் மக்கள் சமூகத்தை சகோதரத்துவ வாஞ்சையின் பிரகாரம் நிலைப்படுத்துவதையும் சமூக அமைதி நிலவுவதையுமே துருக்கி எதிர்பார்ப்பதாகவும் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கிறது.

மலேசிய முஸ்லிம் இளைஞர்கள் இயக்கம் நிஸாமியின் மீது திணிக்கப்பட்ட இந்தத் தண்டனையை கடுமையாகக் கண்டித்துள்ளது. மிகவும் மோசமான மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றம் என இதை வர்ணித்திருந்தது. ஆதாரங்கள் எதுவும் உறுதிப்படுத்தப்படாத நிலையிலேயே தண்டனை நிறைவேற்றப்பட்டிருப்பதாக மேலும் அது குற்றம் சாட்டியுள்ளது.

பங்களாதேஷிய அதிகார வர்க்கம் நிஸாமியை தூக்கிலிட்டமையானது பேரதிர்ச்சியைத் தருகிறது. 1971 ஆம் ஆண்டு சுதந்திரப் போராட்டத்தின்போது பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்குவதற்குப் பதிலாக, அப்பாவி உயிர்களைப் பறிப்பது எந்தவகையிலும் ஏற்புடையதல்ல என தெற்காசியாவின் எம்னஸ்டி இன்டர்நெஷனலின் பிராந்தியப் பணிப்பாளர் சம்பா படேல் தெரிவித்துள்ளர்.

ஜமாஅத்தே இஸ்லாமியின் தலைவர்களும் ஏனைய எதிர்கட்சித் தலைவர்களும் அநீதமான முறையில் ஒருதலைப்பட்சமாக தீர்ப்பளிக்கப்படுவதை சர்வதேசமும் அந்நாட்டு மக்களும் கடுமையாக எதிர்த்து வருகின்றனர். ஷேக் ஹஸீனா தலைமையிலான அவாமி லீக் ஆட்சியின் காட்டு தர்பார் மக்களின் மீது கொடுங்கோண்மையை கட்டவிழ்த்து விட்டிருக்கிறது. அத்துடன் இந்நிகழ்வு சர்வதேச சமூகத்தை பெரிதும் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளதுடன் பங்களாதேஷின் சர்வதிகார ஆட்சியாளர்களுக்கு எதிராக மனித உரிமைக்குரலையும் உயர்த்தியிருக்கிறது.

## வடமாகாண சபையின்...

(முன் பக்கத் தொடர்)

NFGG யினால் சமர்ப்பிக்கப்பட்ட குறித்த திருத்தங்கள் வட மாகாணசபை பிரேரணையின் இறுதி வடிவத்தில் உள்வாங்கப்பட்டதா இல்லையா என்பதை உறுதி செய்யுமாறு கடந்த சபை அமர்வின்போது NFGG பிரதிநிதியால் கோரப்பட்டது. இருப்பினும் அதனை சபையினால் உறுதி செய்ய முடியவில்லை என்ற காரணத்தினால் பிரேரணைக்கு வழங்கப்பட்ட ஆதரவு வாபஸ் பெறப்பட்டுள்ளதாக NFGG தெரிவித்தது.

முன்வைக்கப்பட்ட 6 திருத்தங்களும் வருமாறு;

1. இலங்கை மக்களாகிய நாம் சிங்கள மக்கள், தமிழ் மக்கள், முஸ்லிம் மக்கள் என்ற தேசிய இனத்துவ அடையாளங்களை பரஸ்பரம் அங்கீகரித்து, மதித்து, சகவாழ்வை உறுதிசெய்து, எமது மக்களின் தனித்துவங்களைப் பேணிக்கொள்ளத்தக்க வகையில் பிராந்தியரீதியான அதிகாரப் பகிர்வையே நாம் எதிர்பார்க்கிறோம்.

2. இந்த நாட்டில், முஸ்லிம் மக்கள் ஒரு தனியான தேசிய இனத்துவம் என்பதையும் இலங்கை இனப்பிரச்சினையில் முஸ்லிம்களும் ஒரு தனியான தரப்பினர் என்பதனையும் வெளிப்படையாக அங்கீகரித்து ஏற்றுக்கொண்டதன் அடிப்படையிலேயே, முஸ்லிம்களின் விடயம் நோக்கப்படுதல் வேண்டும். ''முஸ்லிம் மக்கள் ஒரு தனியான தேசிய இனம்'' என்பது சுதந்திரத்திற்குப் பிந்திய காலங்களில் தமிழ்மக்களின் அரசியல் தலைவர்களினால் அங்கீகரிக்கப்பட்ட விடயம் என்பது இங்கு கவனிக்கப்படல் வேண்டும்.

3. கிழக்கு மாகாண தமிழ் மக்கள், முஸ்லிம் மக்கள் ஆகியோரது முழுமையான அபிலாஷைகளின் அடிப்படையிலேயே வடக்கு- கிழக்கு மாகாணங்கள் இணைந்த அலகாக அல்லது பிரிந்த அலகாக தீர்மானிக்கப்படல் வேண்டும். அந்தவகையில் தான் மேற்படி விடயத்தில் அந்த மக்களின் விருப்பை அறிவதற்கான தனியான பொறிமுறை அவசியமாகும். அதன் அடிப்படையிலேயே இறுதியான தீர்மானங்கள் முன்னெடுக்கப்படுதல் வேண்டும். (இலங்கை இந்திய ஒப்பந்தத்திலும் இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது என்பது இங்கு நினைவுபடுத்தத்தக்கது)

4. முன்மொழியப்படும் 'முஸ்லிம் பெரும்பான்மை அதிகார அலகு' என்பது ஏனைய பிராந்திய அலகுகளைப்போன்ற சம அதிகார அலகாக அமைவதையும் அங்கு வாழ்கின்ற மக்களின் குடிசனப் பரம்பலுக்கு அமைய காணி உள்ளிட்ட சகல வளப்பகிர்வுகள் இடம்பெறுவதையும் உறுதி செய்ய வேண்டும்.

5. தென்னிலங்கை வாழ் முஸ்லிம்களும் தேசிய முஸ்லிம் சமூகத்தின் ஒரு பிரதான அங்கம் என்ற வகையில் அவர்களுடைய அபிலாசைகளை ஈடுசெய்யத்தக்க விசேட அதிகாரப் பகிர்வு முறைகளையும் சட்ட ஏற்பாடுகளையும் தென்னிலங்கையின் மாகாண அரசுகள் முன்னெடுக்க வேண்டும்.

6. அரசியல் தீர்வில், முஸ்லிம்களுக்கான தீர்வு தொடர்பில் முஸ்லிம் மக்களுடனான முழுமையான பேச்சுவார்த்தைகளை, கலந்துரையாடல்களை தமிழ் மக்களும் தலைவர்களும் உறுதிசெய்தல் அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண பொது நூலகம்

# இலங்கை எதிர்கொள்ளும் படுகடன் பிரச்சினையும் மக்கள் சுமக்கும் வரிச்சுமையும்



கலாநிதி அஸீஸ் முகம்மட் நுபைல்
சிரேஷ்ட விரிவுரையாளர்
தென் கிழக்கு பல்கலைக்கழகம்

இலங்கை கடந்த பல வருடங்களாக படுகடன் பிரச்சினையை எதிர்கொண்டு வருகின்றது. இதனை அரசு விரும்பியோ விரும்பாமலோ மக்கள் மீது சுமத்தியும் வருகின்றது. இந்தப் படுகடனானது, குறிப்பாக உள்நாட்டு யுத்தம் நிறைவு பெற்றதன் பின்னர் (2009) இன்னும் அதிகரித்துக் காணப்படுகிறது. அதாவது, யுத்தத்தின் பின்னர் கடந்த அரசு நாட்டை அபிவிருத்தி செய்யும் தோரணையில் பாரிய வேலைத் திட்டங்களை மேற்கொண்டிருந்தது.

அரச அபிவிருத்தி முதலீட்டு நிதியினை கடந்த அரசு பெருமளவுக்கு அரச மற்றும் தனியார் வங்கிகளிடமிருந்தும் தனியார் நிறுவனங்களிடமிருந்தும் சர்வதேச நாடுகளிடமிருந்தும் குறுகிய கால அடிப்படையில் பெற்றிருந்தது. இவ்வாறு கடன்களைப் பெற்று அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டமையினால் நாடு படுகடன் பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது. இதனால், இந்த நாட்டில் பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தையும் கடனுடனேயே பிறக்கின்றது. அதேபோன்று மரணிக்கும் ஒவ்வொரு பிரஜையும் கடனுடனேயே மரணிக்கின்றார் என்று கூறுவமளவுக்கு ஒவ்வொரு பிரஜையின் மீதும் அரசாங்கம் கடன் சுமையை சுமத்தியுள்ளது.

கடந்த மஹிந்த அரசாங்கம், யுத்தத்தை நிறைவு செய்தவர்களும் நாங்களே; நாட்டை அபிவிருத்தியடையச் செய்தவர்களும் நாங்களே என்ற பெருமையைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் வலிந்து மேற்கொண்ட அபிவிருத்தித் திட்டங்களுக்காக பெற்ற குறுகிய கால கடன்களே இன்று இலங்கைக்கு பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளன.

இலங்கை பெற்ற கடனைத் திருப்பிக் கொடுப்பதற்காக அல்லது அதற்கான வட்டியினை திருப்பிச் செலுத்துவதற்காக மீண்டும் மீண்டும் கடன் படுகின்ற (படுகடன் பொறி) நிலைமைக்கு இன்று அரசு தள்ளப்பட்டுள்ளது. இதனால் மொத்த உள்நாட்டு உற்பத்தியும் வீழ்ச்சியடைந்துள்ளது. தென் ஐரோப்பிய நாடான கிரீஸ் நாடும் இவ்வாறே படுகடனால் வீழ்ச்சியடைந்தது.

இந்தப் படுகடனை நிவர்த்திப்பதற்கு இன்றைய நல்லாட்சி அரசு சில திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. 11 சதவீதமாக இருந்த பெறுமதி சேர் வரி (VAT) 15 வீதமாக அதிகரிக்கப்பட்டமை, மூலதன ஆதாய வரி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமை (CGT), ஏனைய நாடுகளுடனான இருபக்க பொருளாதார உடன்படிக்கைகளை மேற்கொள்கின்றமை போன்றவை அவற்றுள் சிலவாகும்.

இலங்கை அண்மைக்காலமாக படுவேகமாக நாடுகளுடன் ஒப்பந்தங்களை மேற்கொண்டு வருகின்றது. ஆனால், அண்மையில் சீனா, துருக்கி, ஈரான் போன்ற நாடுகளோடும் இந்தியாவோடு மீண்டுமொரு முறையும் ஒப்பந்தங்களைச் செய்ய இலங்கை முற்பட்டுள்ளது. கடன் நெருக்கடியிலிருந்து தப்பித்துக் கொள்ள குறுகிய கால மூலோபாயமாகவே அரசு இதனைக் கருதுகின்றது.



ஒரு நாடு அபிவிருத்தியடையும் போது முதற் கட்டமாக விவசாயத்துறை வளர்ச்சியடையும் அதன் பின்னர் கைத்தொழில் துறை வளர்ச்சியடையும்; அதற்கடுத்து சேவைத்துறை வளர்ச்சியடையும். ஆனால், அது இலங்கையைப் பொறுத்தவரையில் மாறி நடைபெறுகிறது. விவசாயத்துறையின் பங்கு மெல்ல வீழ்ச்சியடைய, சேவைத்துறை அதனைக் கைப்பற்றியுள்ளது. இது ஒரு தலை கீழ் முரண்பாடாகும். சேவைத்துறை முன்னேற்றத்திற்கு அரசாங்க தொழில் துறைசார் விரிவாக்கமும் சம்பள ஏற்றமுமே பிரதான காரணங்களாகும். எல்லோரும் தொழில் வாய்ப்புக்காக அரசாங்கத்திலேயே தங்கியிருக்க வேண்டியுள்ளது. இது ஒரு நலன்புரி அரசாங்கத்தின் வெளிப்பாடாகும்.

இலங்கையில் அரசாங்கங்களின் செயற்பாடுகள் தேர்தலை மையப்படுத்தியதாக சுதந்திரம் தொடக்கம் இன்று வரை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. சுகாதாரம், கல்வி என பெரும்பாலான விடயங்கள் இலவசமாகவே வழங்கப்படுகின்றன. இவற்றையெல்லாம் முற்றிலும் இலவசமாக வழங்குகின்ற நாடுகளில் இலங்கை முன்னணியில் திகழ்கின்றது. இவை அரச மீண்டெழு செலவினங்களை தொடர்ச்சியாக அதிகரிக்கச் செயவதுடன் வரவு-செலவுத்திட்ட பற்றாக்குறையை நீண்ட காலத்துக்கு அப்படியே வைத்திருக்கத் தூண்டியும் வருகின்றன.

இலங்கை மக்களின் உணவு மற்றும் சேவைப் பொருட்களின் நுகர்வுப் பழக்கம் மற்றும் கடன் நுகர்வும் கூட வித்தியாசமான கோணத்தில்தான் காணப்படுகின்றன. ஏறக்குறைய கடன் மற்றும் நுண்நிதி இலவசம் என்பதாகவே மக்கள் நம்புகின்றனர். அத்தோடு, வெளிநாட்டு உற்பத்திகளின் மோகம் காரணமாக மக்கள் உள்நாட்டு உற்பத்தி நுகர்வில் பின்வாங்குகின்றனர். இந்த நுகர்வுப் பழக்கம் மாற்றமடைகின்ற போதுதான் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கும்.

கடந்த அரசாங்கத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள் சகாய விலையில் கொடுக்கப்பட்ட அதேநேரத்தில், ஏராளமான பஸ்களையும் அரசு இறக்குமதி செய்திருந்தது. இதனால், பஸ்களில் பிரயாணிகள் பற்றாக்குறை ஏற்பட்டதுடன் போக்குவரத்து சபை நஷ்டத்தை எதிர்கொண்டது. இது அரசாங்கத்தின் ஏற்றத்தாழ்வான அபிவிருத்தித் திட்டத்தின் மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

யுத்தத்தின் பின்னர் வாகனக் கொள்வனவுக்கு குத்தகை பெறும் வசதி விரிவாக்கப்பட்டது. கடந்த காலங்களில் வாகனத்தின் பெறுமதியில் 70 வீதம் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனை இருந்தது. ஆனால், அத்தொகை இப்போது 30 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் வாகனக் கொள்வனவு அதிகரித்தது மட்டுமல்லாமல் விபத்துக்களும் படுவேகமாக அதிகரித்துள்ளன. இது மருத்துவச் செலவை அரசாங்கத்துக்கு பலமடங்கு அதிகப்படுத்தியுள்ளது. வாகனங்களைப் பதிவதன் மூலம் அரசாங்கத்துக்கு கிடைக்கும் வருமானம் மிகக் குறைவாகும். ஆனால், விபத்தினால் அரசாங்கத்துக்கு ஏற்படும் மருத்துவச் செலவு பன்மடங்காகும். வாகன இறக்குமதிக்கும் எரிபொருள் இறக்குமதிக்குமான பெருமளவு அந்நியச் செலாவணியும் நாட்டைவிட்டு வெளியேறி வருகின்றது.

இலங்கையில் அண்மைக்காலம் வரை தங்கியிருப்புப் பொருளாதார முறையே காணப்பட்டது. அதாவது முதல் விளைவுப் பொருட்களில் குறிப்பாக, ஐரோப்பியர் அறிமுகப்படுத்திய தோட்டத்துறையிலும் அது சார்ந்த உப உற்பத்தி ஏற்றுமதியிலுமே தங்கியிருந்தோம். இலங்கையில் 1977 ஆம் ஆண்டு திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் உற்பத்தித் துறை, கைத்தொழில் துறையென இலங்கையின் பொருளாதார முறைமை சிறு மாற்றத்திற்குட்பட்டது. ஆனால், இத்துறைகள் போதிய விரிவாக்கத்தினை அடையவில்லை. எனினும், இப்பொழுதும் சேவைத் துறையே இலங்கையில் முன்னிலை வகிக்கிறது.

➡14

> **இலங்கை பெற்ற கடனைத் திருப்பிக் கொடுப்பதற்காக அல்லது அதற்கான வட்டியினை திருப்பிச் செலுத்துவதற்காக மீண்டும் மீண்டும் கடன் படுகின்ற (படுகடன் பொறி) நிலைமைக்கு இன்று அரசு தள்ளப்பட்டுள்ளது. இதனால் மொத்த உள்நாட்டு உற்பத்தியும் வீழ்ச்சியடைந்துள்ளது. தென் ஐரோப்பிய நாடான கிரீஸ் நாடும் இவ்வாறே படுகடனால் வீழ்ச்சியடைந்தது.**

## இலங்கையிலிருந்து கஞ்சா ஏற்றுமதி செய்யத் திட்டம்



இலங்கையில் கஞ்சாச் செடிகளை வளர்த்து, மேற்கத்தேய நாடுகளின் மூலிகை மருத்துவ உற்பத்திகளுக்காக ஏற்றுமதி செய்யும் யோசனையொன்று முன்வைக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். இதன் பிரகாரம் கஞ்சாச் செடிகளை வளர்த்து ஏற்றுமதி செய்ய திட்டமிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். இலங்கை ஆயுர்வேத கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட புதிய மூலிகை மருந்து உற்பத்திகளை அறிமுகப்படுத்தும் நிகழ்வு, அண்மையில் கொழும்பு வோட்டர்ஸ் எஜ் ஹோட்டலில் இடம்பெற்றது. இதன்போது கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

## இலங்கையில் எயிட்ஸ்: ஆண்களே அதிகம் பாதிப்பு




இவ்வருடத்தின் முதல் மூன்று மாதக் காலப்பகுதியில் மாத்திரம், எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளான 68 பேர் இனங்காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன் பிரகாரம், இலங்கையில், எயிட்ஸ் தொற்றுக்கு இலக்காகியுள்ளவர்களின் எண்ணிக்கை 2,377 ஆக அதிகரித்துள்ளதாக தேசிய பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் ஒழிப்பு வேலைத்திட்டம் தெரிவித்துள்ளது. இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்ட எயிட்ஸ் நோயாளர்களில், ஆண்களே அதிகம் என்று தெரிவித்த மேற்படி அமைப்பின் விசேட வைத்திய நிபுணர் டாக்டர் ஜீ.வீரசிங்க, இந்தத் தொற்று ஏற்பட்டுள்ள ஆண்களில் அதிகமானோர் சம பாலுறவாளர்களாகக் காணப்படுகின்றனர் என்றும் கூறினார்.

## தகவல் வழங்கினால் பணப்பரிசு



சிறுத்தைகளைக் கொல்பவர்கள் தொடர்பில் தகவல் வழங்குவோருக்கு, 10,000 ரூபாய் பணப் பரிசு வழங்கப்படும் என அகில இலங்கை வனவிலங்குகள் பாதுகாப்பு அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது. இலங்கையில் அழிவடைந்து வரும் உயிரினங்களில் ஒன்றாக சிறுத்தைகள் காணப்படுகின்றன. சிறுத்தைகளைப் பாதுகாப்பது தொடர்பில் நாட்டின் வனவிலங்குகள் பாதுகாப்பு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய, சிறுத்தைகளைக் கொலை செய்வோர் மற்றும் துன்புறுத்துவோர் தொடர்பில் 0716868303 அல்லது 0718114492 ஆகிய கைத்தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புக் கொண்டு அறிவிக்க முடியும் என்று அச்சங்கம் கூறியுள்ளது.

## உயர்தரப் பரீட்சையை ஏப்ரலுக்கு மாற்ற நடவடிக்கை

க.பொ.த. உயர்தரப் பரீட்சையை எதிர்வரும் காலங்களில் ஏப்ரல் மாதத்தில் நடத்துவதற்கான கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் மொஹான் லால் கிரேரு தெரிவித்துள்ளார். ஏப்ரல் மாதத்தில் பரீட்சையை நடாத்தினால், ஜனவரி மாதத்தில் புதிய மாணவர்களை பல்கலைக்கழகத்துக்கு உள்வாங்க முடியுமாகின்றது. தற்பொழுது நடைபெறும் முறையில் ஆகஸ்ட் மாதம் பரீட்சை நடைபெற்றால், பல்கலைக்கழக அனுமதிக்காக மாணவர்கள் ஒரு வருடமும் எட்டு மாதங்களும் காத்திருக்க வேண்டியுள்ளது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் தேசம்

மலர்: 15 இதழ்: 10 மே 15 - 31

77. ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, கொழும்பு- 09. இலங்கை

தொலைபேசி: 0112 689324 / 0777 412561

பெக்ஸ்: 011 2686030, 0112698771

மின்னஞ்சல்: engalthesamnews@gmail.com


## வாக்காளர்கள் வெட்கப்பட வேண்டும்!

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தனிப்பட்ட பாதுகாப்புக்கு வழங்கப்பட்டிருந்த இராணுவத்தினருக்குப் பதிலாக பொலிஸ் அதிகாரிகளை நியமித்தமைக்கு இணைந்த எதிர்க்கட்சி எனக் கூறப்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் கிளப்பிய எதிர்ப்பின் விளைவாக பாரிய கைகலப்புக்கள் மூண்டதை சகல ஊடகங்களும் காட்சிப்படுத்தின. அரசாங்கத்தை எதிர்ப்பதற்கு எப்போது சந்தர்ப்பம் வரும் என்று எதிர்பார்த்திருக்கும் குழுவினருக்கு மஹிந்த ராஜபக்ஷ நல்லதொரு வாய்ப்பாக அமைந்து விடுகின்றார். இலங்கைப் பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் இப்போது நடக்கும் அநேகமான அரசியல் நடவடிக்கைகளின் கதாநாயகனாக மஹிந்த ராஜபக்ஷ திகழ்கிறார் என்றால் பிழையாகாது.

பாராளுமன்றத்தில் அரசாங்கக் கட்சியும் எதிர்க்கட்சியும் அடிதடியில் ஈடுபடுவதன் மூலம் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியுமா? இதனைவிட சாத்வீகமான ஜனநாயக வழிகள் கிடையாதா என்ற கேள்விகள் பொதுமக்களிடத்தே எழுப்பப்படுகிறது. இந்த நாட்டின் பொலிஸார் மீது நம்பிக்கையில்லையா? அதுவும் சிவில் யுத்தத்தின்போது உயிரைப் பணயம் வைத்துப் போராடிய STF எனப்படும் பொலிஸ் விஷேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பு பலவீனமானதா? என்றெல்லாம் கேட்கத் தோன்றுகின்றது. இந்த விடயங்களைப் பார்க்கும்போது இது பாதுகாப்புக் குறைப்பு என்பதைவிட அரசியல் பிரச்சினை என்பது தெளிவாகத் தெரிகிறது.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவுக்கும் பொலிஸ் பாதுகாப்பே வழங்கப்பட்டிருப்பதாகவும் இது மஹிந்தவுக்கு மட்டுமான ஒரு தீர்மானம் அல்ல எனவும் அரசாங்கம் விளக்கமளித்துள்ளது. அன்றியும் அது பற்றி சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடவும் தயார் என்றும் அரசாங்கத் தரப்பில் இருந்து வந்த அறிக்கைகள் கூறுகின்றன.

மஹிந்த ராஜபக்ஷ நாடு முழுவதும் பிரயாணம் செய்து கட்சி ஆதரவாளர்களைச் சந்திப்பதைத் தடுக்கும் நோக்கில் அவரை வீட்டுக்குள் முடக்கி வைக்கவே இப்பாதுகாப்புக் குறைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவரின் ஆதரவாளர்கள் கூறுகின்றனர். சிலவேளை அதிலும் உண்மை இருக்கக் கூடும். ஆனால், அதனைப் பெற்றுக் கொள்வதற்கு உள்ள ஒரே வழி வன்முறையா என்பதே இங்கு பிரச்சினை.

மக்கள் தங்களுடைய பெறுமதியான வாக்குகளின் மூலம் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்து அனுப்பும் உறுப்பினர்கள், பல்வேறு சலுகைகளை அனுபவித்துக் கொண்டு, சுங்க வரிச்சலுகையுள்ள சொகுசு வாகனங்களைப் பெற்றுக் கொண்டு தமது பிரச்சினைகளைப் பாராளுமன்றத்தில் பேசாதிருப்பது ஒரு புறமிருக்க தொகுதி மக்களின் கௌரவத்தைப் பாதுகாக்கும் நோக்கிலாவது பண்பாடாக நடந்து கொள்ள வேண்டாமா என்று பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர். உலகமே நகைக்கும் விதத்தில் பாராளுமன்ற அமர்வின்போதே அடிபிடிப்படுவது எவ்வளவு அசிங்கமான விடயம் என்று ஏன் அவர்கள் சிந்திப்பதில்லை என்ற அங்கலாய்ப்புக்கள் எழுந்த வண்ணமேயுள்ளன. வாக்களித்த குற்றத்திற்காக வெட்கித் தலை குனிய வேண்டிய நிலைக்கு வாக்காளர்களான பொதுமக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

பாராளுமன்ற அமர்வுகளுக்கு மக்களின் வரிப்பணத்திலிருந்து பெருந்தொகையான பணம் செலவிடப்படுகின்றது. ஊழியர் சம்பளம், பராமரிப்பு, உபசரணை என ஒவ்வொரு நிமிடத்துக்குமான செலவு ஆயிரக்கணக்கில் என்பதை யாவரும் அறிவர். அப்படியிருக்கும்போது பாராளுமன்ற அங்கத்தவர்கள் கைகலப்பில் ஈடுபடுவதும் ஒருவரையொருவர் தூற்றிக் கொள்வதும் பொதுமக்களால் சகித்துக் கொள்ள முடியாத விடயங்களாகும். எதிர்காலத் தலைவர்களாக வரவுள்ள பாடசாலை மாணவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே இப்படி நடப்பது மிகப் பெரிய கேவலம்.

இனி வாக்களிக்கும்போதாவது யாருக்கு வாக்களிக்கிறோம். அவர்களது நடத்தைகள், ஒழுக்க மாண்புகள், பண்பாடுகள் எப்படிப்பட்டது என்பதை புத்திசாலிகளான வாக்காளப் பொதுமக்கள் யோசிப்பார்களா?

# தேச நிர்மாணப் பணியில் முஸ்லிம்களின் வகிபாகம்


அஷ்ஷெய்க் எம்.எச்.எம். உஸைர் (இஸ்லாஹி)

சிரேஷ்ட விரிவுரையாளர்,

இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி


தேச நிர்மாணப் பணியில் முஸ்லிம்களின் பங்களிப்பானது அவர்களின் இருப்பை அடிப்படையாகக் கொண்டும் அவர்களது வாழ்க்கையின் இலக்கை அடிப்படையாகக் கொண்டும் நோக்கப்பட முடியும்.

ஒரு மனிதனது அல்லது சமூகத்தினது எல்லாத் தேவைகளைவிடவும் முதன்மைத் தேவையாக இருப்பு இருக்கிறது. எப்பொழுது பௌதிக ரீதியான இருப்பு சாத்தியப்படவில்லையோ அதற்குப் பின்னால் இயங்குதல் ஒன்று இருப்பதில்லை. அடுத்த அம்சம், முஸ்லிம் என்ற அடிப்படையில் அவனுக்கென்ற வாழ்க்கை வழிகாட்டல்களும் ஒரு செல்நெறியும் இருக்கின்றன. இவற்றின் அடிப்படையில் ஒரு முஸ்லிம் தனது சூற்றுச் சூழலினதும் அதில் வாழும் மக்கள் கூட்டத்தினதும் ஒரு கூறாகவும் இருக்கிறான். தேச நிர்மாணப் பணிகளில் ஒரு நாட்டுக்காக செய்கின்ற வேலை இந்த இரண்டு அடிப்படைகளையும் வைத்தே நோக்கப்பட வேண்டும்.

தாய் நாட்டை நேசிப்பது அடிப்படையான விடயமாகும். நாங்கள் வாழுகின்ற நாட்டையும் அதில் உள்ளவர்களையும் நேசிக்கின்றபோது அந்த நாட்டுக்கு செய்ய வேண்டிய கடமைகளை எங்களால் சரியாகச் செய்ய முடியும். குறிப்பாக, எமது நாடு பல்லின சமூகம் வாழ்கின்ற அரசியல் யாப்பைக் கொண்ட ஒரு நாடு. இந்த நாடு ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் அங்கீகரித்திருக்கிறது. ஒரு கருத்தை ஏற்றுக்கொள்வதற்கும் அதன்படி வாழ்வதற்கும் உரிமை தந்த ஒரு நாட்டில் வாழ்கின்றோம் என்றவகையில் இலங்கை நாட்டை நேசிப்பது எங்களது முதல் பணியாகும்.

ஒரு சமூகம் மூடுண்டு வாழ்வதற்கு காரணமாகக் குறிப்பிடப்படுவது தனித்துவம் காத்தல் என்ற விடயமாகும். எங்களுடைய நாடு, நாட்டிலுள்ள மதங்கள், அந்த மதங்களின் கலாசாரம் எது என்பதையெல்லாம் புரிந்துகொள்ளாது தனித்துவம் காத்தல் என்ற போர்வையில் மார்க்கத்தில் இல்லாத கலாசாரத்தையும் மார்க்கமாக நினைத்து அதிலே இறுக்கமான நிலைக்குச் செல்கிறபோது இந்த சமூகம் மூடுண்ட நிலையை அடைகிறது. இதனால் அந்த சமூகம் தான் வாழுகின்ற நாட்டோடு உள்ள உறவிலிருந்து விலகிவிடுகிறது. எனவே, நாங்கள் இந்த மூடுண்ட நிலையிலிருந்து வெளியே வந்து நாட்டோடு உறவாடுவதும் கலந்துரையாடுவதும் மிக முக்கியமானவை.

நாங்கள் வாழுகின்ற நாட்டுக்கு பங்களிப்புச் செய்து நாமும் இந்த நாட்டின் பங்காளர்கள் என்பதை இந்த நாடும் மக்களும் புரிந்து கொள்ளும் வகையிலே அடையாளப்படுத்தப்பட வேண்டும். இந்த நாட்டில் இருக்கின்ற அனைத்து நேர்மையான சக்திகளோடும் இணைந்து நாங்கள் பங்காற்ற வேண்டும். இந்த நாட்டின் அரசியலில்... பொருளாதாரத்தில்... கல்வியில்...விவசாயத்தில்... சுகாதாரத்தில்... இயற்கை வளங்களைப் பாதுகாப்பதில்... என்று எல்லாத் துறைகளிலும் முழுமையான பங்களிப்பை வழங்க வேண்டிய கடப்பாடு எமக்கு இருக்கிறது.

**ஒரு நாட்டின் மைய நீரோட்டத்தை விட்டுவிட்டு பிரிந்து தனிமைப்பட்டு வாழ்கின்றபோது அவ்வாறு வாழ்கின்ற சமூகங்களும் இனங்களும் தனிமைப்படுகின்ற நிலை ஏற்படும். நாட்டின் அரசியல், பொருளாதாரம், அந்த நாட்டின் வளர்ச்சி என்ற விடயங்களை விட்டு ஒதுங்கி தனிமைப்பட்டு வாழ்கின்றபோது அந்த சமூகம் எல்லோராலும் அந்நியப்படுத்தப்படும் நிலை உருவாகும்.**

தேசத்தோடு உறவாடுதல் எங்களது அடுத்த பணியாகும்.

பல்லின சமூகம் உள்ள ஒரு நாட்டில் வாழுகின்றபோது, இனப்பிரச்சினைகள், குழுக்களுக்கிடையிலான மோதல்கள் உருவாவதற்கு வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. ஒரு நாட்டின் மைய நீரோட்டத்தை விட்டுவிட்டு பிரிந்து தனிமைப்பட்டு வாழ்கின்றபோது அவ்வாறு வாழ்கின்ற சமூகங்களும் இனங்களும் தனிமைப்படுகின்ற நிலை ஏற்படும். நாட்டின் அரசியல், பொருளாதாரம், அந்த நாட்டின் வளர்ச்சி என்ற விடயங்களை விட்டு ஒதுங்கி தனிமைப்பட்டு வாழ்கின்றபோது அந்த சமூகம் எல்லோராலும் அந்நியப்படுத்தப்படும் நிலை உருவாகும். இந்த நிலையில் அந்த சமூகம் மூடுண்ட சமூகமாக, நாட்டோடும் நாட்டு மக்களோடும் தொடர்பில்லாத சமூகமாக மாறிவிடும்.

முஸ்லிம் சமூகத்தின் தனித்துவமான ஒரு பண்பாக கருணை இருக்கிறது. முஸ்லிம் சமூகம் இந்த நாட்டையும் இந்த நாட்டில் உள்ளவர்களையும் கருணையோடு நோக்க வேண்டும். எங்களை கருணையுள்ள மனிதர்களாக மக்களும் இந்த நாடும் அடையாளப்படுத்த வேண்டும். முஸ்லிம் தனி மனிதர்கள், முஸ்லிம் குடும்பங்கள், முஸ்லிம் இயக்கங்கள், பள்ளிவாசல்கள், முஸ்லிம் கட்சிகள், இந்த நாட்டில் இருப்பது நன்மையின் ஊற்றுக்கள் என இந்த நாட்டிலுள்ள மக்கள் புரிந்துகொள்ளும் அடிப்படையில் செயல்பட வேண்டும். பௌத்த, தமிழ், கிறிஸ்தவ சமூகங்கள் கருணைக்கு முன்னுதாரணமாக எம்மைக் காண வேண்டும். அதற்கான முன்னுதாரண புருஷர்களாக முஸ்லிம் தலைமைகளும் முஸ்லிம் அரசியல் கட்சிகளும் முஸ்லிம் அமைப்புக்களும் அனைத்து நிறுவனங்களும் தனிமனிதர்களும் மாறவேண்டிய தேவை மேலெழுந்துள்ளது.

➡ 16


**எங்கள் தேசம் சந்தா விபரம்**

| | | | |
|---|---|---|---|
| உள்நாடு | தனிப்பிரதி: 40.00<br>வருட சந்தா: 1440.00<br>ஆறு மாதங்கள்: 720.00 | வெளிநாடு | இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, மலேஷியா, சிங்கப்பூர்: 3840.00<br>மத்திய கிழக்கு நாடுகள்: 3990.00<br>அவுஸ்திரேலியா, தென்கொரியா: 4940.00<br>இங்கிலாந்து: 5990.00, அமெரிக்கா, கனடா: 7140.00, ஜப்பான்: 5040.00 |

எங்கள் தேசத்துக்கு காசுக்கட்டளை அனுப்ப விரும்புபவர்கள்: காசுக்கட்டளை பெறுவோர், Engal Thesam தபால் நிலையம் Dematagoda எனவும் குறிப்பிட்டு அனுப்பவும். முகவரி: 77, Dematagoda Road, Colombo - 09.

Account Name: SLJEI | Bank Account No. BOC: 372132 | Commercial Bank: 1320009182

தொடர்புகளுக்கு: 077 2992220


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகத் தமிழ்த் தேசிய முன்னணி:

## தமிழ் மக்களுக்கு சாதகமா?

## த.தே.கூ. சமாளிக்குமா?



**உரலுக்கு ஒரு பக்க இடி; மத்தளத்துக்கு இருபக்க அடி என்பது போல் கூட்டமைப்பு தன்னைச் சுற்றியிருக்கின்ற எதிர்ப்புக்களையும் சவால்களையும் சமாளிக்கின்ற அதேவேளை தன் முன்னே தோன்றும் எதிரிகளைப் பலத்துடனும் ராஜதந்திரத்துடனும் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.**

திருமலை நவம்

**வெண்ணெய்** திரண்டு வருகிற வேளையில் தாழி உடைந்த கதையைப் போல ஆகிவிட்டது தமிழ் மக்கள் வரலாறு. இதை எடுத்துக்காட்டுவது போல்தான் அண்மைக்கால அரசியல் நிகழ்வுகள் நகர்ந்து கொண்டிருக்கின்றன.

ஆயுதப் போராட்டம் அஸ்தமித்த பின் தமிழ் மக்கள் தங்கள் உரிமைப் போராட்டத்தின் உத்தியோகபூர்வமான போராட்டப் பொறுப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் ஒப்படைத்துள்ள நிலையில், அது ஜனநாயகப் போராட்டங்களுக்கு தலைமை தாங்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டது என்ற உண்மை எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விடயம்.

அத்தகைய பொறுப்பை ஏற்றுச் செயற்பட்டு வரும் த.தே.கூட்டமைப்புக்கு நாலா திசைகளிலிருந்தும் சவால்கள் நாளுக்கு நாள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதற்கு இன்னோர் உதாரணம்தான் இவ்வாரம் 10 கட்சிகள் ஒன்றிணைந்து உருவாக்கியிருக்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசிய முன்னணி என்ற கட்சியின் தோற்றமாகும்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வி. ஆனந்த சங்கரியின் முன்னெடுப்பில் 10 கட்சிகள் ஒன்றிணைந்து மேற்படி முன்னணி உருவாக்கப்பட்டிருக்கிறது.

ஆனந்த சங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி, பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி., ந. குமரகுருபரனை தலைவராகக் கொண்ட ஜனநாயக மக்கள் காங்கிரஸ், ப. உதயராசா தலைமையிலான சிறிரெலோ, இரா. பிரபாகரனை தலைவராகக் கொண்ட ஈழ மக்கள் புரட்சிகர முன்னணி மற்றும் ஈழ விடுதலை அமைப்பு, தமிழ் மக்கள் அமைப்பு, ஜனநாயகப் போராளிகள் கட்சி, சர்வதேச இந்து குருமார் அமைப்பு, ஜனநாயக மறுசீரமைப்பு இயக்கம் ஆகியன இம்முன்னணியில் இணைந்து கொண்டிருக்கின்றன.

இக்கட்சியின் உதயம் பற்றி தமிழ் மக்கள் எவ்வகை அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள் என்ற ஆய்வை அல்லது மதிப்பீட்டை விட, இக்கட்சியின் உதயமானது தமிழ் மக்களுக்கு சாதகமான சூழ்நிலையொன்றை உருவாக்க முடியுமா என்பதே இன்றுள்ள கேள்வியாகும்.

தந்தை செல்வா காலத்தில் இலங்கை தமிழரசுக் கட்சி உருவாக்கப்பட்ட வேளை, இருந்த சூழ்நிலை அல்லது போராட்ட அமைப்புக்கள் உடைந்து பலமுனை இயக்கங்களாக உருவெடுத்த சூழ்நிலை ஆகியவற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்ற போது, இன்றைய காலச் சூழ்நிலை இத்தகையதொரு கட்சியின் தோற்றத்தை கைநீட்டி வரவேற்கும் என்பது சந்தேகத்திற்குரியது.

ஒன்றின் மீதுள்ள அதிருப்திகள், விமர்சனங்கள், நம்பிக்கையீனங்கள், தேவைகள் இன்னொன்றைத் தோற்றுவிக்க நதிமூலமாகின்றன. அவ்வகையில் இருக்கின்ற அல்லது தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சிகள் மீது மக்கள் கொண்ட அவநம்பிக்கைகள் காரணமாக இப்புதிய அமைப்பு தோற்றுவிக்கப்பட்டதா; இல்லை, அக்கட்சியை தலைமை தாங்கி நடத்திச் செல்கின்ற தலைமைப் பீடங்கள் மீது ஏற்பட்ட வெறுப்புணர்ச்சி காரணமாக இந்த உருவாக்கம் பிறப்பெடுத்ததா என்பதே கேள்வி.

த.தே.கூட்டமைப்பு யுத்த முடிவுக்குப் பின் தமிழ் மக்களின் நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு தீர்வைத் தேடும் முயற்சிகளை பல்வேறு வழிமுறைகளில் முன்னெடுத்துச் சென்றுள்ளது.

யுத்தக் குற்றம், மனித உரிமை மீறல் என்ற விவகாரங்களை மனித உரிமைப் பேரவைக்கு கொண்டு செல்வதற்கு அது எடுத்த தீவிர முயற்சிகள், தீர்மானத்தைக் கொண்டுவர எடுக்கப்பட்ட போராட்டங்கள், ராஜதந்திரப் போராட்டம் என்ற வடிவில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை சர்வதேச மயப்படுத்த த.தே.கூட்டமைப்பு மேற்கொண்டுவந்த தந்திரோபாயங்கள் என்பனவெல்லாம் ஆயுதப் பலத்திற்கு அப்பால் மேற்கொள்ளப்பட்ட பகிரங்கப் பிரயத்தனங்களாகும்.

மஹிந்த ராஜபக்ஷ அரசு வெளிப்படையாக, மறைமுகமாக தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொண்ட அரசியல், பொருளாதார, சமூக, கலாசார கெடுமானங்கள் பற்றிப் பட்டியல் படுத்துவது என்பது எளிய காரியமல்ல. காணாமல் ஆக்கப்பட்டோர், கடத்தப்பட்டவர்கள், காணி அபகரிப்பு, இன சுத்திகரிப்பு, இனக் குடியேற்றங்கள், இராணுவ மயமாக்கல் பௌத்த விகாரை நிர்மாணம், ஆலய அபகரிப்புக்கள் என ஆயிரம் ஆயிரம் அட்டூழியங்கள் நிகழ்ந்த வேளைகளிலெல்லாம் அவற்றை அம்பலப்படுத்தியது மாத்திரமல்ல; அதற்கு எதிராகப் போராட்டங்கள் நடத்தியவர்கள், குரல் கொடுத்தவர்கள் த.தே.கூட்டமைப்பினர்.

இவை அனைத்தினதும் ஓர் எல்லை மாற்றந்தான் கடந்த ஜனவரி 8 ஆம் திகதி கொண்டுவரப்பட்ட ஆட்சி மாற்றமாகும். இதன் மூல மந்திரவாதியாக இருந்தவர்கள் கூட்டமைப்பின் மூத்த தலைவர்களாகும்.

எல்லாவற்றுக்கும் மேலாக நல்லாட்சி அரசாங்கமொன்றை உருவாக்கி அந்த அரசாங்கத்தின் மீது கொண்ட நம்பிக்கையின் அடிப்படையில், 2016 ஆம் ஆண்டுக்கு முன்பு தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு பெறப்படும் என்ற உறுதிமொழி மீது தமிழ் மக்கள் நம்பிக்கை கொண்டிருக்கும் காலச் சூழ்நிலையில்தான் ஜனநாயக தமிழ்த் தேசிய முன்னணி உருவாக்கப்பட்டிருக்கிறது.

ஏலவே கூட்டமைப்புக்குள் இருக்கின்ற முரண்பாடுகள், அதற்கு வெளியே உண்டாக்கப்பட்டுவரும் சவால்கள், வட மாகாண சபையின் முன்னெடுப்புக்கள் என்ற பல்வேறு போர்களுக்கு மத்தியில்தான் த.தே. கூட்டமைப்பானது தன்னைச் சுதாகரித்துக்கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. உரலுக்கு ஒரு பக்க இடி; மத்தளத்துக்கு இருபக்க அடி என்பது போல் கூட்டமைப்பு தன்னைச் சுற்றியிருக்கின்ற எதிர்ப்புக்களையும் சவால்களையும் சமாளிக்கின்ற அதேவேளை தன் முன்னே தோன்றும் எதிரிகளைப் பலத்துடனும் ராஜதந்திரத்துடனும் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

உருவாக்கப்பட்டிருக்கும் தேசிய முன்னணி வெண்ணெய் திரண்டு வருகின்ற நேரத்தில் தாழி உடைந்த கதையாக மாறி விடக்கூடாது என்பதுதான் இன்று தமிழ் மக்களின் கனதியான எதிர்பார்ப்பாகும். கிடைக்கப் பெற்ற எல்லாச் சந்தர்ப்பங்களையும் இவ்வாறே இழந்துள்ளோம் என்பதும் எமக்கு வரலாறு கற்றுத்தரும் பாடமாகும்.

குறிப்பாகச் சொல்லப்போனால், மேற்படி முன்னணியில் இணைந்துள்ளவர்கள் நீண்டகாலம் ஆளும் அரச தரப்பினரோடு ஒட்டியுறவாடியவர்கள். அந்த அரசாங்கங்களில் அமைச்சர்களாக இருந்தவர்கள், பல்வேறு சலுகைகளை தமதாக்கிக் கொண்டவர்கள் என்ற உச்ச விமர்சனங்கள் இருக்கத்தான் செய்கின்றன.

இவை ஒருபுறம் காழ்ப்புணர்ச்சியால் சொல்லப்படும் விமர்சனங்களாக இருந்தாலும் யாதார்த்தத்தை நோக்குகின்றபோது கூட்டமைப்பின் இலக்கை அடைய விடாமல் அதை சின்னாபின்னப்படுத்தும் நோக்கில் செயற்பட முனைவது எந்தளவுக்கு நன்மை பயக்கும் என்பதைத் தீர்க்கமாக ஆராயவேண்டிய நிலைக்கு தமிழ் மக்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

கடந்தகால அனுபவங்கள் தமக்கு எதைப் புகட்டி நிற்கின்றன என்பது அறியப்படாத ஒரு விடயமல்ல. ஆயுதப் போரின் அனுபவங்கள் எமக்கு ஒரு வகைப் பாடத்தைக் கற்றுத் தந்திருக்கின்றன. தோற்றுப்போன சமூகமென்ற அடையாளத்தை அவை இட்டுச் சென்றிருக்கின்றன. தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகளும் முன்னெடுப்புகளும் தோற்றுப்போன அத்தியாயத்தை மீண்டுமொரு முறை எழுத வைக்காமல், எல்லோரும் ஒன்றிணைந்து தமிழ் மக்களின் நீண்டகாலப் போராட்டத்தை வென்றெடுக்க துணை நிற்க வேண்டுமென்பதே தமிழ் மக்களின் இன்றைய எதிர்பார்ப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சோஷலிச முன்னணிக்கு பதிலாக புதிய முன்னணி

சிங்களத்தில்: மொஹான் சமரநாயக்க
(ஞாயிறு லங்காதீப)
தமிழில்: எம்.எச்.எம். நியாஸ்

கடந்த சில மாதங்களுக்கு முன் ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் கியூபா விஜயம் பற்றி, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகங்களில் விஷேட கவனம் செலுத்தப்பட்டது. தற்கால உலக அமைப்பில் காணப்படும் அதிகார சமநிலையில் அடிப்படை மாற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதையும் ஊடகங்கள் சுட்டிக் காட்டியுள்ளன. வெளிநாட்டு விவகார ஆய்வாளர் மொஹான் சமரநாயக்க அது பற்றி நடத்திய ஆய்வொன்று கீழே தரப்பட்டுள்ளது.

தற்போதைய உலக அதிகார சமநிலையின் தன்மையையும் அதன் அண்மைக் கால பரிணாமங்களையும் விளங்கிக்கொள்ள வேண்டுமானால் நாம் உலகின் இயக்கம் பற்றி அறிந்துகொள்ள வேண்டும். அது தொடர்பாக வரலாற்று ஆய்வொன்றை நடத்துவோமானால் ஒவ்வொரு காலகட்டத்திலும் உலக இயக்கம் ஒவ்வொரு வடிவத்தைக் கொண்டிருந்தது என்பதையும் நாம் அறிந்து கொள்ள முடியும்.

மனித சமூகத்தில் தொழில் புரட்சிக்குப் பின் கருத்துப் பரிமாற்றம் மற்றும் கருத்து மோதல்கள் ஏற்பட்ட பின்தான் குறிப்பிட்ட ஒரு அமைப்பைக் கொண்ட உலகமொன்றை எம்மால் காண முடிந்தது.

அதற்கு முன்புள்ள யுகங்களில் உலகில் பல்வேறு பகுதிகளில், பல்வேறு தலைமைத்துவங்கள் உருவாகி வியாபித்து இறுதியில் அவை இருந்த இடம் தெரியாது அழிந்து விட்டன. உதாரணமாக, மன்னர் அலெக்சாந்தரின் மெஸிடோனியா மற்றும் உரோம ஏகாதிபத்திய நாடுகளைக் கூற முடியும். அந்த ஏகாதிபத்திய நாடுகளில், முறையானதோர் அரசியல் மற்றும் பொருளாதாரக் கொள்கையைக் காண்பதற்கு பதிலாக அந்த நாடுகளை யார் உருவாக்கினார்களோ அவர்களது ஏகாதிபத்திய சிந்தனையே ஆட்சி செலுத்தியதை காண முடியும்.

எனினும், உலகம் முதலாளித்துவக் கொள்கைக்கு உட்பட்ட பின் பல நாடுகள் பொருளாதாரத்தில் உயர்வடைந்தன. அதேவேளை, தம்மை எவரும் அசைக்க முடியாது என்று தலைக்கனம் பிடித்து தமது இராணுவத்தையும் மிகப் பலமாகக் கட்டியெழுப்பிக் கொண்டன. அதன் இறுதி விளைவாக, உலக நாடுகளை ஆக்கிரமிப்பதற்கும் அதீத பிரயத்தனம் ஒன்றை அவை மேற்கொண்டன. மேற்கத்தேய ஐரோப்பிய நாடுகள் சகல துறைகளிலும் தமது நாடுகளை அபிவிருத்தி செய்த வண்ணம் ஏனைய நாடுகளைக் கபளீகரம் செய்யும் முயற்சிகளில் அன்று முதல் இன்றுவரை ஈடுபட்டு வருகின்றன.

அவ்வாறான முதலாளித்துவ நாடுகள் உலக அரசியல், பொருளாதார, சமூக, கலாசார மற்றும் இராணுவ ரீதியிலான அனைத்துத் துறைகளிலும் ஆதிக்கம் செலுத்துவதற்கான முயற்சிகளில் அயராது ஈடுபட்டு வருகின்றன. அது மட்டுமன்றி, தனி மனிதனது சிந்தனை, ஒழுக்கம், கண்ணோட்டம் ஆகியவற்றைத் தீர்மானிப்பதில் கூட அந்த நாடுகள் முனைப்புடன் இயங்கி வருகின்றன.

ஒரு காலகட்டத்தில் முழு உலகையும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்வதற்கு முன்னேற்றம் அடைந்த சில நாடுகள் மும்முரமாக முயற்சி செய்துள்ளன. அவற்றில் பிரிட்டன், பிரான்ஸ், பெல்ஜியம், ஸ்பெய்ன், போர்த்துக்கல், ஜேர்மனி, ரஷ்யா மற்றும் ஒல்லாந்து ஆகிய நாடுகள் முன்னணி வகித்தன. உலக நாடுகள், மேற்குறித்த நாடுகளின் பிடியில் இருந்துவந்த காலத்தில், அதிகார சமநிலையொன்று காணப்படவில்லை. மேற்படி பலம் வாய்ந்த நாடுகளின் நேரசூசிக்கு ஏற்ப ஏனைய நாடுகள் இயங்கிவந்தன.

எமது நாட்டில் எமக்குக் கிடைத்த அனுபவங்களை உற்று நோக்கும்போது, நாம் எந்த அளவில் ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்டோம் என்பது தெளிவாகிறது. 1815 முதல் இலங்கை பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் குடியேற்றத்திற்குட்பட்டிருந்தது. அந்தக் கால கட்டத்தில், இந் நாட்டின் நிர்வாகத்துறை, நீதித்துறை, கல்வி மற்றும் போக்குவரத்து ஆகிய அனைத்தும் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் தீர்மானங்களுக்கு ஏற்பவே இயங்கி வந்தன. அந்த வேளையில் காணப்பட்ட உலக அமைப்பின் சர்வதேச தொடர்புகள் "ஐரோப்பாவை மையமாகக் கொண்ட பல்முனை உலகக் கோலம்" என அறிமுகப்படுத்தப்பட்டது. சிறிது காலத்திற்குப் பின் அந்த கோலத்துக்குள்ளும் வெடிப்புக்களும் பிரச்சினைகளும் தலை தூக்கத் தொடங்கின. குறிப்பிட்ட அந்த அதிகார மையப்புள்ளிகளுக்கிடையில் மீண்டும் உலகைப்பங்குபோட்டுக்கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமையே அதற்கான காரணமாகும். அதன் விளைவாக அதுவரை காணப்பட்ட அதிகார சமநிலையில் மாற்றங்கள் இடம்பெற்றன.

எனினும், 19 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியிலும் சம்பிரதாய அதிகாரக் கேந்திரங்களுக்கு மேலதிகமாக இன்னும் சில ஏகாதிபத்தியவாதிகள் தோன்றினர். அது குறிப்பிடத்தக்க ஒரு மாற்றமாகும். அதாவது, ஆசிய பசுபிக் வலயத்திலிருந்து ஜப்பானும் ஐரோப்பாவிலிருந்து ஜேர்மனியும் அவ்வாறாக முன்னணிக்கு வந்த நாடுகளாகும். இத்தாலியும் ஓரளவு அந்த நிலையை அடைந்து கொண்டது. 1918 ஆம் ஆண்டு காலத்தில் ஏற்பட்ட உலக மகாயுத்தம் அதிகார சமநிலையில் ஏற்பட்ட அடிப்படையான மாற்றங்களுக்கு ஒரு முக்கிய காரணியாக இருந்தது. முதலாம் உலக மகா யுத்தத்தின் பின், சர்வதேச நாடுகளுக்கிடையிலான அதிகார சமநிலையில் மிகத் தெளிவான மாற்றங்களைக் காணக்கூடியதாக இருந்தது.

முதலாம் உலக மகா யுத்தத்தின்போது "ஒஸ்த்ரோ ஹங்கேரிய" ஏகாதிபத்தியம் தோல்வி கண்டது. மத்திய கிழக்கு வலயத்தில் இருந்த "உஸ்மானிய" துருக்கி கிலாபத்தும் தோல்வி கண்டது. எனினும், 17 ஆம், 18 ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட முதலாம் உலக மகா யுத்தத்தின் பின் மீண்டும் ஒரு தடவை ஐரோப்பிய ஏகாதிபத்தியம் தலைதூக்குவதைக் காண முடிந்தது. அதாவது பிரித்தானியா, பிரான்ஸ், ஒல்லாந்து ஆகிய பிரதான சக்திகளின் ஆதிபத்தியத்துடனான அதிகார சமநிலை மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது.

இதற்கிடையில் மற்றுமொரு விஷேடமான வரலாற்று ரீதியான வளர்ச்சியொன்றையும் காணக்கூடியதாக இருந்தது. அதாவது, ஐக்கிய அமெரிக்கா எனும் ஒரு நாடு, பொருளாதார மற்றும் இராணுவ பலத்துடன் மிக வேகமாக முண்டியடித்துக் கொண்டு முன்வரிசைக்கு வந்து நின்றது. முதலாம் உலக மகா யுத்தம் ஆரம்பிக்கப்படும் கால கட்டத்தில் அமெரிக்கா, சர்வதேச அரசியல் அரங்கில் மிக முக்கியமான சக்தியாகத் திகழ்ந்தது. அமெரிக்காவின் ஒத்துழைப்பின்றி, சர்வதேச மட்டத்திலான எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ள முடியாத நிலை காணப்பட்டது. அந்த யுத்தத்தின் பின் மீண்டும் அவ்வாறான பயங்கரமான உலக யுத்தமொன்று ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு 1919 இல் அனைத்து நாடுகளினதும் அமைப்பொன்றை ஏற்படுத்திய போதிலும் அமெரிக்கா மட்டும் அந்த அமைப்பில் உறுப்புரிமையைப் பெற்றுக் கொள்ள மறுத்துவிட்டது. அவ்வாறு உருவாக்கப்பட்ட அமைப்பும் குறுகிய காலத்துக்குள் செயலிழந்து விடுவதற்கும் அமெரிக்காவே அடிப்படைக் காரணியாக விளங்கியது.



**நட்புறவுடன் கலந்துரையாடல்களை நடத்தி, உலக நாடுகளுடன் கொடுக்கல் வாங்கல்களைச் செய்வதன் மூலம் படிப்படியாக உலக நாடுகளை விழுங்குவதே அவரது நோக்கமாகும். ஈரானின் அணு ஆயுத உற்பத்தி சம்பந்தமான பிரச்சினையில் ஒபாமா மேற்கொண்ட நடவடிக்கைகள் அதற்கான ஒரு நல்ல உதாரணமாகும். ஒபாமாவின் கியூபா விஜயம் அதற்கு மற்றுமோர் உதாரணமாகும்**

இவ்வாறாக, சர்வதேச அரசியலில் அமெரிக்கா தவிர்க்க முடியாத ஒரு சக்தியாக இயங்கியதை இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போது (1945) காணக்கூடியதாக இருந்தது. இந்த யுத்தத்தின்போது ஜேர்மனி, இத்தாலி மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் ஒரே அணியாக இயங்கியதுடன் அடுத்த அணியிலிருந்த ஒரு சில ஆதிக்க சக்திகளுடன் அமெரிக்காவும் ரஷ்யாவும் இணைந்து கொண்டன. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின் (1945) புதிய உலகக் கோலமொன்றை நாம் கண்டோம். அந்த காலகட்டத்திலும் உலகப் பொருளாதாரத்தில் அமெரிக்காவே முதலிடத்தைப் பெற்றிருந்தது. முழு உலகிலும் உறுதி செய்யப்பட்ட தொழில்நுட்பப் பொருட்களில் 50% ஐ அமெரிக்காவே உற்பத்தி செய்தது. அதேவேளை, அக்கால எல்லையில் உலகில் முதன் முதலாக குண்டு தயாரிப்பு மற்றும் அணு ஆயுத உற்பத்தியின் சக்கரவர்த்தியாகத் திகழ்ந்ததும் அமெரிக்காதான்.

இது போன்று பல்வேறு துறைகளில் உலகில் பலம் வாய்ந்த நாடாகத் திகழ்ந்த போதிலும், அமெரிக்காவினால் உலகைத் தனது பிடியில் வைத்துக்கொள்ள முடியாமல் போயிற்று. சர்வதேச அதிகார சமநிலையில் ஒரு பாரிய மாற்றம் நடைபெற்றுக் கொண்டிருந்தமையும். சோவியத் ரஷ்யா ஒரு பலமான நாடாகக் காணப்பட்டமையும் ஒரு காரணமாகும். அதன்படி இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின் அமெரிக்காவும் ரஷ்யாவும் தலைமைத்துவத்தைத் தாங்கியதோர் புதிய அதிகார சமநிலையொன்றை உருவாக்கியது. அதன் விளைவாக அந்த இரு நாடுகளையும் தலைமைத்துவமாகக் கொண்ட இரு பெரும் அணிகளாக புதிய அதிகார சமநிலையொன்று உருவானது. இந்த இரண்டு நாடுகளும் அவ்வாறு இயங்கி வரும்வேளை, அணிசேரா அமைப்பு எனும் பெயரில் மற்றுமொரு சக்தி உருவாகியது.

→ 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனம் கலைத்த தேசிய காங்கிரஸ் மீண்டும் மகுடம் தரிக்குமா?

முஸ்னத் அகமது ஷரிபுத்தீன்

இணைந்த வடகிழக்கு மாகாண சபையின் உறுப்பினராக தெரிவானதிலிருந்து மூன்று தசாப்தகால அரசியல் அனுபவமிக்க முன்னாள் அமைச்சர் அதாஉல்லா சமகால அரசியலில் மீண்டும் ஓர் அதிர்வினை ஏற்படுத்தியிருக்கிறார். கடந்த ஜனாதிபதித் தேர்தலை அடுத்து அமைச்சரவை அந்தஸ்தினையும் தொடர்ந்துவந்த பொதுத் தேர்தலில் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தையும் இழந்த ஒரு வருடகாலத்தின் பின்னர், தான் காத்த மௌனத்தை இப்போது கலைத்திருக்கிறார். அனைவரும் இணைந்து சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி ஜனாதிபதி தலைமையிலான சுதந்திரக் கட்சியின் மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் ஆற்றிய உரை வெகுஜன ஊடகங்களில் முக்கிய இடம்பிடித்திருக்கிறது.

முன்னாள் அமைச்சர் அதாஉல்லாவின் இப்புதிய அரசியல் நகர்வு அவரது ஆதரவாளர் மத்தியில் புத்துணர்ச்சியையும் ஓர் உத்வேகத்தையும் ஏற்படுத்தியிருக்கும் அதேவேளை, அவரது அரசியல் எதிரிகள் மத்தியில் பேரிடியாக அமைந்திருக்கும் என்பதையும் மறுப்பதற்கில்லை. உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களும் மாகாணசபைத் தேர்தல்களும் நெருங்கிவரும் தருணத்தில், மிக நிதானமாக அதாஉல்லாவினால் ஓர் அரசியல் காய் நகர்த்தல் செய்யப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி என்பது ஒரு புறமிருக்க, கட்சித் தலைவர் என்றவகையில் கட்சியைப் பலப்படுத்துவதற்கான அவசியமான தீர்மானங்களை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை ஜனாதிபதிக்கு இருக்கிறது. சுதந்திரக் கட்சியைப் பொறுத்தவரை திகாமடுள்ள மாவட்டத்தில் கட்சியை விரிவுபடுத்த பொருத்தமான ஆளுமையை உள்வாங்க வேண்டியிருக்கிறது. இதற்கு அதாஉல்லாவே சரியான தெரிவாக இருக்கும் என்பதில் சுதந்திரக் கட்சிக்குள் மாற்றுக் கருத்துக்கள் இருக்காது.

அதாஉல்லாவின் அரசியலில் உள்ள குறைபாடுகள் பற்றி பல விமர்சனங்கள் இருக்கின்றன. எவ்வாறு இருந்தபோதும், அரசியல் அவதானிகளின் கருத்துக்கமைய அதாஉல்லா எனும் அரசியல் ஆளுமையைக் குறைத்து மதிப்பிட முடியாது. மு.கா. விலிருந்து வெளியேற்றப்பட்டு மு.கா. வுக்கு எதிரான அரசியலைத் தீவிரமாக முன்னெடுத்த அதன் மூத்த தவிசாளர் சேகு இஸ்ஸதீனின் சாணக்கியத்திற்கு முன்னின்று முகங்கொடுத்து 1994 இல் அக்கரைப்பற்று பிரதேச சபையைக் கைப்பற்றியது முதல் அதாஉல்லாவின் அரசியல் ஆளுமை பல தடவைகள் நிரூபிக்கப்பட்டு வந்திருக்கின்றது.

2000 ஆம் ஆண்டு அதாஉல்லாவின் அரசியலில் முக்கிய திருப்புமுனை இடம்பெற்றது. யூ.என்.பி. யின் தேசியப் பட்டியல் மூலம் சேகு இஸ்ஸதீன் பாராளுமன்றம் நுழைந்ததும் அதிகாரச் சமநிலையை ஏற்படுத்தும் நோக்கில் தேசியப் பட்டியல் மூலம் அதாஉல்லாவும் மு.கா.வால் பாராளுமன்றத்துக்கு உள்வாங்கப்பட்டார். அதே ஆண்டு பொதுத் தேர்தலை எதிர்கொண்டிருந்த வேளை, செப்டெம்பர் மாதம் 16 ஆம் திகதி நிகழ்ந்த கட்சித் தலைமையின் மறைவினை அடுத்து கட்சியை ஒழுங்குபடுத்துவதற்கான அரசியலில் அதாஉல்லா முதன்மையான வகிபங்கினை நிறைவேற்றினார். எதிர்பார்த்தது போல கட்சித் தலைமை ஹக்கீமுக்குக் கிடைத்ததுடன் தலைமைக்கு அடுத்தபடியான தவிசாளர் பதவியில் அதாஉல்லா அமர்த்தப்பட்டார்.

புதிய தலைமைக்கும் அதாஉல்லாவுக்குமான உறவு நீண்டகாலம் நிலைக்கவில்லை. முரண்பாடுகள் துளிர்விடத் தொடங்கி 2002.12.02 இல் கட்சிப் பிளவாக அது மாறியது. முஸ்லிம் காங்கிரஸிலிருந்து வெளியேறி அல்லது வெளியேற்றப்பட்டு தனக்கென ஓர் அரசியல் பாதையை வகுத்துக் கொண்டு முன்னேறிச் சென்றவர்கள் அரிதிலும் அரிது. ஆனால், சேகு இஸ்ஸதீனுக்கு சாத்தியமாகாததை அதாஉல்லா சாதித்துக் காட்டினார் என்பதை வரலாறு மிகத் தெளிவாகவே பதிவு செய்திருக்கிறது. முஸ்லிம் பெரும்பான்மை மாவட்டமான திகாமடுள்ள, மு.கா.வின் கோட்டையாக மாற்றப்பட்ட பின் மு.கா.விலிருந்து வெளியேறி மு.கா.வுக்கு எதிரான அரசியலை முன்னெடுத்து அதே திகாமடுள்ளவில் தனக்கென ஓர் வலுவான அரசியல் தளத்தினை அமைத்துக் கொள்ள அதாஉல்லாவால் மாத்திரமே முடிந்திருக்கிறது.

மஹிந்த அரசாங்கத்துடன் மிக நெருக்கமாக செயற்பட்ட அதாஉல்லா சக்திமிக்க அமைச்சராக நாடு முழுவதிலும் குறிப்பாக, தான் சார்ந்த பிரதேசங்களில் துரித அபிவிருத்திக்கான பல திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார். ''அபிவிருத்தி அரசின் கடமை; அரசியல் தனித்துவம் எங்கள் பிறப்புரிமை'' என மு.கா. வாதித்துக் கொண்டிருந்த போது, முஸ்லிம்களின் தனித்துவ உரிமைகளைப் பாதுகாக்க கிழக்கு தனியே பிரிந்திருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை ஆரம்பம் முதல் மிகத் தெளிவாக அதாஉல்லா முன்வைத்து வந்தார்.

2015 அதாஉல்லாவுக்கு சத்திய சோதனையாக மாறியது. மஹிந்த அரசாங்கத்தின் தூரநோக்கில்லாத இனவாத அரசியலுக்கு தன்னைப் பலிகொடுக்க வேண்டிய சூழ்நிலைக் கைதியாக அவர் மாறினார்.

2015 ஜனாதிபதித் தேர்தலின் பின் அமைச்சரவை அந்தஸ்தினையும் பொதுத் தேர்தலில் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தையும் அதாஉல்லா இழந்த போது இந்தப் பனம் பழத்தை நாம்தான் வீழ்த்தினோம் என சில காகங்கள் மார்தட்டிக் கொண்டன. ஆனால், செஞ்சோற்றுக் கடன் தீர்க்க சேராத இடம் சேர்ந்து வஞ்சத்தில் வீழ்ந்த கதை என்பது பலர் அறிந்த விடயமே.

கடந்த பொதுத் தேர்தலின் பின் சுமார் ஒரு வருடகாலம் அதாஉல்லாவின் அரசியல் ஆழமான மௌனத்துக்குள் மூழ்கியிருந்தது. இந்த மௌனத்திற்கு ஒவ்வொருவரும் வெவ்வேறு அர்த்தங்கள் கண்டனர். செத்த பாம்பு இனி எங்கே படமெடுக்கப் போகிறது என்ற விமர்சனங்களும் முன்வைக்கப்பட்ட நிலையில் மைத்திரி தலைமையிலான சுதந்திரக் கட்சிக்குள் தனது மௌனத்தைக் கலைத்திருக்கிறார் அதாஉல்லா.




மு.கா.வின் அரசியலையும் தேசிய காங்கிரஸின் அரசியலையும் தனித்தனியே ஆய்வுகளுக்குட்படுத்த முடியாது. அவை இரண்டுக்கும் இடையே பரஸ்பர தங்கு நிலை இருக்கிறது. அபிவிருத்தி அரசியலிலும் சரி, சமூக உரிமைகளை வென்றெடுப்பதற்கான அரசியலிலும் சரி, எதனையுமே சாதித்திராத முஸ்லிம் காங்கிரஸ் குறிப்பாக, திகாமடுல்ல மாவட்டத்தில் அதாஉல்லாவின் அரசியலை முதலீடாக வைத்தே பிழைப்பு நடத்தி வந்திருக்கிறது என ஒரு சாராரால் முன்வைக்கப்படும் வாதம் உண்மை என்றால், அதாஉல்லாவின் மீள் வருகை மு.கா.வைப் பொறுத்தவரை இனிப்பான செய்திதான். அக்கரைப்பற்றை மையப்படுத்திய அதாஉல்லாவின் வாக்கு வங்கியைக் காப்பாற்றுவதன் மூலம் வெளியே பிரதேசவாதத்தைத் தாண்டி சுலபமாக தனது வாக்கு வங்கியை தக்க வைத்துக்கொள்ள மு.கா. எண்ணுமாக இருந்தால், அதாஉல்லாவின் வாக்கு வங்கியை நம்பி மு.கா.வில் அரசியல் செய்து வருபவர்களின் நிலை தர்ம சங்கடத்துக்குள் தள்ளப்படும்.

தமது அரசியல் எதிர்காலத்துக்காக அதாஉல்லாவின் வாக்கு வங்கியை இலக்கு வைத்துள்ளவர்கள் கடந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை ஆதாரம் காட்டி அதாஉல்லாவுக்கு வாக்களித்து வந்தவர்கள் இப்போது அதாஉல்லாவை நிராகரித்து விட்டனர் என்ற நிறுவலை பல சந்தர்ப்பங்களில் முன்வைத்து வருகின்றனர். இதில் எந்த அளவு உண்மை இருக்கிறது; இது அதாஉல்லாவின் மீதான வெறுப்பினால் விளைந்ததா அல்லது மஹிந்த ஆட்சியின் மீதான வெறுப்பினால் விளைந்ததா என்பதைத் தெளிவாக அறிந்து கொள்வதற்கான சந்தர்ப்பத்தை மைத்திரியுடனான அதாஉல்லாவின் இணைவு ஏற்படுத்தியிருக்கிறது. வரவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலிலும் மாகாண சபைத் தேர்தலிலும் சாயங்கள் வெளுக்கும்போது புலி எது; பூனை எதுவென்பது தெளிவாகும்.

**சமூக விடுதலைக்கான இயக்கங்களாக செயற்படும் கட்சிகள் ஒருபோதும் அழிவதில்லை; தனிமனித சொத்தாக மாறிவிடும் கட்சிகள் ஒரு நாளும் நிலைத்திருப்பதுமில்லை. இதுதான் ஜனநாயக சூத்திரம் என்பதை அனுபவத்தில் உணர்ந்த அதாஉல்லாவின் எதிர்கால அரசியல் எவ்வாறு அமையப் போகிறது என்ற எதிர்பார்ப்பு பரவலாக எழுந்திருக்கிறது.**

கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களைத் தொடர்ந்து அதாஉல்லாவின் அரசியல் மௌனித்துக் கிடந்த ஒரு வருட காலத்துக்குள் தேசிய காங்கிரஸின் வாக்கு வங்கியை இலக்கு வைத்து மு.கா.வும் அ.இ.ம.கா.வும் சில அரசியல் நகர்வுகளை முன்னெடுத்து வருவது ஒரு புறமிருக்க, அதாஉல்லா இல்லாத வெற்றிடத்தை அதாஉல்லாவின் அரசியல் எதிரிகளும் உணரத் தலைப்பட்டிருப்பதையும் இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும். அதாஉல்லா அதிகாரத்தில் இல்லாத கடந்த ஒரு வருடகாலத்திற்குள், குறிப்பாக அக்கரைப்பற்று மக்களின் அரசியல் அனுபவங்கள் எவ்வாறிருந்தன என்பதே அதாஉல்லாவின் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போகிறது.

➡ 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கல்வி நிருவாக சேவை போட்டிப் பரீட்சை - 2016

தொடர் 08

இலங்கை கல்வி நிருவாக சேவை போட்டிப் பரீட்சைக்கு (திறந்த, மட்டுப்படுத்தப்பட்ட) தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்காக புத்தளம் கல்விப் பணிமனை உதவிக் கல்விப் பணிப்பாளர் முஹம்மத் அலி ஜின்னா (Naleemi, SLEAS) அவர்கள் எழுதும் கல்வி நிருவாகமும் முகாமையும் ஒப்பீட்டுக் கல்வி, கல்வியியல் தொடர்பான பொது அறிவு போன்ற பாடப்பரப்பிற்கான வழிகாட்டல் தொடர் எங்கள் தேசத்தில் பிரசுரிக்கப்படுகிறது. –ஆசிரியபீடம்–



இஸ்மாயில் முஹம்மது அலி ஜின்னாஹ் (SLEAS)
(உதவிக் கல்விப் பணிப்பாளர் - திட்டமிடல்)

## சம்பவக் கற்கையின்போது கவனம் செலுத்தப்பட வேண்டிய முகாமைத்துவ எண்ணக் கருக்கள்

முகாமைத்துவத்தின் தந்தையாகக் கருதப்படும் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஹென்றி பயால் என்பவர் முகாமைத்துவ செயற்பாடு வினைத்திறன் மிக்கதாகவும் பொருத்தப்பாடுடையதாகவும் இருப்பதற்கான வழிகாட்டல்களை அறிமுகம் செய்துள்ளார். நிறுவனம் ஒன்றின் முகாமைத்துவத்தில் ஈடுபட்டுள்ள முகாமையாளர்கள், மேற்பார்வையாளர்கள் ஆகியோர் செயற்படுத்த வேண்டிய விஷேடமான செயற்பாடுகள் பலவற்றினை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

*01. வேலைப் பகிர்வு*

நிறுவனம் ஒன்றுடன் தொடர்புபட்ட அனைவருக்கும் அவர்களுக்குரிய நிச்சயிக்கப்பட்ட கடமைகள் யாவை என்பதை வரையறை செய்து வழங்குதல் வேண்டும். இதனூடே மனிதவளம் பூரணமாக பயன்படுத்தப்படுவதோடு, தனிநபர் தொழில் திருப்தி அதிகரிக்கவும் வாய்ப்பாக அமையும்; தனிநபர்களின் செயற்திறன் மதிப்பீட்டினைச் செய்வதற்கு துணையாகவும் அமையும்.

*02. அதிகாரம் மற்றும் பொறுப்புக்கூறல்*

நிறுவனம் ஒன்றின் செயற்திறன் சிறப்பாக அமைய பல்வேறு மட்டங்களிலும் செயற்படுபவர்களுக்கு அதிகாரம் வழங்குதல் இன்றியமையாததாகும். இதனூடே கீழ்படிதலை பெற்றுக் கொள்ளும் உரிமையை பெறுவர். இல்லையெனில் கட்டளை, ஆலோசனைகள் என்பவற்றை ஆளணியினர் பொருட்படுத்த மாட்டார்கள். அதிகாரங்கள் பகிரப்படுமானால், கட்டளையிடல் உரிமை, சட்டதிட்டங்கள், சுற்றுநிருபங்கள், அதிகாரப் பகிர்வு என்பன ஒழுங்கமைப்பில் சிறப்பாக இடம் பெறும். வகை கூறல் என்பது கட்டுக்கோப்புடன் நடைபெறும்.

அதிகாரத்தினைச் செயற்படுத்த அது தொடர்பான பொறுப்பு வழங்கப்பட்டவர்கள் கடமைப்பட்டுள்ளனர். பொறுப்பு இன்றேல் தீர்மானம் எடுத்தல், செயற்படுத்தல் என்பனவற்றில் குளறுபடிகள் ஏற்படலாம். அதிகாரம் வழங்குதல் மற்றும் பொறுப்புக் கூறல் என்பன சம அளவில் வழங்கப்படுவது இன்றியமையாததாகும்.

*03. கட்டளையிடல்*

நிறுவனம் ஒன்றில் தமது ஆளணியினருக்கு நிச்சயிக்கப்பட்ட செயற்பாடுகள் எவை என்பது பற்றிக் கட்டளையிடப்படுவது இன்றியமையாததாகும். பல்வேறுபட்ட, ஒன்றுடன் ஒன்று முரண்பட்ட கட்டளைகளை வழங்குவதினூடே செயற்பாடுகளை உரியவாறு நடைமுறைப்படுத்துவதில் தடைகள் ஏற்படலாம். அத்தோடு நிறுவனம் ஒன்றில் தனிநபர் ஒருவருக்கு ஒரு தடவையில் ஒரு கட்டளையே வழங்கப்படல் வேண்டும். பல கட்டளைகள் ஒரே நேரத்தில் வழங்கப்படும் போது எதனைச் செய்வது என்ற பிரச்சினைகள் எழ வாய்ப்புண்டு. எனவே, நிறுவனம் ஒன்றின் ஒருமைப்பாடு ஏற்படும் வகையில் கட்டளையிடல் அவசியமானதாகும்.

*04. ஒரே திசையின் பால் வழிநடத்தல்*

நிறுவனம் ஒன்றின் அனைத்து செயற்பாடுகளும் ஒழுங்கமைக்கப்பட வேண்டியது அந்நிறுவனத்தின் தூர நோக்கினை இலக்காகக் கொண்டாகும். நிறுவனத்தின் அனைத்து நிலைகளிலும் உள்ளோர் நிறுவன தூரநோக்கு, பணிக்கூற்று என்பன தொடர்பாக அறிவூட்டப்பட்டிருப்பதும் அதன்பால் வழிநடத்தப்படுவதும் இன்றியமையாததாகும். அதனூடே நிறுவன குறிக்கோளை இலகுவாக அடைந்து கொள்ள ஒரு குழுவாக நின்று அனைத்துத் தரப்பினரும் செயற்படவும் பெறுபேற்றினை பெற்றுக் கொள்ளவும் முடியுமானதாக இருக்கும்.

*05. கட்டளை சங்கிலித் தொடர்*

நிறுவனமொன்றின் கட்டளை ஒரு சங்கிலித் தொடர் போன்று ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டது போன்று பயணிக்க வேண்டும். மேல்மட்ட முகாமைத்துவம், இடையிட்ட முகாமைத்துவம் மற்றும் முன்வரிசை முகாமைத்துவ அமைப்பு என்பனவற்றில் சங்கிலித் தொடர் போன்று கட்டளைகள் தொடர்புற்றதாய் அமைதல் வேண்டும்.

*06. நிறுவனத்தின் ஒழுங்கமைப்பு*

நிறுவனமொன்று தனது இலக்கினை அடைந்து கொள்வதற்கு முறையான ஒழுங்கமைப்பு அவசியமாகும். நிறுவனத்தின் அனைத்து செயற்பாடுகளிலும் ஒழுங்கமைப்பு பின்னிப் பிணைந்த தொன்றாகும். ஒவ்வொரு பிரிவினதும் செயற்பாடு மற்றும் தனிநபர் செயற்பாடு என்பனவற்றை ஒழுங்கமைத்து நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

*07. ஒழுக்க விழுமியம்*

நிறுவனமொன்றில் இருக்கும் அனைவரும் எதிர்பார்க்கப்படுகின்ற நன்நடத்தைகளின் பால் செயற்படுவது ஒழுக்க விழுமியம் என பொருள்படும். நிறுவனத்தின் அடைவு சிறப்புற்று விளங்க ஒழுக்க விழுமியம் முக்கியமான சாதனமாக விளங்குகின்றது. சட்டதிட்டங்கள், கட்டளைகள், சம்பிரதாயங்கள் என்பன எதிர்பார்க்கப்படும் விழுமியங்களின் பால் வழிநடத்துபவையாகும். அவற்றுக்கு முரணாக செயற்படும் போது ஒழுக்கத்திற்கு முரணான செயலாக கருதி தண்டனைக்கு உட்படுத்துவதினூடாக ஒழுக்கத்தினை தொடர்ந்தும் பேணமுடியும். ஊழல், இலஞ்சம் மற்றும் கவனமின்மை என்பவற்றைக் குறைப்பதினூடாக நிறுவனத்தை எதிர்பார்த்த இலக்கின்பால் இட்டுச்செல்ல 'ஒழுக்கம்' மிகவும் உதவுகின்றது.

*08. ஒற்றுமை, ஒருமைப்பாடு*

நிறுவனத்தின் இலக்கினை அடையப் பெறுவதற்கு அதனோடு தொடர்புற்ற மனித வளங்கள் குழு ஒருமைப்பாட்டுடன் ஓர் அணியாக செயற்படுவது இன்றியமையாததாகும். ஒவ்வொருவரும் தமக்குரிய செயற்பாடுகளை செய்வது அணியாக நின்று நிறுவனத்தின் இலக்கினை அடைவதற்கான பிரதான சாதனமாக விளங்குகின்றது.

*09. புத்தாக்க செயற்பாட்டிற்கான சந்தர்ப்பம் வழங்கல்*

நிறுவனமொன்றின் ஆளணியினருக்கு தனது இயல்பூக்க சக்தியினூடே செயற்படுவதற்கான சுதந்திரம் காணப்படல் வேண்டும். சேவையாளர்களின் ஆலோசனை மற்றும் திட்டத்தினை செயற்படுத்தத் தேவையான சுதந்திரத்தினூடே, நிறுவன செயற்பாட்டினை மிகவும் வெற்றிகரமாக ஆக்கிக் கொள்ள முடியும்.

*10. சமத்துவம்*

நிறுவனமொன்றின் முகாமையாளர்கள் தமது ஆளணியோடு சமத்துவத்துடனும் நியாயத்தோடும் நடந்து கொள்ளல் வேண்டும்.

ஹென்றி பயோலின் மேற்படி முகாமைத்துவ எண்ணக் கருக்கள் சம்பவக் கற்கையின்போது நிறுவனத்தின் தன்மை மற்றும் தற்போதைய நிலைமை என்பவற்றினை அளவீடு செய்வதற்கான அளவுகோலாகப் பயன்படுத்தப்பட முடியும். ஏதாவதொரு நிறுவனம் தொடர்பான கற்கையின் பகுப்பாய்வின்போது அதன் பலம், பலவீனம் என்ன என்பது பற்றி அறிந்து கொள்ளவும் அதற்கான தீர்வினையும் பின்னூட்டல்களையும் வழங்கவும் மேற்படி எண்ணக்கருக்கள் உதவியாக அமையும்.

*சம்பவக் கற்கைக்காக முகாமைத்துவ செயற்பாட்டினை அறிந்து கொள்ளல்*

முகாமைத்துவ செயற்பாடுகள் தொடர்பான அடிப்படையினை அறிந்து கொள்வது சம்பவக் கற்கையில் ஈடுபடுபவர்களுக்கு சிறந்த கற்கையை மேற்கொள்ள மிகவும் உதவியாக அமையும். பகுப்பாய்வு செய்யவும் தர்க்க ரீதியான தீர்வினை முன்வைக்கவும் அடிப்படையாக அமையும். முகாமைத்துவ செயற்பாட்டில் திட்டமிடல், ஒழுங்குபடுத்தல், இயக்குதல், கட்டுப்படுத்தல் ஆகிய அடிப்படை அம்சங்கள் தொடர்பாக கவனம் செலுத்துதல் இன்றியமையாததாகும்.

*1-திட்டமிடல்*

ஏதாவது ஒரு நோக்கத்தினை நிச்சயப்படுத்தப்பட்ட காலத்தினுள் அடைந்து கொள்வதற்குத் தேவையான இலக்கினைத் தெரிவு செய்வதும் அது தொடர்பான செயற்பாட்டினைத் தீர்மானிப்பதும் அதற்குத் தேவையான வளங்களைச் சேகரித்தளையும் திட்டமிடல் என வரையறை செய்யலாம். அதனை எவ்வாறு, எப்போது, யார் மூலம் மேற்கொள்வது என்பது திட்டமிடலில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

திட்டமிடல் செயற்பாட்டின் ஊடே அடையப் பெறும் நன்மைகள்:-

அ) திட்டமிடல் நிறுவனத்தின் வழிப்படமாதல்.
ஆ) திட்டமிடல் மூலம் நோக்கம் மற்றும் பெறுபேறு தொடர்பாக கவனம் செலுத்தப்படல்.
இ) ஏற்படக்கூடிய பிரச்சினைகள் மற்றும் ஆபத்துக்களை குறைக்க முடிதல்.
ஈ) அறிவியல் ரீதியான தீர்மானம் எடுத்தலுக்கு வழிகாட்டல்.
உ) ஏனைய அனைத்து முகாமைத்துவ செயற்பாட்டிற்கும் அடிப்படைத் தேவையாக செயற்படல்.

திட்டமிடல் செயன்முறை

i. திட்டமிடலின் தேவைகளை இனங்காணல்
ii. நோக்கத்தினை நிச்சயப்படுத்தல்
iii. எதிர்கால சிந்தனை
iv. முன்னுரிமைப்படுத்தல்
v. திட்டத்தின் செயற்பாடுகளை விரிவாக விளக்குதல்
vi. திட்டத்தினை அமுல்படுத்தல்
vii. திட்ட மதிப்பீடு
viii. மீள் திட்டமிடல்

**i. திட்டமிடலின் தேவைகளை இனங்காணல்**

திட்டமிடல் எந்தத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கானது என்பது பற்றி நிச்சயித்துக் கொள்ளல் மற்றும் தேவைகளை இனங்காணல் திட்டமிடலின் அடிப்படையாக விளங்குகின்றது.

**ii. நோக்கத்தினை நிச்சயப்படுத்தல்**

தேவையினை இனங்கண்டு கொண்ட பின் நிச்சயிக்கப்பட்ட நோக்கினை அல்லது நோக்கங்களை தீர்மானித்தல் வேண்டும்.

**iii. எதிர்கால சிந்தனை**

திட்டமிடல் மூலம் எதிர்காலத்தில் நிறைவேற்றிக் கொள்ள எதிர்பார்க்கும் பெறுபேறு என்னவென்று தீர்மானித்தலே இங்கு வரையறை செய்யப்படுகின்றது.

**iv. முன்னுரிமைப்படுத்தல்**

திட்டத்தின் எவ் விடயத்தை, எக்காலப்பகுதியில் செயற்படுத்துவது என்பது பற்றி முன்னுரிமைப் பட்டியல் தயார்படுத்தல் வேண்டும். இங்கு மிகவும் முக்கிய விடயத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும். முன்னுரிமைப்படுத்துவதற்கு முதன்மையாக பிரச்சினைக்கான தீர்வினை இனங்காண்பதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டும்.

**v. திட்டத்தின் செயற்பாடுகளை விரிவாக விளக்குதல்**

திட்டத்தின் ஒவ்வொரு செயற்பாட்டினையும் தெளிவாகவும் சிக்கலின்றியும் விபரமாகவும் குறிப்பிடல் வேண்டும். இது திட்டத்தினை அமுல்படுத்துபவர், பயன்பெறுவோர் மற்றும் மதிப்பீடு செய்பவர்களுக்கும் சரியான தெளிவினைப் பெற்றுக் கொள்ள உதவியாக இருக்கும். இங்கு ஒவ்வொரு செயற்பாடு தொடர்பாகவும் பயன்படுத்தப்படும் வளங்கள், காலம் என்பன விபரமாக குறிப்பிடப்படல் வேண்டும்.

**vi. திட்டத்தினை அமுல்படுத்தல்**

திட்டமிடல் செயற்பாட்டில் மிகவும் முக்கியமான படிமுறையாக இருப்பது ஒழுங்குபடுத்தப்பட்ட எதிர்கால வேலைத்திட்டத்தினை அமுல்படுத்துவதாகும். இதனால் எதிர்பார்க்கப்படுவது சிறந்த இணைப்பாக்கத்துடன் வளங்களை சரியான முறையில் பயன்படுத்தி கட்டுப்பாடு, மதிப்பீடு ஆகியவற்றினூடே திட்டத்தினை செயற்படுத்துவதாகும்.

**vii. திட்ட மதிப்பீடு**

திட்டத்தினை செயற்படுத்துவதினூடே எதிர்பார்க்கப்படும் பெறுபேறு அடையப்பட்டுள்ளதா என்பதனை தேடிப் பார்ப்பதற்காக மதிப்பீடு மேற்கொள்ளப்படுவது அவசியமாகும். இதற்காக திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எதிர்கால சிந்தனை எவ்வளவு தூரம் பெறப்பட்டுள்ளது என்பதனை பரீட்சிக்க முடியும். அத்தோடு சேவை பெறுனரின் துலங்கல், முன்னேற்ற அறிக்கை, கணிப்பீடு என்பவற்றை உபாயத் திட்டமிடல் மதிப்பீட்டுக்காக பயன்படுத்த முடியும்.

**viii. மீள் திட்டமிடல்**

எதிர்பார்க்கப்படும் பெறுபேற்று திட்டத்தினூடே அடையப் பெறாவிடின் மீள் திட்டமிடல் அவசியமானதாகும். இங்கு மூலத் திட்டமிடலிலுள்ள குறைகள், பலவீனங்கள் என்பனவற்றை இனங்கண்டு மீள்திட்டமிடலுக்கு அல்லது புதிய திட்டமொன்றை தயார்படுத்துவதற்கு உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வருதல் வேண்டும்.

திட்டமிடல் தோல்வியுறுவதற்கான காரணங்கள்

i. பங்குபற்றுனரிடையே போதியளவு அறிவு இல்லாமலிருத்தல்
ii. தேவையான தகவல்கள் இன்மை
iii. பலவீனமான எதிர்கால நோக்கினூடே பிழையான இலக்கினைத் தீர்மானித்தல்
vi. பலவீனமான தீர்மானமெடுத்தல்
v. தேவையான ஒத்துழைப்பு பங்குபற்றுனரிடையே கிடைக்காமை
vi. தேவையான வளங்கள் இல்லாமை
vii. அவசரத் திட்டமிடல் காணப்படாமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக மாற்றத்துக்கு பெருந்தோட்ட சமூகம் தயாராக வேண்டும்!

-மலைஒளி

மலையகத்தில் ஒருவாறு மே தினக் கொண்டாட்டம் நிகழ்ந்து முடிந்து விட்டது. மே தினத்தன்று தொழிலாளர்களின் உரிமைகள் பற்றிப் பேசப்படுவது முற்றாக மறைந்து போய், அரசியல் கட்சிகள் தமது பலத்தை நிலைநிறுத்தும் ஒரு மேடையாகப் பயன்படுத்தும் நடைமுறை உருவாகி பல தசாப்தங்கள் கடந்து விட்டன. ஆனால், எழுபது வரை மே தினத்தில் அரசியல் நுழைய வில்லை. தொழிற்சங்கங்கள்தான் மே தினங்களை நடத்தி தொழில் உரிமைகளுக்கான கோரிக்கைகளை எழுப்பி வந்தன. எனினும், மே தினத்தன்றுதான் தொழிலாளர் வர்க்கத்தின் மத்தியில் ஊடுருவ முடியும் என்பதைத் தெரிந்து கொண்ட அரசியல் கட்சிகள், மே தினத்தை அரசியல் மயமாக்கின. தொழிலாளர் நலன்கள் வெகுவாகப் பின் தள்ளப்பட்டன. மே தினம் மீண்டும் தொழிலாளர் வசமே வருமென்பது இனி சாத்தியமான விஷயமல்ல. மே தினம், யானை வாய்க்குள் போன கரும்பு மாதிரி!

கடந்த மே தினம் இ.தொ.கா.வுக்கும் தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கும் இடையிலான பலப்பரீட்சையாக அமைந்திருந்தது. இரண்டுமே போட்டி போட்டுக் கொண்டு சனக்கூட்டத்தைத் திரட்டிக் காட்டின. இரண்டுக்குமே சனக்கூட்டம் திரண்டிருந்தாலும் மலையகத்தைப் பொறுத்தவரை, மே தினக் கூட்டத்துக்கு போவதென்பது அவர்களுக்கு ஒரு ஜொலியான விஷயம். அம்மக்களிடம் என்ன பேசினார்கள் என்று கேட்டுப் பார்த்தால் அவர்களால் பெரும்பாலும் பதில் சொல்ல முடியாமல் இருக்கும்.

இவ்விரு மலையகக் கட்சிகளுமே பெருந்தோட்டக் கூட்டொப்பந்தம் காலாவதியாகி ஓராண்டு நிறைவு பெற்ற மறுதினமே மே தினத்தைக் கொண்டாடும் சங்கடத்துக்கு ஆளாகின. ஆயிரம் ரூபா சம்பள உயர்வை 'எதிரி பலவீனமான நிலையில்' அடிக்கிற இடத்தில் அடிப்பதன் மூலம் பெற்றுத் தருவோம் என்ற ஒரு வீராப்பு பேச்சு இ.தொ.கா. மேடையில் வெளியானது. ஆயிரம் ரூபா சாத்தியமற்றது என்பதை இன்னொரு வகையில் சொல்லி இருக்கிறார்கள்.

இதில் மிக இக்கட்டான நிலை தமிழ் முற்போக்குக் கூட்டணிக்குத்தான். ஏனெனில், அக்கட்சிகளைச் சேர்ந்த மூவர் அமைச்சுப் பொறுப்புகளில் உள்ளவர்கள். அரசாங்கம் தான் தருவதாக உறுதியளித்த 2500 ரூபா உயர்வையும் அவர்களால் வாங்கித் தர முடியாத நிலை. நாள் சம்பளத்தில் நூறு ரூபா அதிகரிக்கும். அதைக் கூட செய்து தர முடியாத நிலையில் இக்கூட்டணி இருப்பது, இ.தொ.கா.வுக்கு வாய்ப்பாக அமைந்திருக்கிறது. பெருந்தோட்டத் தொழிலாளர்களின் மே தினக் கனவு, கூட்டு ஒப்பந்த கைச்சாத்தும், கணிசமான சம்பள உயர்வும் என்பதாக இருந்திருக்குமானால், தொழிலாளர் சமூகத்துக்கு இது தோல்வியான மே தினமே! சங்கங்களுக்கு இது இக்கட்டான மே தினம். குறிப்பாக தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கு. ஆளும் கட்சியில் உள்ளவர்கள், சம்பள உயர்வு கிடைக்காவிட்டால் வேலை நிறுத்தம் செய்வோம் என்று அறிவிக்கும் அளவுக்கு போயிருக்கிறார்கள் என்றால் அது கூட்டணியின் கையாலாகாத நிலைமையைத்தானே காட்டுகிறது!

தினமொன்றுக்கு ரூ.100 சம்பள உயர்வை பெற்றுத் தருவதில் என்ன சிக்கல் என்பது பற்றி விரிவாக கடந்த இதழில் பார்த்தோம் என்பதால் இந்த இதழில், இந்த சம்பள உயர்வு என்ற சங்கதியிலேயே சுற்றிக் கொண்டிருக்காமல், பரந்ததும் தொலை நோக்குக் கொண்டதுமான திட்டங்களில் ஈடுபடுவதே மலையகக் கட்சிகளின் வேலையாக இருக்க வேண்டும் என்ற பொருளில் சிந்திப்போம்.

அவ்வகையில் பார்த்தோமானால் ஏழு பேர்ச் காணிகளில் வீடமைக்கும் திட்டமும் தோட்டக் குடியிருப்புகளை கிராமங்களாக்கும் திட்டமும் தொலைநோக்குப் பார்வை கொண்ட திட்டங்கள்தான். இவற்றை நடைமுறைப்படுத்தவென தனியாக ஒரு சபை அமைக்கப்படுவதும் சரியான பாதையில் செல்லும் வழிமுறைதான்.

மீரிய பெத்த வீடமைப்புத் திட்டத்தின் கீழ் அறுபதுக்கும் அதிகமான வீடுகள் அமைக்கப்பட்டிருப்பதாகத் தகவல் வெளிவந்திருக்கிறது. டிரஸ்ட் மூலமான வீடுகள் ஆங்காங்கே அமைக்கப்பட்டு வருகின்றன. ஏழு பேர்ச் காணிக்கான ஓர் உறுதிப்பத்திரம் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. தோட்டத் தொழிலாளருக்கு காணி உறுதி வழங்குவதில் சட்ட ரீதியான சிக்கல்கள் இருப்பினும் அரசு, காணியுடனான வீடுகளை வழங்குவதை கொள்கை ரீதியாக ஏற்றுக் கொண்டிருப்பதால் இப்பிரச்சினையை படிப்படியாகத் தீர்க்கப்படக்கூடிய ஒன்றாகவே கருத வேண்டும்.

இங்கேதான் விஷயம் இருக்கிறது.

காணியுடன் கூடிய வீடு, கிராமமயப்பட்ட தோட்டக் குடியிருப்புகள் என்பன சாத்தியமானால் அக்காலத்திலும் இதே மாதிரியான தோட்டத் தொழிலைத்தான் இம்மக்கள் செய்து கொண்டிருக்க வேண்டுமா என்ற கேள்வி எழுகிறது அல்லவா? இதைப்பற்றி எந்தவொரு மலையகக் கட்சியும் பேசிய மாதிரி தெரியவில்லை.

ஏனெனில், இதெல்லாம் அவசியம் இல்லை என இக்கட்சிகள் நினைக்கலாம். மாதா மாதம் சங்கம் காசு வந்தால் போதும்; அரசியல் மூலம் நமக்கு கிடைப்பது கிடைக்கட்டும் என்பதாகவே இதுவரை மலையக அரசியல் ஓடிக் கொண்டிருந்தது. அவ்வப் போது சம்பளப் பிரச்சினை வரும்போது அதை ஓர் உயிர்ப் பிரச்சினை போல எடுத்துக் கொண்டு தொழிலாளர்களை ஏமாற்றுவதும் பின்னர் முதலாளிமார் குறித்துக் கொடுக்கும் சம்பளத் திட்டத்துக்கு ஒத்துக் கொள்வதும் வழமையாக இருந்து வந்திருக்கிறது. 1977 முதல் 2014 வரை இந்தக் கட்சிகள் சாதித்தவை என்ன என்பதை சிந்தித்துப் பார்த்தால், மலையகக் கட்சிகள் தமக்கு வேண்டிய நன்மைகளைப் பெற்றிருக்கின்றனவே தவிர தொழிலாளர் சமூகத்துக்கு ஏதும் செய்திருப்பதாகத் தெரியவில்லை. எந்தவொரு தொலைநோக்குத் திட்டமும் நிறைவேற்றப்பட்டதில்லை.

இந்த நிலையில்தான் தோட்டங்கள் கிராம மயப்படுத்தல் பற்றி இன்று பேசப்படுகிறது. அரசு கொள்கையாக ஏற்றுக்கொண்டு ஒரு அமைச்சையும் ஏற்படுத்தியிருக்கிறது. இதை ஆங்கிலத்தில் 'சோஷல் டிரான்போர்மேஷன்' என அழைப்பார்கள். 'கம்பெரலிய' என சிங்களத்தில் சொல்லலாம். இது ஒரு சமூகப் புரட்சி; சமூக நிலை மாற்றம். சுமார் 150 ஆண்டுகளாக ஒரே மாதிரியான பயிர்ச் செய்கையில் ஈடுபட்டிருந்த ஒரு சமூகத்தை அச்சூழலில் இருந்து வெயியே கொண்டு வருவதென்பது சுலபமான காரியமல்ல. இது ஒரு சமூக அரசியல் பிரச்சினை. இம் மாறுதல் பல்வகைப்படும்.



முதலாவது கல்வி ரீதியானது. இரண்டாவது தொழில் ரீதியானது. மூன்றாவது மகளிர் நிலை. நான்காவது சமூக உறவுகள் தொடர்பான மாற்றங்கள். ஐந்தாவது அரசியல் சிந்தனை. தோட்ட வாழ்க்கையின் நீட்சியாக கிராம வாழ்க்கையைப் பார்க்கக் கூடாது.

தோட்ட வாழ்க்கை லய வாழ்வை அடிப்படையாகக் கொண்டது. தனி வீடுகளை அமைத்துக் கொண்டாலும் அக்குடும்பங்கள் லய வாழ்க்கைப் பாதிப்பில் இருந்து மீள முடியாது. கிராம வாழ்க்கைக்கென சில பண்புகள் உள்ளன. சுய தொழில்கள், குடிசைக் கைத்தொழில்கள் என்பன கிராமம் சார்ந்தவை. படிப்பகம் மற்றும் நூலகம் என்பனவற்றை உள்ளடக்கிய ஒரு சனசமூக நிலையம் முக்கியத்துவம் பெறும் வகையில் கிராமமயப்படுத்தல் நிகழ வேண்டும். சந்தா திரட்டவும், எதிரிக் கட்சி அல்லது சங்கத்துக்கு எதிராக கொம்பு சீவி விடவும், கட்சிக் கூட்டங்களுக்கு ஆள் திரட்டவும், [illegible] பயன்படுத்தவும்தான் மலையகக் கட்சிகள் இளைஞர்களை இவ்வளவு காலமாகப் பயன்படுத்தி வந்துள்ளன. மேலும் இக்கட்சித் தலைவர்கள் தோட்ட இளைஞர்களை துரை-தொழிலாளி மனப்பான்மையுடன்தான் அணுகியும் வந்துள்ளன.


ஆனால், கிராம வாழ்க்கைக்கு மாறும் போது தமிழ் இளைஞர்களை இவ்வாறு பயன்ப்படுத்த முடியாத சூழல் ஏற்படும்; ஏற்படவும் வேண்டும். இந்து சமயத்தின் ஓர் அங்கமான சாதி மலையகத்தில் இல்லை என எவரும் சொல்லிவிட முடியாது. சாதிப் பாகுபாடு உள்ளது. சாதி அரசியலும் மனப்பான்மை உள்ளது. தேர்தல் காலத்தில் சாதி அரசியல் ஊக்குவிக்கப்படுகிறது. இந்த சாதி அரசியல், தோட்ட வாழ்க்கை கிராமமயப்படுத்தலுக்கு ஆளாகும்போது முக்கிய சக்தியாக எழுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. ஏனெனில், சமீப காலமாக மலையகம் சார்ந்த சாதிச் சங்கங்களை கொழும்பு முதலாளிமார் சமூகம் வளர்த்தெடுத்து வருகிறது. கிராம சூழலில் குடும்பங்கள் தனித்தனியாக பிரிந்து வாழும்போது ஏற்படக் கூடிய பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுடன் சாதி அமைப்பு பின்னிப் பிணைந்துவிடக் கூடிய சாத்தியங்கள் இருக்கவே செய்கின்றன.

தோட்ட வாழ்க்கை கிராம மயப்படுத்தப்படும் சமயம், தேயிலைத் தோட்டங்கள் இதே மாதிரித்தான் நிர்வாகம் செய்யப்படுமா அல்லது தோட்டக் காணிகள் குத்தகை அடிப்படையில் தொழிலாளர்களுக்கு பிரித்துக் கொடுக்கப்படுமா என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. கடந்த இரண்டு ஆண்டுகளாக காணப்படும் தேயிலை விலை வீழ்ச்சி, பெரியதொரு தோட்டத்தை நிர்வகிப்பதில் காணப்படும் பிரச்சினைகள் என்பன காரணமாக கம்பனிகள் சில முக்கிய முடிவுகளை எதிர்காலத்தில் எடுக்கலாம். தோட்டங்களில் காணப்படும் குறைவான தொழிலாளர் எண்ணிக்கை எதிர்காலத்தில் மேலும் மோசமடையலாம். இத்தகைய பின்னணியில் தோட்டக் காணிகளை பிரித்து தோட்டக் குடும்பங்களிடம் அவை வழங்கலாம். ஏற்கனவே இது பரீட்சார்த்த ரீதியாக நடைமுறையில் உள்ளது. சில குறைபாடுகள் கண்டறியப்பட்டுள்ளன. இது சாத்தியமானதே. எனினும், இந்த சுயதொழிலுக்கு பொருந்திப் போகின்ற வகையில் தொழிலாளர் குடும்பங்களுக்கு பயிற்சி வழங்க வேண்டிய அவசியம் உள்ளது.

இன்று இவையே முக்கியத்துவம் பெற வேண்டிய விஷயங்கள். மே தினக் கூட்டத்துக்கு அதிக மக்கள் சமுகமளித்தது எந்தக் கட்சிக்கு என்பதும் யார் அதிக சம்பளம் வாங்கித்தரப் போகிறார்கள் என்பதும் முக்கியமல்ல. மலையகக் கட்சிகள் இனி சில்லறை விஷயங்கள் பற்றிப் பேசாமல், போராட்டம் நடத்தாமல் தொலைநோக்கு திட்டங்கள் பற்றிப் பேச வேண்டும். இவ்விடயத்தில் அரசியல்வாதிகளைப் பற்றி மட்டும் நாம் பேசக்கூடாது. பாடசாலைகள் இவ்விடயத்தில் ஆற்றக்கூடிய பங்கு முக்கியமானது. ஆசிரியர்களும் அதிபர்களும் எதிர்காலத்தில் ஏற்படப் போகின்ற சமூக மாற்றங்கள் குறித்து மாணவர்களுடன் கலந்துரையாடி அம்மாற்றங்களுக்கு அவர்களைத் தயார் படுத்துதல் அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை கிடைக்கப் பெற்றால் இலங்கையின் பொருளாதாரத்தில் மாற்றங்கள் ஏற்படும்



## கலாநிதி யூசுப் கே. மரைக்கார்

GSP பிளஸ் வரிச்சலுகை இன்மையால் இலங்கை போன்ற நாடுகளின் பொருட்களுக்கு கேள்வி குறைவடைந்துள்ளது. தைத்த ஆடைகளை ஏற்றுமதி செய்பவர்கள் இவற்றை ஓரளவு சமாளித்துக்கொண்டு வருகின்றார்கள். இந்த GSP பிளஸ் வரிச்சலுகை கிடைக்கப் பெற்றால் இலங்கையின் பொருளாதார நிலைமைகளில் மாற்றங்கள் ஏற்படும் என இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளரான கலாநிதி யூசுப் கே. மரைக்கார் தெரிவித்தார். எங்கள் தேசத்திற்கு வழங்கிய நேர்காணலிலே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவருடைய நேர்காணலை தொகுத்துத் தருகிறோம்.

**எங்கள் தேசம்:** இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையினால் மேற்கொள்ளப்படும் பணிகளை விபரிக்க முடியுமா?

**கலாநிதி யூசுப் கே. மரைக்கார்:** இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை இலங்கையின் ஒட்டுமொத்தமான பொருட்களின் ஏற்றுமதியையும் சேவை ஏற்றுமதியையும் ஊக்குவிப்பதோடு அவற்றை மேற்பார்வை செய்வதற்கும் ஏற்றுமதி தொடர்பான தொழிற்பாடுகளை மேம்படுத்துவதற்கும் ஏற்றுமதியாளர்களுக்குத் தேவையான உதவிகளை செய்வதற்குமாக உருவாக்கப்பட்டது.

இலங்கை ஏற்றுமதிச் சபை 1979 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்கச் சட்டமூலத்தின் மூலம் அப்போதைய அமைச்சர் லலித் அதுலத் முதலியினால் ஏற்படுத்தப்பட்டது. இச்சபையானது ஏற்றுமதியாளர்களுக்கு பயிற்சிகள் அளிப்பதுடன் சர்வதேசத்தில் ஏற்றுமதியாளர்களுக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்தல் போன்ற பணிகளைச் செய்து வருவதுடன் அவர்களுக்கு மானியங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளையும் இச்சபை மேற்கொண்டு வருகிறது.

**எங்கள் தேசம்:** நாட்டின் தற்போதைய பொருளாதார நிலை எப்படி இருக்கிறது?

**கலாநிதி யூசுப் கே. மரைக்கார்:** வெளிநாட்டுக் கடன் நாட்டின் பொருளாதாரத்திலும் தனி நபர்களிலும் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியிருக்கிறது. கடந்த அரசாங்கம் 2010 ஆம் ஆண்டுவரை சுமார் 23 பில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாகப் பெற்றுள்ளது. அந்தக் கடன் 2014 ஆம் ஆண்டு 46 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்திருக்கிறது. தற்போது அந்தத் தொகை இன்னும் பன்மடங்கு அதிகரித்திருக்கிறது. இது நாட்டின் ஒவ்வொரு பிரஜையையும் ஐந்து இலட்சம் ரூபா கடனாளியாக மாற்றியிருக்கிறது.

சில வெளிநாட்டுக் கடன்கள் வழமையாக 1%, 2% வட்டி அடிப்படையில் பெறப்படுவதுதான் வழக்கம். ஆனால், சீனாவிடமிருந்து 6% வட்டிக்கு கடன் பெறப்பட்டுள்ளது. எனவே, கடனை மீளச் செலுத்தும்போது பாரிய தொகை மீளச் செலுத்தவேண்டிய நிலை உருவாகியுள்ளது.

**எங்கள் தேசம்:** GSP பிளஸ் வரிச்சலுகை இலங்கைக்கு மீண்டும் வழங்கப்பட்டால் எவ்வாறான நன்மைகளை இலங்கை அடைந்து கொள்ளும்?

**கலாநிதி யூசுப் கே. மரைக்கார்:** GSP பிளஸ் என்றால், அபிவிருத்தி அடைந்து வரும் ஒரு நாட்டுக்கு ஐரோப்பிய சமூகம் 12% வரியினை அறவிடாமல் சந்தை வாய்ப்பை வழங்குவதாகும். GSP வரிச்சலுகை இல்லாத நாடுகளின் உற்பத்திப் பொருட்கள் ஐரோப்பிய சந்தைக்கு செல்லும்போது 12% விலை அதிகரிப்பு காணப்படும். சந்தை நிலைவரத்தின்படி பொருட்களின் விலை குறைந்தால் பொருட்களுக்கான கேள்வி அதிகரிக்கும். விலை அதிகரித்தால் கேள்வி குறையும். GSP பிளஸ் வரிச்சலுகை இன்மையால் இலங்கை போன்ற நாடுகளின் பொருட்களுக்கு கேள்வி குறைவடைந்துள்ளது. தைத்த ஆடைகளை ஏற்றுமதி செய்பவர்கள் இவற்றை ஓரளவு சமாளித்துக் கொண்டு வருகின்றார்கள். இந்த GSP பிளஸ் வரிச்சலுகை கிடைக்கப் பெற்றால் இலங்கையின் பொருளாதார நிலைமைகளில் மாற்றங்கள் ஏற்படும்.

**எங்கள் தேசம்:** ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையில் சட்ட விரோதமான முறையில் மீன்பிடி இடம்பெறுகிறது என மீன் ஏற்றுமதிக்கான தடையை விதித்திருந்தது. இக்குற்றச்சாட்டின் உண்மைத் தன்மை என்ன?

**கலாநிதி யூசுப் கே. மரைக்கார்:** சீன மீனவர்களோடு இலங்கை அரசாங்கம் மிதமான போக்கைக் கடைப்பிடித்தது. இதனால் சீனாவின் ஆழ்கடல் மீன்பிடிப் படகுகள் இலங்கையில் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டு சர்வதேச வர்த்தகத்துக்கு ஒரு வகையான தடையாகவும் சவாலாகவும் இருந்தன. இதுதான் இலங்கையின் மீன் ஏற்றுமதிக்கு சர்வதேசத் தடை விதிக்கப்பட காரணமாக அமைந்தது.

இதன் பின்னணியில் சர்வதேச அரசியல் விளையாட்டு இருக்கிறது. அமெரிக்கா போன்ற மேற்கத்திய நாடுகளுடன் இணங்கிப் போகின்றபோது ஒரு விடயத்தைப் பிழையாக செய்தாலும் அவை சரியாகவே பார்க்கப்படும். சீனா போன்ற நாடுகளுடன் உறவு வைத்துக் கொள்கின்றபோது மேற்கத்திய நாடுகளுக்கு அவை ஒரு வயிற்றெரிச்சலை ஏற்படுத்துகிறது. சீனா சர்வதேசத்தில் வல்லரசாக உருவாகும் நிலையை ஐரோப்பிய நாடுகள் விரும்பவில்லை. இலங்கை சீனாவுடன் வைத்திருக்கும் உறவுகளைக் கட்டுப்படுத்தி மேற்கத்திய நாடுகளுடன் சார்ந்திருக்க வேண்டும் என்பதற்காகக் கொண்டுவரப்பட்ட நடவடிக்கைகளே இவை. GSP பிளஸ் இனை இல்லாமல் செய்து, மீன்பிடித் தடைகளை ஏற்படுத்தி, இறப்பர் ஏற்றுமதியிலும் குறைபிடித்து இலங்கையின் வர்த்தக செயற்பாடு நேர்மையான முறையில் இல்லை என பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்து இலங்கைப் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தினார்கள்.

**எங்கள் தேசம்:** மீன் ஏற்றுமதித் தடை நீக்கப்பட்டால், இலங்கைக்கு என்ன வகையான நன்மைகள் கிடைக்கும்? மீன் ஏற்றுமதி இலங்கையின் பொருளாதாரத்தில் எவ்வாறான பங்களிப்பைச் செய்கிறது?

**கலாநிதி யூசுப் கே. மரைக்கார்:** இலங்கையின் மொத்த ஏற்றுமதியில் மீன் ஏற்றுமதி மூலமாக 3% வருமானம் இலங்கைக்குக் கிடைக்கிறது. 2010 ஆம் ஆண்டு ஐரோப்பிய நாடுகளுக்கு ஒரு மில்லியன் இரண்டு இலட்சத்து நாற்பத்தெட்டாயிரம் கிலோ மீன் ஏற்றுமதி செய்யப்பட்டு 14.3 மில்லியன் டொலர் வருமானமாகப் பெறப்பட்டது. ஆனால் ஐரோப்பிய ஒன்றியம் தடை விதித்ததன் பின்னர் 2011 ஆம் ஆண்டு 346,000 கிலோ ஏற்றுமதி செய்யப்பட்டு 3.57 மில்லியன் டொலர் பெறப்பட்டது.

2010 இல் 2 மில்லியன் 846 கிலோ ஏற்றுமதி செய்யப்பட்டு 18 மில்லியன் டொலர் பெறப்பட்டது. இலங்கையின் மொத்த மீன் ஏற்றுமதியில் பெரும்பகுதி ஐரோப்பிய நாடுகளுக்கே ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. இத்தடை மூலம் மீன் ஏற்றுமதி வீழ்ச்சியடைந்தது. அரசாங்கத்தின் முயற்சியினால் ஐரோப்பிய ஒன்றியத் தடை நீக்கப்படவுள்ளது. இதன் மூலம் இலங்கையின் மீன் ஏற்றுமதி மீண்டும் விருத்தியடையும் வாய்ப்புள்ளது.

**எங்கள் தேசம்:** இலங்கை-இந்தியா சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்குப் பிறகு எட்கா ஒப்பந்தம் வந்திருக்கிறது. எட்கா ஒப்பந்தத்தில் சேவைத் துறை பாதிப்படையப் போவதாக விமர்சனங்கள் எழுந்துள்ளன. இது பற்றித் தெளிவுபடுத்த முடியுமா?

GSP பிளஸ் என்றால், அபிவிருத்தி அடைந்து வரும் ஒரு நாட்டுக்கு ஐரோப்பிய சமூகம் 12% வரியினை அறவிடாமல் சந்தை வாய்ப்பை வழங்குவதாகும். GSP வரிச்சலுகை இல்லாத நாடுகளின் உற்பத்திப் பொருட்கள் ஐரோப்பிய சந்தைக்கு செல்லும்போது 12% விலை அதிகரிப்பு காணப்படும். சந்தை நிலைவரத்தின்படி பொருட்களின் விலை குறைந்தால் பொருட்களுக்கான கேள்வி அதிகரிக்கும். விலை அதிகரித்தால் கேள்வி குறையும். GSP பிளஸ் வரிச்சலுகை இன்மையால் இலங்கை போன்ற நாடுகளின் பொருட்களுக்கு கேள்வி குறைவடைந்துள்ளது.

# வடகிழக்கு முஸ்லிம்

**எங்கள் தேசம்:** சென்ற பாராளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் சில காலம் அமைதியாக இருந்தீர்கள். தற்போது மீண்டும் செயல்பாட்டு அரசியலுக்கு வந்திருக்கிறீர்கள். இது சம்பந்தமாக என்ன கூற விரும்புகிறீர்கள்?

**ஏ.எல்.எம். அதாஉல்லா:** நாங்கள் அமைதியாக இருந்து செயல்பாட்டு அரசியலுக்கு வந்தபின்னர் எம்மீது ஒரு பார்வை இருந்தாலும் நாங்கள் கட்சி என்ற அடிப்படையில் இந்த நாட்டின் அபிவிருத்திக்கும் சமூகத்திற்கும் தேவையான விடயங்களை செய்து கொடுத்திருக்கிறோம். கடைசியாக நடந்த தேர்தலிலே மக்கள் என்னையும் எனது கட்சியையும் புரிந்துகொள்ளாமல் இருந்தார்கள் என்பதை விடவும் புரிந்துகொள்ளாமல் இருப்பதற்கு சில கட்சிகள் முனைந்து வதந்திகளை கக்கியதன் மூலம் எங்களுடைய வாக்குகளில் குறைவு ஏற்பட்டு பாராளுமன்றத்திற்குப் போகாமல் இருந்திருக்கலாம். இருந்தாலும் கூட மக்கள் பணியை நாம் விட்டுவிடவில்லை. அரசியலில் மக்களுக்கு சேவை செய்வதற்கு கட்சி என்கின்ற அதிகாரமே போதுமானது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பாராளுமன்றத் தேர்தலிலும் சில அரசியல் கட்சிகளும் தலைவர்களும் மக்கள் முன்னிலையில் பல வாக்குறுதிகளை முன்வைத்துத்தான் வாக்குகளைப் பெற்றார்கள். பாராளுமன்றத் தேர்தலிலும் மக்களும் சிலவற்றை நம்பி வாக்களித்தார்கள். வாக்களித்த மக்கள் தமது வாக்குகளைப் பெற்றவர்களைப் புரிந்து கொள்வதற்கும் அவர்களால் என்ன நடக்கிறது என்பதைப் பார்ப்பதற்கும் சுமார் ஆறு மாதங்கள் இடைவெளியை வழங்கினோம். இந்தக் காலத்தில் உண்மை எது பொய் எது எங்கே நாங்கள் ஏமாற்றப்பட்டோம்; யாருடைய அரசியல் சரியானது என்பதை மக்கள் புரிந்துவருதைக் காண்கிறோம்.

**எங்கள் தேசம்:** கடந்த தேர்தல்களில் மஹிந்தவுடன் இணைந்திருந்தீர்கள். தற்போது மைத்திரி அணியுடன் இணைந்துள்ளீர்கள். இதன் மூலமாக நீங்களும் தேசிய காங்கிரஸும் மக்களுக்கு சொல்ல முனையும் செய்தி என்ன?

**ஏ.எல்.எம். அதாஉல்லா:** மைத்திரியின் மே தினக் கூட்டத்தில் நாங்கள் கலந்து கொண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலாநிதி யூசுப் கே. மரைக்கார்:** இந்தியாவுடன் செய்யும் வர்த்தகத் தொடர்புகள் இலங்கைக்கு சாதகமாக இருப்பதில்லை. இந்தியா எப்பொழுதும் சுயநலமான பொருளாதார நடவடிக்கைகளையே மேற்கொள்வது வழக்கம். இந்தியாவிலிருந்து 20% இறக்குமதியை மேற்கொள்கிறோம். இலங்கையிலிருந்து 6% ஏற்றுமதியே மேற்கொள்ளப்படுகிறது. 600 மில்லியன் டொலர்கள் பெறுமதியான பொருட்களை இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்கிறோம். மாறாக இந்தியாவிலிருந்து 3000 மில்லியன் டொலர்கள் பெறுமதியான பொருட்களை இறக்குமதி செய்கிறோம்.

எட்கா உடன்படிக்கை மூலமாக தகவல் தொழில் நுட்பத் துறையிலுள்ளவர்கள் இலகுவாக இலங்கையிலிருந்து இந்தியாவுக்கும் இந்தியாவிலிருந்து இலங்கைக்கும் வரக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாக சொல்லப்படுகிறது. இந்த ஒப்பந்தத்தின் நிபந்தனை யாருக்குமே தெரியாது. இரண்டு அரசாங்கங்களும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்கள். என்ன முறையில் இது நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்பது இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது.

இவ் ஒப்பந்தத்தின் மூலம் அதிகளவான இந்தியத் தொழிலாளர்கள் இலங்கைக்கு வரக்கூடிய சாத்தியம் காணப்படுகிறது. இதனால் வேலையில்லாப் பிரச்சினை இன்னும் அதிகரிக்கலாம்.

கூட்டங்களிலேயேதான் கலந்துகொண்டிருக்கிறேன். கடந்த வருட மே தினத்தில் மீண்டும் UPFA யினுடைய தலைவராக மைத்திரிபால வந்தபிறகு அந்த மேடைக்கு நான் போயிருந்தேன்.

கட்சியினுடைய கொள்கையின் அடிப்படையில் ரணில் தலைமை தாங்கும் ஐக்கிய தேசிய கட்சியினுடைய மே தினக் கூட்டத்திற்கு நான் செல்லவில்லை. முஸ்லிம்கள் சார்பாக ரிஷாத் பதியுதீனும் றஊப் ஹக்கீமும் ரணிலின் மேடையில் இருந்தார்கள். தலைவர் அஷ்ரபின் வஸியத்தின்படி அங்கே நான் செல்ல முடியாது. ஆகவே, நான் தொடர்ச்சியாக இருக்கின்ற மைத்திரியின் கட்சியினுடைய மே தினக் கூட்டத்திற்கே சென்றிருந்தேன். நாங்கள் தொடர்ந்து UPFA இல் தான் இருக்கிறோம். ஜனாதிபதி மைத்திரிதான் கட்சிக்கு வெளியே சென்று மீண்டும் உள்ளே வந்திருக்கிறார். மைத்திரிபால சிறிசேனவின் மேடைக்கு சென்றதன் மூலம் எங்களுடைய கொள்கைகளை, அரசியலை மாற்றி இருக்கிறோம் என்று யாரும் கருத முடியாது. நாங்கள் இருந்த இடத்திலேயே இருக்கிறோம். மைத்திரிபாலவும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினரும் விசுவாசம் உள்ள ஒருவனாக என்னைப் பார்ப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

**எங்கள் தேசம்:** அண்மையில் தேசிய காங்கிரஸ் மாநாட்டில் வெளியிடப்பட்ட பிரகடனத்தில் வடக்கு கிழக்கு இணைக்கப்பட்டால், முஸ்லிம் பெரும்பான்மையாகக் கொண்ட தனி மாகாணம் என்ற கோரிக்கை

வரைக்கும் தமிழ் சமூகம் நம்மைத் தனித்தரப்பாக ஏற்றுக்கொள்ளாத சூழ்நிலையில், என்னுடைய சமூகம் வடகிழக்கிலிருந்து கிழக்கைப் பிரிக்கக் கோரும் என தெரிவித்தார்.

எனவே, இணைப்பு பிரிப்பு என்பதை விடவும் நிரந்தரமாக இணைவதாக இருந்தாலும் வடக்கும் கிழக்கும் என்ன அடிப்படையில் இணைய வேண்டும் என்பதைப் பேசுவதற்காக அல்லது பேசுவதற்கு அடித்தளம் இடுவதற்காகவாவது பிரிந்திருக்க வேண்டுமென்று சில முயற்சிகளை எடுத்தோம். வடக்கு கிழக்கு ஏதோ ஒரு அடிப்படையில் பிரிந்திருக்கிறது. இப்போது வட மாகாணமும் கிழக்கு மாகாணமும் தனித்தனி மாகாணங்கள். அது பிரிந்தே இருக்கட்டும். இணைக்க வேண்டும் என தமிழர்கள் நினைத்தால் நாங்கள் பேசலாம். அந்தப் பேச்சுவார்த்தையில் மிக முக்கியமாக வடமாகாணத்தினுடைய முதலமைச்சர் தீர்மானங்கள் நிறைவேற்றியது போல் வடக்கையும் கிழக்கையும் இணைத்துவிட்டு எங்களுக்கு ஒரு சுய அலகு தருவதாக கூறுவது போன்ற பூச்சாண்டித்தனமான விடயங்கள் எல்லாம் அங்கு இருக்காது.

சமனான இரண்டு மாகாணங்கள் அங்கு உருவாக்கப்பட வேண்டும். அந்த சமனான இரு மாகாணங்கள் உருவாக்கப்படுவதற்கு ஏற்றவாறு வடகிழக்கு, வடமத்திய, ஊவா மாகாணங்களுடைய எல்லைகளும் மீளமைக்கப்பட்டு சில சிங்களப் பிரதேசங்கள் ஊவா, வடமத்திய மாகாணங்களுக்குள் உள்வாங்கப்பட்டு அதாவது, பிபிலை, பொலன்னறுவை போன்ற பிரதேசங்களுடன் இணைக்கப்பட வேண்டும். திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் தமிழ் பிரதேசங்களை வடமாகாணத்தோடு இணைத்து பெரும்பான்மை தமிழ் மாகாணசபையும் பெரும்பான்மை


குள்ள பிரச்சினை. கட்சி என்பது காலத்தின் தேவை. ஒரு நல்ல தலைமையை ஏன் சமூகத்தால் கண்டுபிடிக்க முடியாது? புத்திஜீவிகள் ஒன்றிணைந்து இந்தக் கட்சிகளை வழிநடத்த வேண்டும். அல்லாஹ்வுக்குப் பயந்து, சமூகத்திற்குப் பயந்து, உண்மைக்குப் பயந்து யார் செயல்படுவார்கள் என்பதை அடையாளம் காண வேண்டும். அவ்வாறான தலைமையின் கீழ் அனைவரையும் ஒன்றுபடுத்த வேண்டும்.

**எங்கள் தேசம்:** வடகிழக்கு பிரிய வேண்டும் என்று தேசிய காங்கிரஸ் சொல்கிறது. வடகிழக்கு இணைந்திருக்க வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் அண்மைக்காலமாக சொல்லி வருகிறது. இந்த முரண்பட்ட கருத்துக்குக் காரணம் என்ன?

**ஏ.எல்.எம். அதாஉல்லா:** முஸ்லிம் காங்கிரஸினால் பேசப்படுகின்ற இவ்வாறான விடயத்தினால்தான் முஸ்லிம் காங்கிரஸின் தலைமைக்கும் எனக்கும் பிரச்சினை ஏற்படுகின்றது. தலைவர் அஷ்ரப் சொன்னார் ரணில் விக்கிரமசிங்கவிற்குப் பின்னால் போகக் கூடாது என்று. ஹக்கீம் அதை உள்வாங்கவில்லை. ரணில் விக்கிரமசிங்கவை அதிகாரத்திற்குக் கொண்டுவந்து நோர்வேயுடன் ஒப்பந்தமொன்றைச் செய்தார். அதில் நாங்கள் தெளிவாகக் காட்டிக்கொடுக்கப்

நேர்காணல்: ஐ.எம். இர்சாத்
படம்: எப்.எம். பயாஸ்

# த இணைப்பு என்பது
# களுக்குப் போடப்பட்ட விலங்கு



இலங்கை–இந்தியா ஒப்பந்தத்தின் அடிப்படையில் வடகிழக்கு வலுக்கட்டாயமாக இணைக்கப்பட்டது. இந்த அடிமைச் சாசனத்திலிருந்து மீட்சி பெறவேண்டும் என்பதற்காக தலைவர் அஷ்ரப் முஸ்லிம் காங்கிரஸை உருவாக்கினார். வடகிழக்கு இணைப்பு என்பது தற்காலிகமான இணைப்பு என்றாலும் அது முஸ்லிம்களுக்குப் போடப்பட்ட பாரியதொரு விலங்கு. இதனை உடைப்பதற்கான போராட்டத்தில் அஷ்ரப் முழு மூச்சான பங்களிப்புகளை செய்து கொண்டுபோனார் என தேசிய காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஏ.எல்.எம். அதாஉல்லா தெரிவித்தார். அவருடனான நேர்காணலை தொகுத்துத் தருகின்றோம்.

## ஏ.எல்.எம். அதாஉல்லா

டது ஒரு ஆச்சரியமான விடயமல்ல. தலைவர் காலத்தில், ஐக்கிய தேசியக் கட்சியுடைய சாரதியாக ரணில் விக்கிரமசிங்க இருக்கும் வரை ஐக்கிய தேசியக் கட்சி என்ற பஸ்ஸில் நானும் ஏறமாட்டேன்; முஸ்லிம் சமூகமும் ஏற மாட்டாது என எங்களுக்கு வஸிய்யத் செய்திருந்தார். நான் என்னுடைய தலைவரைப் பின்பற்றும் ஒருவன். 2003 இல் ஹக்கீம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு போன போது பாரிய முரண்பாடுகளுக்கு மத்தியில்தான் சென்றேன். அந்த நேரத்தில்தான் நோர்வே ஒப்பந்தம் இடம்பெற்றது. அதில் முஸ்லிம்கள் காட்டிக் கொடுக்கப்பட்டார்கள். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக ரணில் இருக்கும் வரை அக் கட்சியுடன் இணைய மாட்டோம்.

தலைவர் அஷ்ரபுடன் இணைந்து சந்திரிக்காவை இரண்டு தடவை ஜனாதிபதியாக்குவதற்கு பொத்துவில் தொகுதியின் பிரதிநிதியாக பாடுபட்டிருக்கிறேன். அதன் பிறகு மஹிந்த ராஜபக்ஷவினுடைய தேர்தல்களில்

முன்வைக்கப்பட்டுள்ளது. இதிலுள்ள சாத்தியங்களை தெளிவுபடுத்த முடியுமா?

**ஏ.எல்.எம். அதாஉல்லா:** இலங்கை-இந்தியா ஒப்பந்தத்தின் அடிப்படையில் வடகிழக்கு வலுக்கட்டாயமாக இணைக்கப்பட்டது. இந்த அடிமைச் சாசனத்திலிருந்து மீட்சி பெறவேண்டும் என்பதற்காக தலைவர் அஷ்ரப் முஸ்லிம் காங்கிரஸை உருவாக்கினார். வடகிழக்கு இணைப்பு என்பது தற்காலிகமான இணைப்பு என்றாலும் அது முஸ்லிம்களுக்குப் போடப்பட்ட பாரியதொரு விலங்கு.

**மைத்திரிபால சிறிசேனவின் மேடைக்கு சென்றதன் மூலம் எங்களுடைய கொள்கைகளை, அரசியலை மாற்றி இருக்கிறோம் என்று யாரும் கருத முடியாது. நாங்கள் இருந்த இடத்திலேயே இருக்கிறோம். மைத்திரிபாலவும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினரும் விசுவாசம் உள்ள ஒருவனாக என்னைப் பார்ப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.**

பிரதிநிதியாக இருந்திருக்கிறேன். கடைசியாக நடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் கூட அவருடைய பிரதிநிதியாக இருந்தேன். UPFA என்ற கட்சியின் தீர்மானத்தின் கீழ் நான் தொடர்ந்து செயல்பட்டு வந்தேன். ஆனால், மைத்திரிபால சிறிசேன UPFA யிலிருந்து பிரிந்து சென்று ஜனாதிபதித் தேர்தலிலே போட்டியிட்டார். அவர் பிரிந்து சென்றதினால் இன்னுமொரு கட்சி உருவாகியிருந்து, அந்தக் கட்சி மேடைக்கு நான் போயிருந்தால் தான் இது ஒரு கேள்வியாக இருந்திருக்கும். என்னைப் பொறுத்தவரை தொடர்ச்சியாக 15 ஆண்டுகளுக்கு மேல் UPFA இன் மே தினக்

இதனை உடைப்பதற்கான போராட்டத்தில் அஷ்ரப் முழு மூச்சான பங்களிப்புகளை செய்தார்.

அதனைத் தொடர்ந்து நாங்களும் வடகிழக்கைப் பிரிக்க வேண்டும் என்பதிலேயே கவனமாக இருந்து வந்தோம். தலைவர் அஷ்ரப், தான் வாழுகின்ற காலத்தில் பாராளுமன்றத்திற்குள்ளும் வெளியிலும் கருத்துத் தெரிவிக்கும்போது, வடகிழக்கு இணைவதாக இருந்தால் நிபந்தனையோடு இணையட்டும். அதற்கான பேச்சுவார்த்தைகளை பேசுங்கள் என தமிழர்களுக்கு பல சந்தர்ப்பங்களில் அறைகூவல் விடுத்தார். ஆனால், கடைசி

முஸ்லிம் மாகாணசபையையும் உருவாக்குவதன் மூலம் தமிழ் பேசுகின்ற இரண்டு மாநிலமும் தமிழ் பேசுகின்ற இரண்டு முதலமைச்சர்களும் உருவாவதை எல்லோரும் வரவேற்பார்கள் என நினைக்கிறேன். குறிப்பாக, தமிழ் மக்கள் இதனை நிராகரிக்க மாட்டார்கள் என நம்புகிறேன்.

**எங்கள் தேசம்:** பிரிந்து கிடக்கும் முஸ்லிம் கட்சிகள் ஓர் அணியாக இணைந்தால் முஸ்லிம்களின் அடைவு எல்லை வியாபிக்கும் என்பதை எவ்வாறு பார்க்கிறீர்கள்?

**ஏ.எல்.எம். அதாஉல்லா:** முஸ்லிம் சமூகம் ஒன்றுபடுவதன் மூலம் நாங்கள் சாதிக்கலாம் என்பதற்கு அஷ்ரப் அவர்கள் ஒரு சான்று. அவருடைய முன்னுதாரணம் எங்களுக்கு இருக்கிறது. ஆனால், ஒற்றுமைப்படுவது என்பது இஸ்லாமிய முறைப்படி நாங்கள் கருதுகின்ற ஒரு அமீருடைய தலைமையின் கீழ் இருப்பதன் மூலம் அதை சாதிக்க முடியும்.

அஷ்ரப் அவர்களை அவர் ஒரு சட்டத்தரணி மற்றும் அழகானவர் என்பதற்காக நாங்கள் விரும்பவில்லை. சமூகத்தின் முழுப் பொறுப்பையும் தனது தலையிலே சுமந்த ஒருவர். உரிய நேரத்திலே சமூகத்திற்காகக் குரல் கொடுத்து பாரிய திருப்புமுனையை இந்த நாட்டிலே ஏற்படுத்தியவர் என்பதற்காக நேசித்தோம். கட்சி என்பதல்ல இங்

பட்டோம். முஸ்லிம்கள் என்ற பெயரில் எங்களைக் குறிப்பிடாமல் வடகிழக்கில் வாழுகின்ற சிறு குழுக்கள் என எங்களுக்கு அடையாளம் சொல்லப்பட்டிருந்தது. ஏற்கனவே ஒரு கட்டத்தில் இஸ்லாமிய தமிழர்கள் என எங்களுக்கு முத்திரை குத்தப்பட்டிருந்தது. இவற்றையெல்லாம் தடுக்கமுடியாமல் போனதால்தான் நாங்கள் வளர்த்த கட்சியை விட்டு தலைவருடைய மக்களாக வெளியேறினோம்.

இப்பொழுதுள்ள பிரச்சினை இதுதான். ஹக்கீமை ஏதோ ஒரு சக்தி ஆட்டிக்கொண்டிருக்கிறது. அன்று நோர்வேயும் அமெரிக்காவும் சேர்ந்துதான் இவ்வளவு சிக்கலை உருவாக்கினார்கள் என்பதை நாங்கள் உணர்ந்திருக்கிறோம். இன்றைக்கும் அதே நோர்வேகாரர்களும் அதே விடுதலைப்புலிகளுக்கு சார்பானவர்களும் கடல் கடந்த புலிகளும் வடகிழக்கு இணைவு தொடர்பாக பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

ஹக்கீம் வடக்கு கிழக்கு இணைய வேண்டும் என்று சொல்வதற்கான காரணம் முஸ்லிம் மக்கள் மீது கொண்ட அக்கறையோ, நாட்டின் மீது கொண்ட அக்கறையோ அல்ல. இவருக்குப் பின்னால் யாரோ எஜமானர்கள் இருக்கிறார்கள். அந்த எஜமானர்களிடமிருந்து இவரால் விலக முடியாமல் இருக்கிறது என்பதைத் தவிர வேறொன்றும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செப்டெம்பர் 11 தாக்குதல்: அமெரிக்க-சஊதி முரண்பாடு வலுக்கிறது



லத்தீப் பாரூக்

அமெரிக்க காங்கிரஸ் இஸ்ரேலுக்கு உதவும் விடயத்தில் வெறித்தனமாக செயற்பட்டு வருகின்றது. முன்னாள் ஜனாதிபதி றொனால்ட் றேகன் ஒரு தடவை நிகழ்த்திய உரையில் ''அமெரிக்க காங்கிரஸ் ஒரு சியோனிஸ ஆக்கிரமிப்பு பிரதேசம்'' என்று குறிப்பிட்டிருந்ததாக பெட் புச்சனன் என்ற எழுத்தாளர் ஓர் இடத்தில் குறிப்பிட்டுள்ளார்.

செப்டம்பர் 11 தாக்குதல் முடிவடைந்து 15 வருடங்கள் கழிந்துள்ள நிலையில், அமெரிக்க காங்கிரஸ் அந்த சம்பவத்தோடு தொடர்புடைய ஒரு சட்டமூலத்தை நிறைவேற்றும் முயற்சியில் இறங்கியுள்ளது. இந்த சம்பவத்தால் பாதிக்கப்பட்ட அமெரிக்கர்கள் அதனோடு தொடர்புடையதாகக் கருதப்படும் வெளிநாடுகள் மீது வழக்குத் தொடர வழியமைப்பதே இந்த சட்டமூலமாகும். பயங்கரவாத அனுசரணைக்கு எதிராக நீதி கோரும் சட்ட மூலம். Justice Against Sponsors of Terrorism Act, (JASTA) என்று இது அழைக்கப்படுகின்றது. இந்த சட்டமூலத்தின் படி செப்டம்பர் 11 தாக்குதல் தொடர்பாக சஊதி அரசாங்கத்துக்கு எதிராகவும் யாரும் வழக்குத் தொடரலாம்.

செப்டம்பர் 11 தாக்குதல் தொடர்பாக இதுவரை எவரும் சஊதி அரேபியா மீது உத்தியோகபூர்வமாக எந்த குற்றச்சாட்டையும் முன்வைக்கவில்லை. எதுவிதமான சட்ட நடவடிக்கையையும் யாரும் எடுக்கவில்லை. இந்தச் சம்பவத்தோடு தனக்கு எந்த விதமான தொடர்பும் இல்லை என்பது தான் ஆரம்பம் முதலே சஊதி அரேபியாவின் உறுதியான நிலைப்பாடு. ஆனால், இந்தச் சம்பவத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் 15 பேர் சஊதி அரேபிய பிரஜைகள். இதையும் கூட சஊதி அரேபியா இராஜதந்திர ரீதியாக மறுத்தே வந்துள்ளது. இந்த 15 பேரும் அமெரிக்காவின் இரகசிய முகவர்கள் என்ற ஒரு குற்றச்சாட்டும் உள்ளது.

2004 ல் வெளியான செப்டம்பர் 11 தாக்குதல் விசாரணைக் குழு அறிக்கையிலும் கூட ''சஊதி அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்ட எந்த விதமான ஆதாரமும் இல்லை'' என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த விசாரணை அறிக்கை 28 பக்கங்களைக் கொண்டது. இதில் இந்த தாக்குதலில் சஊதி அரேபியாவின் பங்கு தெளிவுபடுத்தப்படாத வகைப்படுத்தலின் கீழேயே உள்ளது.

இந்த 28 பக்க அறிக்கையை வெளியிடுமாறு சஊதி அதிகாரிகள் அமெரிக்காவை வலியுறுத்தியுள்ளனர். தங்களைப் பாதுகாத்துக் கொள்ள அல்லது குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுவித்துக் கொள்ள இந்த அறிக்கையின் வெளியீடு உதவும் என்பதுதான் சஊதி அதிகாரிகளின் வாதம். ஆனால், அன்றைய புஷ் நிர்வாகம் அதனைத் தொடர்ந்து மறுத்து வந்தது. இன்று ஒபாமா நிர்வாகமும் அதனையே தொடருகின்றது.

இந்நிலையில்தான் மேற்படி சட்டமூலத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து சஊதி ஆட்சியாளர்கள் அமெரிக்காவில் உள்ள தங்களது 750 பில்லியன் டொலர் பெறுமதியான சொத்துக்களை விற்று விடப் போவதாக அச்சுறுத்தி உள்ளனர்.

செப்டம்பர் 11 தாக்குதல் இடம்பெற்று 15 வருடங்கள் கழிந்துள்ள நிலையில் ஏன் அமெரிக்கா இவ்வாறான ஒரு மசோதாவை இப்போது கொண்டு வர முனைகின்றது என்பதும் கவனம் செலுத்தப்பட வேண்டிய ஒரு விடயமாகும். பெரும்பாலும் அமெரிக்க காங்கிரஸ் அதன் யூத எஜமானர்களுக்காக ஒரு மோசமான கைங்கரியத்தை நிறைவேற்ற முனைகின்றது என்றுதான் கூற வேண்டும். சஊதிக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவுகள் தற்போது சற்று மோசமடையத் தொடங்கியுள்ள நிலையில், சஊதி அரேபியாவை அச்சுறுத்தும் ஒரு முயற்சியாகவே இந்த மசோதாவை நிறைவேற்ற அமெரிக்க காங்கிரஸ் முனைகின்றது.

அமெரிக்க காங்கிரஸ் இந்த மசோதாவை முன்னெடுக்கக் கூடாது என ஒபாமா நிர்வாகம் அவர்களிடம் வேண்டுகோள் விடுக்கத் தொடங்கியுள்ளது. கடல் கடந்த நாடுகளில் அமெரிக்காவை இது சட்டரீதியான சர்ச்சைக்கு உள்ளாக்கலாம் என்பதுதான் ஒபாமா நிர்வாகத்தின் வாதமாகும். இந்த சட்டமூலம் அமெரிக்காவுக்கு பொருளாதார ரீதியான ஆபத்துக்களை கொண்டு வரக் கூடும் என அமெரிக்க ராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளும் பெண்டகன் அதிகாரிகளும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

**செப்டம்பர் 11 தாக்குதல் இடம்பெற்று 15 வருடங்கள் கழிந்துள்ள நிலையில் ஏன் அமெரிக்கா இவ்வாறான ஒரு மசோதாவை இப்போது கொண்டு வர முனைகின்றது என்பதும் கவனம் செலுத்தப்பட வேண்டிய ஒரு விடயமாகும். பெரும்பாலும் அமெரிக்க காங்கிரஸ் அதன் யூத எஜமானர்களுக்காக ஒரு மோசமான கைங்கரியத்தை நிறைவேற்ற முனைகின்றது என்றுதான் கூற வேண்டும். சஊதிக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவுகள் தற்போது சற்று மோசமடையத் தொடங்கியுள்ள நிலையில், சஊதி அரேபியாவை அச்சுறுத்தும் ஒரு முயற்சியாகவே இந்த மசோதாவை நிறைவேற்ற அமெரிக்க காங்கிரஸ் முனைகின்றது.**

செப்டம்பர் 11 தாக்குதல் தொடர்பான பல சுயேச்சையான அறிக்கைகளின் பிரகாரம் அமெரிக்க புலனாய்வுப் பிரிவினதும் இஸ்ரேலின் மொஸாட் அமைப்பினதும் கூட்டுச் சதிதான் இந்த தாக்குதல் என்று பல இடங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம்கள் மீது இந்தக் குற்றச்சாட்டை சுமத்தி பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தம் என்ற பெயரில் மத்திய கிழக்கில் உள்ள முஸ்லிம் நாடுகளை ஆக்கிரமித்து அழித்து அவற்றை ஆட்டம் காணச் செய்து இஸ்ரேலின் ஆதிக்கத்தை அந்தப் பிராந்தியத்தில் நிலை நிறுத்துவதுதான் இதன் முக்கிய நோக்கம். இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செப்டெம்பர் 11 தாக்குதல் பற்றிய பொய்களையும் ஏமாற்று வித்தைகளையும் விற்பனை செய்வதிலும் பரப்புவதிலும் சியோனிஸ கட்டுப்பாட்டில் உள்ள மேலைத்தேய ஊடகங்கள் தீர்க்கமான பங்கினைச் செலுத்தின.

இந்த இலக்கு ஏற்கனவே அடையப்பட்டு விட்டது. அதனால் மத்திய கிழக்கு இன்று கொலைக்களமாக மாறியுள்ளது.

1978 முதல் கறுப்பு இன தேசியத்தோடு இஸ்லாத்தை இணைக்கும் பணியில் ஈடுபட்டு வரும் ஆபிரிக்க - அமெரிக்க இயக்கமான நேஷன் ஒப் இஸ்லாம் அமைப்பின் தலைவரான லூயிஸ் பரக்கான் என்பவர் தயாரித்துள்ள ஒரு சுயாதீன அறிக்கையின் பிரகாரம் செப்டம்பர் 11 தாக்குதலில் அமெரிக்க-இஸ்ரேல் ஈடுபாடு தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

இது பற்றி மிக அண்மையில் வெளியான ஒரு தகவலின்படி, சகல அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவுகளுக்கும் தலைமை தாங்கிய அமெரிக்க இராணுவத்தின் மேஜர் ஜெனரல் அல்பர்ட் என் ஸ்டபிலிபைன் 9/11 தாக்குதல் ஒரு மோசடி என்று மிகவும் துணிச்சலாகவும் தெளிவாகவும் குறிப்பிட்டுள்ளார். இதில் அமெரிக்க-இஸ்ரேல் கூட்டு பங்கு பற்றியும் அவர் தெரிவித்துள்ளார்.

இவரின் கருத்துப்படி, அன்றைய தினம் அமெரிக்க இராணுவத் தலைமையகமான பெண்டகன் மீது ஒரு விமானம் மோதவில்லை அல்லது விமானத் தாக்குதல் இடம்பெறவில்லை. உலக வர்த்தக மையக் கட்டிடம் வெடிபொருட்களால் நடத்தப்பட்ட தாக்குதலிலேயே அழிந்தது. அமெரிக்காவில் ஊடகங்கள் சுதந்திரமாக இல்லை. அவை கட்டுப்பாட்டில்தான் உள்ளன. ஒரு மோசமான விமானி பெண்டகனின் கணக்கு அலுவலகத்தைத் தாக்கினார். அதற்குக் காரணம் அங்கு வைக்கப்பட்டிருந்த மூன்று டிரில்லியன் டொலர் பெறுமதியான எண்ணெய் மோசடி தொடர்பான ஆவணங்களையும் 2.3 டிரில்லியன் டொலர் பெறுமதியான பாதுகாப்புச் செலவின மோசடிகள் பற்றிய ஆவணங்களையும் அழிப்பதுதான்.

இது தொடர்பான எல்லாத் தடயங்களையும் அமெரிக்க சமஷ்டி புலனாய்வு பிரிவு (FBI) திரட்டிக் கொண்டது. ஆனால், அவர்கள் அதை வெளியிடவில்லை என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சட்டவிரோத மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட தனிநபர்கள், நிறுவனங்கள் பற்றிய தகவல்களும் அவற்றின் குற்றப் பின்னணிகளும் ஏற்கனவே விசாரணையாளர்களுக்கு கிடைத்திருந்தன. ஆனால், உலக வர்த்தக மையம் 9/11 இல் தேர்மைட் வெடிபொருட்கள் கொண்டு அழிக்கப்பட்டபோது அவை எல்லாமே அழிந்து போய் விட்டன.

ஆனால், மக்களுக்கு அதிர்ச்சியூட்டும் வகையில் ஒரு திரைப்பட பாணியில் எல்லாமே நடத்தி முடிக்கப்பட்டன. இந்த சூட்டோடு சூடாக எண்ணெய் வள நாடுகளை ஆக்கிரமிக்கும் உரிமைச் சட்டமும் அமுல் செய்யப்பட்டு ஹெலிபேர்டன் போன்ற தனியார் கம்பனிகளுக்கு பணம் ஈட்டுவதற்கான வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. வெறுமனே பத்து டொலர்களாக இருந்த இந்தக் கம்பனியின் ஒரு பங்கு ஒரேயடியாக ஐம்பது டொலர்களானது.

உலக வர்த்தக மையம் அழிக்கப்பட்டதன் மூலம் பில்லியன் கணக்கான டொலர்கள் பெறுமதியான நிதி மோசடிகள் பற்றிய தகவல்களும் சட்டவிரோத நிதிப் பரிமாற்ற ஆவணங்களும் மண்ணோடு மண்ணாகப் புதையுண்டு போய்விட்டன.

சியோனிஸ மாபியாக்களின் ஏமாற்று வித்தைகளுக்கும் அவர்களது ஊடகப் பொய்களுக்கும் அமெரிக்கா பலியாகிவிட்டதாக அமெரிக்க திறைசேரியின் முன்னாள் உதவிச் செயலாளர் டொக்டர் போல் கிரெயிக் ரொபர்ட்ஸ் தெரிவித்துள்ளார்.

மாபியா குற்றப் பின்னணிக்கு எதிராக அமெரிக்கா எழுந்து நிற்க வேண்டும். இந்தக் குழு மனிதாபிமானத்துக்கு எதிராக ஒரு பொலிஸ் உளவு ராஜ்ஜியத்தை நடத்தி வருகின்றது. குறிப்பாக யூதர்கள் அல்லாத அமெரிக்கர்கள் இதில் இலக்கு வைக்கப்பட்டுள்ளனர். 1900 ஆம் ஆண்டு முதல் இற்றை வரை யூதர்கள் அல்லாத இலட்சக் கணக்கானவர்கள் இதில் கொல்லப்பட்டுள்ளனர் என்று ரொபர்டஸ் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

→ 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோர்தான் இஸ்லாமியவாதிகளைக் குதறும் பிரித்தாளும் சூத்திரம்



ஸகி பவ்ஸ் (நளீமி)

அல்இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தின் ஜோர்தான் கிளையை சட்டபூர்வமற்ற அமைப்பாக அரசாங்கம் பிரகடனம் செய்துள்ளது. இதனடிப்படையில் கடந்த ஏப்ரல் 7 ஆம் திகதி நடைபெறவிருந்த 53 உயர் மட்ட உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தலை நடத்துவது சட்டவிரோதமானது என ஜோர்தான் பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது. அம்மான், கராக், மப்ராக் போன்ற நகரங்களில் அமைந்துள்ள அல்இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தின் பிரதான காரியாலயங்கள் அடித்து நொறுக்கப்பட்டதுடன், அதன் சொத்துக்களும் பறிமுதல் செய்யப்பட்டு விட்டன.

பிரபல 'த அட்லான்டிக்' சஞ்சிகைக்கு மன்னர் இரண்டாம் அப்துல்லாஹ் அளித்த பேட்டியில் "Masonic Cult" (மாசோனியக் கும்பல்) என அல்இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தை விமர்சித்தமையும் நோக்கத்தக்கது. இயக்கத்தின் மேல்மட்ட பிரதான புள்ளிகளை வெவ்வேறு நியாயங்களை காட்டிக் கைது செய்யும் படலத்தையும் மன்னர் அப்துல்லாஹ் மேற்கொண்டு வருகிறார். பேஸ்புக் பக்கத்தில் ஜோர்தான்-ஐக்கிய அரபு இராச்சிய உறவை விமர்சிக்கும் விதமாக பதிவிட்டார் என்ற குற்றச்சாட்டில் பிரதான வழிகாட்டல் குழு உறுப்பினர் ஸகி இர்ஷாத் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஏனைய அரபு நாடுகளைப் போன்றே பலமான மக்கள் பலம் கொண்ட இயக்கமாக ஜோர்தான் இஹ்வான்களது கிளை கருதப்படுகிறது. சமீபத்தில் வெளியிடப்பட்ட நிவ்யோர்க் டைம்ஸ் பத்திரிகையின் கணிப்பீட்டின் படி கிட்டத்தட்ட 30 வீதமான ஜோர்தான் மக்கள் அல்இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தை ஆதரிப்பதாகவும் அதன் ஆதரவாளர்களது எண்ணிக்கை ஒரு மில்லியனைத் தாண்டிச் செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.

**ஐ.எஸ். வன்முறையாளர்கள், மன்னராட்சிகள் மற்றும் மேற்குலகம் என மூன்று சாராரிடமும் இஸ்லாமியவாதிகள் அகப்பட்டுக் கொண்டுள்ளனர். மூன்று தரப்பினரும் வெவ்வேறான நியாயங்களுக்காக இஸ்லாமியவாதிகளை ஒடுக்குகின்றனர்.**

சட்ட யாப்புடன் கூடிய மன்னராட்சி நாடான (Constitutional Monarch) ஜோர்தான் அரசியலில் பலமான எதிர்க் கட்சியாகவும் ஜோர்தான் கிளை இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தின் அரசியல் கட்சியான "Islamic Action Front" நோக்கப்படுகிறது. 1946 இல் நிறுவபட்ட ஜோர்தான் இஹ்வான்களது கிளை அன்று முதல் மன்னருடன் சுமுகமான உறவையும் அரசியல் சமூகத்தளத்தில் மாற்றங்களையும் இலக்காகக் கொண்டும் செயற்பட்டு வருகின்றது. ஜோர்தான் இஹ்வான்களது கிளையை ஆரம்பித்து வைத்தவர் தற்போதைய மன்னர் இரண்டாம் அப்துல்லாஹ்வின் தந்தை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஆனால், 1994 இல் ஜோர்தான்-இஸ்ரேல் சமாதான ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இஸ்லாமியவாதிகளை கட்டம் கட்டமாக அடக்கும் வியூகத்தை மன்னர் பின்பற்ற வேண்டியேற்பட்டது. 2013 க்கு பிற்பட்ட ஐ.எஸ். அமைப்பின் எழுச்சி மற்றும் சிரிய யுத்தம், எகிப்தின் இராணுவப் புரட்சி ஏற்படுத்திய இஸ்லாமியவாதிகளுக்கு எதிரான சூழமைவுகளை பயன்படுத்தி முழுமையாகவே இஹ்வான்களை ஓரங்கட்டுவதற்கு மன்னர் இரண்டாம் அப்துல்லாஹ் காய்நகர்த்தி வருவது பட்டவர்த்தனமானது.



எகிப்தைப் போலன்றி இஸ்லாமியவாதிகளை ஒடுக்குவதற்கு அதிசாமர்த்தியமான அணுகுமுறைகளை ஜோர்தான் மன்னரும் உளவுப் பிரிவுகளும் பின்பற்றி வருகின்றன. அதனடியாக, அல்இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்கத்திற்குள் பிளவுகளை ஏற்படுத்தல் மற்றும் பழைய இஹ்வான்களது கிளையை சட்ட பூர்வமற்றதாகவும் புதிய கிளையொன்றை உருவாக்கி அதனை சட்டரீதியானதாகவும் பிரகடனம் செய்திருக்கிறது. இயக்கத்திற்குள் காணப்படும் கருத்து முரண்பாடுகளை, கட்டமைப்பு சிக்கல்களை மற்றும் கொள்கைத் தீர்மானங்கள் தொடர்பான முரண்பாடுகளை இஹ்வான்களை பலவீனப்படுத்துவதற்காக உளவுப் பிரிவு பயன்படுத்தி வருகிறது.

தேசியப் பிரச்சினைகளுக்கு இஸ்லாமிய இயக்கம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்ற இலக்குடன் சில இஹ்வான் முன்னணி உறுப்பினர்கள் வேலைத் திட்டமொன்றை ஆரம்பித்தனர். அதற்கு ஸம்ஸம் நிகழ்ச்சித் திட்டம் என்று பெயரிடப்பட்டுள்ளது. அதேநேரம், உயர் வழிகாட்டல் குழுவிலிருந்த ஏனைய பல உறுப்பினர்கள் இதனை எதிர்த்தனர். இதனை சந்தர்ப்பமாகப் பயன்படுத்திய ஜோர்தான் உளவுப் பிரிவு இஹ்வான்களது உயர்மட்டத்தில் பாரிய பிளவுகளை ஏற்படுத்தி விட்டது. பல உயர்மட்ட வழிகாட்டல் குழு உறுப்பினர்கள் புதியதோர் இயக்கத்தை அல்இஹ்வானுல் முஸ்லிமூன் என்ற பெயரில் பதிவு செய்யும் அளவுக்கு நிலைமை மோசமானதாக மாறிவிட்டது. முன்னாள் உயர் வழிகாட்டல் குழுத் தலைவர் புதிய இஹ்வான் கிளையின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். ஜோர்தான் மன்னரும் உளவுப் பிரிவும் புதிய பிரிவை விசிலடித்து வரவேற்றன. அதனைத் தொடர்ந்து பழைய கிளையை சட்டபூர்வமற்ற அமைப்பாகவும் புதிய கிளையை சட்டபூர்வமானதாகவும் அரசு அங்கீகரித்துள்ளதாக அரசாங்க அறிக்கை வெளியிடப்பட்டது. பழைய கிளையின் அனைத்து சொத்துக்களும் புதிய கிளைக்கே சொந்தமானது என்றும் கூறியது.

இம்மாற்றங்களை நுணுக்கமாக அவதானிக்கும் பட்சத்தில், எதிர்க்கட்சி இஸ்லாமியவாதிகள் இஹ்வான்களே என்ற தனியுடமையை மௌனமாக மன்னரது அரசமாளிகையும் உளவுப் பிரிவும் தகர்த்து வருவதனை அவதானிக்க முடியும். அதாவது, மன்னரின் எதேச்சதிகாரத்திற்கு எதிராக மக்களை ஒன்றுதிரட்டக் கூடிய வலிமைமிக்க இஸ்லாமியவாதிகளை மெதுவாக சிதறடிக்கும் முயற்சியாக இத்தகைய பிரித்தாளும் கொள்கைளை (Divide and Rule) கூற முடியும்.

மறுபுறம், சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு பல மாற்றங்களை நோக்கி ஜோர்தான் இஹ்வான் முஸ்லிமூன் இயக்கம் நகர வேண்டிய தேவையும் காணப்படுகின்றது. அதாவது, இயக்க உட்கட்டமைப்பு, அது முன்வைக்கும் கருத்தியல் மற்றும் அரசியல், தஃவா சார் நடவடிக்கைகளை மீள்பரிசீலனை செய்தல் என்பன இஹ்வான்களின் நிகழ்ச்சி நிரலில் இடம்பெற வேண்டிய பிரதானமான அம்சங்களாகும். ஏனெனில், இஸ்லாமிய இயக்கத்தின் உள்ளக முரண்பாடுகளும் ஒரு வகையில் மன்னருக்கும் உளவுப் பிரிவுக்கும் தமது கையாடல்களை மேற்கொள்வதற்கு துணை செய்துள்ளன. உட்கட்டமைப்பு என்று கூறும் போது தஃவா சார்ந்த செயற்பாடுகளும் அரசியல் சார்ந்த செயற்பாடுகளும் வெவ்வேறாக முன்னெடுக்கப்பட வேண்டும் என ஜோர்தான் இஹ்வான்களை பலரும் வலியுறுத்தி வருகின்றனர். [illegible] அரசியல் கட்சியான இஸ்லாமிக் எக்ஷன் புரொன்டின் செயற்குழுவில் தஃவா இயக்கதின் 20 வீதமானவர்கள் காணப்படுகின்றனர். அதேபோன்று, ஏனைய செயற்குழு உறுப்பினர்களையும் கூட இயக்கத்தின் உயர் வழிகாட்டல் (மக்தபுல் இர்ஷாத்) குழுவே பிரேரிக்கின்றமை பல்வேறு முரண்பாடுகளைத் தோற்றுவித்துள்ளது. அரசியல் ரீதியாக இஸ்லாமிக் எக்ஷன் புரொன்ட் எதிர்கொள்ளும் சவால்களை முறியடிப்பதற்காக இயக்கத்தின் சுலோகங்களும் கட்டமைப்பும் ஆதரவாளர் வட்டமும் பயன்படுத்தப்படுகின்றமை கட்டமைப்பு சிக்கலை (Structural crisis) ஏற்படுத்தியுள்ளது.

மறுபுறம், ஜோர்தான் இஹ்வான்களின் பலஸ்தீனப் பின்புலத்தைக் கொண்டவர்களுக்கும் மற்றும் மேற்கு ஜோர்டான் (Transjordan) உறுப்பினர்களுக்கும் இடையிலான கொள்கை முரண்பாடுகளும் அழுத்தமாக விவாதிக்கப்பட வேண்டிய மற்றொரு விவகாரமாகும். காரணம், பலஸ்தீனப் பின்புலம் கொண்ட இஹ்வான் இயக்கத்தினர் ஜோர்தான் இஹ்வான்களின் நிழ்ச்சி நிரலில் பலஸ்தீன விவகாரம், ஹமாஸுடனான உறவு என்பவற்றை முன்னுரிமைப்படுத்துகின்றனர். ஆனால், குறித்த அம்சங்கள் முன்னுரிமை பெறுவதனை ட்ரான்ஸ் ஜோர்டான் பிராந்திய இஃவான்கள் ஏற்றுக் கொள்வதில்லை. இவ்வாறு பலஸ்தீன விவகாரம் இஹ்வான்களின் மத்திய சபையில் தெளிவான இரு பிரிவுகளை ஏற்படுத்தி விட்டுள்ளது. அடுத்து, சிரிய விவகாரத்தை ஜோர்தான் இஹ்வான்கள் அணுகிய விதமும் அவர்களுக்கு பாதிப்பினை கொண்டு வந்துள்ளது.

2013 க்கு பின்னர் இரண்டாம் அப்துல்லாஹ் அவிழ்த்து விட்ட அடக்குமுறைகளுக்கு எதிராக இஹ்வான்கள் வேறு பல இடதுசாரி அரசியல் சக்திகளுடன் கூட்டணி அமைத்து செயற்பட்டனர். ஆனால், சிரிய விவகாரம் அவர்களைப் பிரித்து விட்டுள்ளது. இடதுசாரிகள் அஸதுக்கு ஆதரவளிக்க, இஹ்வான்கள் அதனை மறுத்தனர். இம்முரண்பாடுகள் வலிமையடையவே கூட்டணி பிளவுபட்டதுடன், இஹ்வான்கள் கூட்டணியிலிருந்து வெளியேறினர். ஜோர்தான் மன்னருக்கும் உளவுப் பிரிவுக்கும் இப்பிளவு இஹ்வான்களை ஒடுக்குவதற்கு பாரிய வாய்ப்பாக அமைந்தமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும். பலஸ்தீன விவகாரம் மற்றும் சிரிய விவகாரம் போன்றன ஏதோவொரு வடிவில் இஹ்வான்களை எதிர்மறையாக பாதிப்படையச் செய்கின்றன. அதன் உள்ளக அரசியல் மற்றும் தஃவா சார்ந்த இலக்குகளை அடைவதற்கான முழுமையான திட்டவரைபிலும் கொள்கைத் தீர்மாணங்களிலும் உள்ள போதாமையை காட்டுகிறது. இதுவும், ஜோர்தான் இஹ்வான்கள் முன்னுரிமை கொடுத்து அலச வேண்டியதொரு விடயதானமாக அரசியல் விற்பன்னர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

➡ 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக சோஷலிச...

(6ஆம் பக்கத் தொடர்)

1980 அரை இறுதியில் முன்னைய அதிகார சமநிலையில் புதிய மாற்றமொன்று ஏற்பட்டது. அது சோவியத் நாடு உட்பட சோஷலிச நாடுகள் பலமிழக்கத் தொடங்கியதாகும். அதன் பின் அதிகமான சோஷலிச நாடுகள் தமது சோஷலிசக் கொள்கையை கைவிட்டு, முதலாளித்துவ நாடுகளாக மாறின. 1991ல் சோவியத் ரஷ்யா துண்டு துண்டாகச் சிதறியது. அதன் விளைவாக புதிய உலக அதிகார சமநிலையொன்று உருவாகியது. அதன் பிறகு அமெரிக்காவைத் தலைமையகமாகக் கொண்டதும் மேற்கத்திய ஐரோப்பாவை மையமாகக் கொண்டதுமான உலக அமைப்பொன்று உருவாகியது. தமது நேச நாடுகளுடனும் பலமான நாடுகளுடனும் இணைந்து, தனது நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்றவண்ணம் உலகை ஆள்வதற்கு அமெரிக்கா தயாரானது. அரசியல் ரீதியாகத் தனக்குப் பிடிக்காத அனைத்து நாடுகளையும் அமெரிக்கா தனது நேச நாடுகளை இணைத்துக்கொண்டு தாக்கியது. புதிதாக உருவாகிய அதிகார சமநிலைக்கும் ஆதிக்கம் செலுத்திய அமெரிக்காவின் ஏகாதிபத்திய போக்குக்கும் சீனாவைத் தவிர வேறு எந்த நாடும் சவாலாக அமையவில்லை. மா ஓ சேதுங்கின் மறைவுக்குப் பின் சீனாவும் முதலாளித்துவ பாதையில் வீறு நடை போடத் தொடங்கியது. அமெரிக்காவுக்கு சவாலாக இயங்கிய சோவியத் ரஷ்யாவும் பலமிழந்து, பலவீனமடைந்து அணி சேராக் கொள்கையும் முடங்கி விட்டது.

சோஷலிச நாடுகள் தடம் புரண்டு சிதறிவிட்டபின், முழு உலகும் ஒரு துருவ நாடுகளாக மாறின. உலகமயமாக்கலுடன் புதிய ‘லிபரல்’ பொருளாதார அமைப்பில் உலகம் துரித வேகத்தில் வியாபித்தது. மிகப் பலம் வாய்ந்த நாடொன்றுக்குக் கட்டுப்பட்டு இயங்கிய உலகின் போக்கு 2000 ஆம் ஆண்டில் மீண்டும் ஒரு தடவை மாற்றங்களுக்குள்ளாகியது. அதன் பின்னணியில் உலக அமைப்பை ஆராய்ந்த வேளையில் ‘நானே வல்லரசன்’ என்று நீண்ட காலமாக தம்பட்டம் அடித்துக்கொண்டிருந்த அமெரிக்கா பலவீனமடைந்து செல்வதைப் பார்க்கக் கூடியதாகவுள்ளது. அமெரிக்காவில் மட்டுமன்றி ஏனைய மேற்கத்திய நாடுகளிலும் பொருளாதாரம் நாளுக்கு நாள் வீழ்ச்சியடைந்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. 2005 இல் அமெரிக்காவின் பொருளாதாரம் ஆட்டம் காணத் தொடங்கிவிட்டது.

இவை அனைத்தினதும் பெறுபேறாக, 21 ஆம் நூற்றாண்டில் முதல் பத்தாண்டுக்குள் பல புதிய சக்திகள் முன்னணிக்கு வந்தன. ரஷ்யா, சீனா, இந்தியா, பிரேஸில், தென்னாபிரிக்கா ஆகியன அவற்றில் முன்னணி வகிக்கின்றன. அத்துடன் உலக அதிகார சமநிலையின் பொருளாதாரப் பிரிவில் மிகத் தெளிவான மாற்றமொன்று தென்படலாயிற்று. சீனாவிலும் இத்தாலியிலும் பெரும் தொகையான முதலீட்டுத் தொகை மேலதிகமாகக் காணப்பட்டது. சீனா இந்த மேலதிக முதலீட்டை ஆசிய, ஆபிரிக்க வலயங்களிலுள்ள நாடுகளில் முதலிடத் தொடங்கியது. இந்தியாவும் தனது மேலதிகமான முதலீட்டுத் தொகையை தென்னாசிய வலயத்தில் ஏனைய நாடுகளில் முதலிட்டு, பொருளாதார ஆதிபத்தியத்தை உறுதிப்படுத்துவதற்கு முயற்சியை மேற்கொண்டு வருகிறது.

உலக அதிகார சமநிலையில் ஏற்பட்ட வேறுபாடு காரணமாக, 2008 இல் அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்ற பராக் ஒபாமா, ஒரு யதார்த்தவாதியாக உலகை அவதானித்துக் கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். ஏகாதிபத்திய முரட்டுத்தனமான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம், உலக நாடுகளைத் தம் பக்கம் வளைத்துக் கொள்ள முடியாதென்பதை ஒபாமா நன்குணர்ந்துள்ளார். தனது ஆதிபத்தியத்தின் கீழ் உலக நாடுகளை வைத்துக் கொள்வதற்கு ஒபாமா மற்றுமொரு தந்திரோபாயத்தை மேற்கொண்டு வருகிறார். நட்புறவுடன் கலந்துரையாடல்களை நடத்தி, உலக நாடுகளுடன் கொடுக்கல் வாங்கல்களைச் செய்வதன் மூலம் படிப்படியாக உலக நாடுகளை விழுங்குவதே அவரது நோக்கமாகும். ஈரானின் அணு ஆயுத உற்பத்தி சம்பந்தமான பிரச்சினையில் ஒபாமா மேற்கொண்ட நடவடிக்கைகள் அதற்கான ஒரு நல்ல உதாரணமாகும். ஒபாமாவின் கியூபா விஜயம் அதற்கு மற்றுமோர் உதாரணமாகும்.

அமெரிக்கா, நீண்டகாலமாக கியூபாவுடன் ஆக்கிரமிப்பு ரீதியான கடுமையான போக்கையே கடைப்பிடித்து வந்தது. 1959 இல் கியூபாவில் நடைபெற்ற புரட்சியிலிருந்து அந்த நிலை உருவாகியது. கியூபாவுடன் ஏற்பட்ட முறுகல் காரணமாக எமது கௌரவத்துக்கு இழுக்கு ஏற்பட்டதே தவிர எமது அரசியல் நோக்கம் நிறைவேறவில்லை என்று அமெரிக்கா பகிரங்கமாகவே கூறிவந்துள்ளது. அமெரிக்காவின் முயற்சி தோல்வியடைந்தது மட்டுமன்றி, அமெரிக்காவின் வீட்டு வாசலில் அமெரிக்காவுக்கு எதிரான கொள்கையைக் கொண்ட ஒரு நாடு (கியூபா) உருவாகியது.

நட்புறவைக் காட்டி, கியூபாவில் உள்ளக அரசியல் மாற்றத்துக்கான நடவடிக்கையைத் தந்திரமாக மேற்கொள்வதே ஒபாமாவின் நோக்கமாகும். ஆனால், நடந்ததென்ன? இதுவரை ஒபாமா மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்ததன் காரணமாக ஒபாமா வித்தியாசமான அணுகுமுறைகளை மேற்கொண்டுள்ளார். உலகிலுள்ள அனைத்து நாடுகளிலும் தனது முதலீடுகள் இருக்க வேண்டும் என்பதே அமெரிக்காவின் ஒரே நோக்கமாகும். 2015 மே மாதம் 08 ஆம் திகதி உலகப் புகழ் பெற்ற கம்பனிகளுடன் ஹேக்கில் நடந்த பேச்சுவார்த்தைகளின்போது ஒபாமா தனது நோக்கத்தைப் பகிரங்கமாகவே கூறினார்.

உலகப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான விதிமுறைகளைத் தாம் உருவாக்காது விடின், என்றோ ஒரு நாள் அதை சீனா உருவாக்கும் என்று அவர் கூறினார். எனவே, ஒபாமா முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிகளுடைய முரட்டுத்தனமான ஆக்கிரமிப்பு முறையைக் கைவிட்டு, மென்மையான தந்திரோபாய அரசியலை மேற்கொள்வதன் மூலம் அதனது நோக்கத்தை நிறைவேற்ற முயற்சித்து வருகிறார்.

ஆசியாவின் இரண்டாவது மிகப் பெரிய பொருளாதாரத்தை தன் வசம் வைத்துக் கொண்டுள்ள இந்தியாவின் உன்னதத்தை அமெரிக்கா ஆகர்ஷிக்கிறது.

தற்போது உருவாகி வரும் புதிய உலக அதிகார சமநிலையுடன் இன்னும் சில நாடுகள் முன்னணிக்கு வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. பிரேஸில், சீனா, ரஷ்யா, இந்தியா மற்றும் ஆபிரிக்கா போன்ற நாடுகள் இந்த வரிசையில் உள்ளன. தென் கொரியா பொருளாதாரத்தில் மிக மோசமான நிலையை அடைந்துள்ளது.

தற்போதைய உலகில் இது போன்ற அதிகார சமநிலைகள் உருவாகி வருவதை நாம் அடிக்கடி காணலாம். இது நல்லதொரு மாற்றமாகும். அவ்வாறு நடைபெறாவிடில் ஒரு ஏகாதிபத்தியவாதியின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப ஏனைய நாடுகள் சரணடைய வேண்டிய நிலை ஏற்படும்.

## இலங்கை எதிர்கொள்ளும்...

(3 ஆம் பக்கத் தொடர்)

இளைஞர்கள் அரசாங்கசார் தொழில்களையும் வருமானத்தையும் எதிர்பார்ப்பவர்களாகவே இன்னும் உள்ளனர். இதேவேளை, இந்தியாவின் சேவைத்துறை நன்கு வளர்ச்சி பெற்றுள்ளதுடன் சர்வதேச அங்கீகாரம் பெற்றதாகவும் காணப்படுகிறது. குறிப்பாக, அவர்களுடைய மருத்துவத்துறை மற்றும் தகவல் தொழில் நுட்பத்துறை ஆகியன நன்கு வளர்ச்சியடைந்துள்ளன. மிகவும் பேசப்படுகின்ற இந்திய-இலங்கை பொருளாதார தொழில்நுட்ப (எட்கா) ஒப்பந்தம் கூட சேவைத் துறையை உள்ளடக்கியுள்ளது. இதனூடாக இலங்கையின் சேவைத்துறை பாரிய போட்டித் தன்மைக்குள் தள்ளப்படும் நிலை ஏற்படும்.

அத்தோடு கைத்தொழில் மற்றும் உற்பத்தித் துறைகள் பல்வேறு முட்டுக் கட்டைகளை எதிர் கொண்டுள்ளன. ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகைக்கான தடையை ஐரோப்பிய ஒன்றியம் இன்னும் முற்று முழுதாக நீக்கவில்லை. அந்தச் சலுகையைப் பெறுவதற்காக அரசாங்கம் இன்னும் முயற்சிகளை மேற்கொண்டுதான் வருகின்றது. அதே போன்று, விவசாயத்துறை இரண்டாம் கட்டத்திற்கு வளர்ச்சியடையவில்லை. நெல்லை உற்பத்தி செய்கிறோம். அதனை அரிசி மற்றும் அரிசிமா போன்ற இன்னும் சில உற்பத்திகளோடு நுகர்ந்து விடுகிறோம். ஆனால், இது போன்ற ஒரு தானியம் தான் கோதுமை. இது எராளமான உற்பத்திப் பொருட்களுக்கான மூலப் பொருளாகப் பயன்படுகிறது. அதுபோன்றுதான் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை, இறப்பர் போன்ற ஏனைய உற்பத்திகளும் முதல் நுகர்வோடு நின்று விடுகிறன. அதாவது, நவீன தொழில் நுட்பங்களின் துணையுடன் அவற்றை மூலப் பொருட்களாகக் கொண்டு பல்வேறு வகையான இடைநிலை மற்றும் விளைவுப் பொருட்களை உற்பத்தி செய்ய முடியாத பலவீனம் இலங்கையில் காணப்படுகிறது.

இதற்கு அடிப்படைக் காரணம் இலங்கையின் கல்வி முறைமையிலுள்ள பலவீனமும் அதன் குறைபாடுகளுமாகும். இலங்கை கல்வி முறைமை புத்தகக் கல்வி முறைமையாகவே இன்னும் உள்ளது. நடைமுறை ரீதியான, தொழில்நுட்ப ரீதியான கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும். அதனூடாக இலங்கை விவசாய உற்பத்தித்துறை, கைத்தொழில் மற்றும் தயாரிப்புத் துறை ஆகியவற்றை மேன்மையடையச் செய்ய முடியும்.

முடிவாக, இலங்கையின் வளங்களுக்கேற்ப விவசாயத்துறையை நவீனமயப்படுத்துவதினூடாக பொருளாதார ரீதியாக முன்னேற முடியும். இலங்கையின் விவசாயத் துறை முதல் பொருள் உற்பத்தியாக மாத்திரமல்லாமல் உற்பத்தியில் கிடைக்கும் முடிவுப் பொருட்களை மூலப் பொருட்களாக பயன்படுத்தும் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை கைத்தொழில் துறை வளர்ச்சியடைய வேண்டும். சேவைத் துறை போன்ற ஏனைய துறைகள் இதற்கு உறுதுணையாக இருக்கத்தக்கவாறு மாற்றியமைக்கப்பட முடியும். இதனூடாகவே இலங்கையின் உள்நாட்டு உற்பத்தியும் பொருளாதார வளர்ச்சியும் நிலைபேறாக வளர்ச்சியடைய முடியும். இவற்றுக்கும் மேலாக சகிப்புத் தன்மை மற்றும் சுமைகளை சற்றுத் தாங்கிக் கொள்ளும் மனப்பாங்கும் இன்றைய காலத்தில் இலங்கை மக்களிடத்தில் மிக அவசியம் எதிர்பார்க்கப்படுகின்றது.

## தேச நிர்மாணப் ...

(4 ஆம் பக்கத் தொடர்)

நாட்டைக் கட்டியெழுப்புவதில் புத்தாக்க செயற்பாடுகள் பிரதான இடம் வகிக்கின்றன. பௌதிக விடயமாக இருந்தாலும் சமூகவியலாக இருந்தாலும் புதிய விடயங்களை அறிமுகப்படுத்த வேண்டும். மனித வாழ்க்கையை இலகுபடுத்துவதற்காக அந்த விடயங்களை ஒரு சமூகம் கொடுக்க வேண்டும். அவ்வாறான ஒரு சமூகம் கௌரவமான சமூகமாகப் பார்க்கப்படும். மனித வரலாற்றில் உலகத்தின் இன்றைய நாகரிக வளர்ச்சிக்கு முஸ்லிம்களின் பங்களிப்புப் பற்றி பேசப்படுகிறது. முஸ்லிம் சமூகம் எல்லாத் துறைகளிலும் அளித்த பங்களிப்புக்களைப் பற்றி வியந்து பேசுகின்ற அளவுக்கு உலகத்தின் நாகரிகத்தை கட்டியெழுப்புவதில் முஸ்லிம்கள் பங்களிப்புச் செய்திருக்கிறார்கள். அந்த வகையில் புத்தாக்கச் சிந்தனைகளை நாமும் இந்த நாட்டில் முன்வைக்க வேண்டும். முஸ்லிம் புத்திஜீவிகள், படித்தவர்கள், துறைசார்ந்தவர்கள் இலங்கை நாட்டு மக்களின் வாழ்க்கையை இலகுபடுத்தும் வகையில் அரசியல், பொருளாதார, தொழில் நுட்ப, விவசாயம் போன்ற துறைகளில் புதிய விடயங்களைத் தேடி அறிந்து நாட்டுக்கு அறிமுகப்படுத்த வேண்டும். இவ்வாறான பணியைச் செய்கின்றவர்களை மனித சமூகம் எப்போதும் நன்றியோடு நினைவு கூரும். இது நாம் வாழும் பூமி என்ற வகையில் இவை அடிப்படைப் பணிகள் ஆகும்.

இந்த நாட்டில் வாழும் முஸ்லிம்கள் இருப்பு, இலக்கு ஆகிய இரண்டு எண்ணக்கருக்களை முன்னிறுத்தி இவ்வாறான விடயங்களை தொடர்ந்தேர்ச்சியாக செய்தாக வேண்டும். ஒரு காலத்தில் செய்வதும் சில நேரங்களில் மறப்பதும் என்றில்லாமல் எல்லாக் காலத்திலும் இவ்விடயங்களை தொடர்ந்தேர்ச்சியாகச் செய்து வருவது எமது பொறுப்பாகும்.

## சம்பூரில் அனல் ...

(முன் பக்கத் தொடர்)



இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி ஜே.எம். லாஹிர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது,

சம்பூர் பகுதியில் அனல் மின்சார நிலையம் அமைப்பதை ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இல்லாவிடில் மக்களின் பிணங்களை மிதித்துக் கொண்டு சென்றுதான் அனல் மின்சார நிலையம் அமைக்க முடியுமெனத் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் இலங்கையின் இரண்டாவது அனல் மின் நிலையமொன்றை அமைப்பதற்கு சம்பூரைத் தேர்ந்தெடுத்து அதற்கென 500 ஏக்கர் நிலமும் கொடுக்கப்பட்டது. இதனடிப்படையில் 2015 பெப்ரவரியில் சம்பூர் அனல் மின் நிலையம் தொடர்பான ஒப்பந்தம் இந்தியா-இலங்கை இரு நாடுகளுக்கிடையில் மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் திட்டத்தின் மூலம் 250 மெகாவொட் கொண்ட இரண்டு உலைகள் அமைக்கப்படவுள்ளதுடன் இதனூடாக தேசிய அளவில் 500 மெகாவொட்ஸ் மின் உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான உத்தேச செலவினமாக 600 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை-இந்திய இரு நாடுகளின் சம பங்கு உரிமையுடன் நிர்மாணிக்கப்படவுள்ள மேற்படி அனல் மின் நிலையத்தால் ஏற்படக்கூடிய சமூகப் பொருளாதார மற்றும் கேந்திர விளைவுகள் என்ன என்பது நோக்கப்படவேண்டும். அயல் நாடுகளுடன் உறவுகளைப் பேணுகின்ற அதேவேளை, தமது நலனையும் கவனத்திற்கொண்டு செயற்படவேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இஸ்லாமிய சமூக மாற்ற செயற்பாடுகளில் சுமையா கன்னூசி

சப்ரினா ரிழா



இன்றைய இஸ்லாமிய உலகில் நம்பிக்கை தரும் பெண் ஆளுமைகளில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவர் கலாநிதி சுமையா கன்னூசி. டியூனிஸியாவில் பிறந்து மிக நீண்ட காலமாக லண்டனில் வசித்து வரும் இவர் டியூனிஸியாவின் மிகப் பெரும் இஸ்லாமிய இயக்கமான அந்நஹ்ழாவின் ஸ்தாபகரான ஷெய்க் ராஷித் அல் கன்னூசி அவர்களின் மகளாவார்.

மிகச் சிறந்த ஆய்வாளர், எழுத்தாளர், பேச்சாளர் என பன்முக ஆளுமை கொண்டவரான சுமையா ஐண்டுச்ட் உதுணீணி எனும் பிரபல இஸ்லாமிய வலைப் பின்னலில் இஸ்லாம் தொடர்பான விரிவான விவாதங்கள், கலந்துரையாடல்கள், ஆய்வரங்குகள் ஊடாக தனது தொடரான பங்களிப்பினை நல்கி வருகின்றார்.

லண்டன் பல்கலைக்கழகத்தின் கீழைத்தேய மற்றும் ஆபிரிக்க கற்கைகள் பாடசாலையில் கருத்தியல் வரலாற்றுத் துறை ஆய்வாளராகப் பணியாற்றி வரும் சுமையா கன்னூசி தத்துவத் துறையில் கலைமானிப் பட்டத்தை பெற்றுள்ளதுடன் முதுகலைமாணிப் பட்டம் மற்றும் கலாநிதிப் பட்டத்தையும் பூர்த்தி செய்துள்ளார்.

லண்டனிலிருந்து வெளிவரும் கார்டியன் மற்றும் கட்டாரின் அல்ஜஸீரா ஆகிய இணையங்களில் முக்கிய பத்தி எழுத்தாளராகவும் இவர் திகழ்கின்றார். இன்றைய அரபுலகப் போராட்டங்கள் குறித்து இவர் கார்டியனிலும் அல்ஜஸீராவிலும் எழுதி வரும் பத்திகள் மில்லியன்கணக்கான முஸ்லிம்களின் உணர்வுகளைத் தட்டியெழுப்பி வருகின்றன.

ஐரோப்பிய புலமையாளர்களின் இஸ்லாம் தொடர்பான புனைவுகளையும் உருத்திரிக்கப்பட்ட தோற்றத்தையும் உடைத்தெறிவதே சுமையா கன்னூசியின் எழுத்தின் மையமாகும். லண்டனின் முக்கிய பேச்சாளர்களில் ஒருவராகத் திகழும் சுமையா லெபனான் மீதான இஸ்ரேல் யுத்தம் மற்றும் ஈராக் ஆக்கிரமிப்பு என்பன குறித்து ஆற்றிய உரைகள் ஆயிரக்கணக்கான முஸ்லிம் அல்லாதோரிடம் பெரும் வரவேற்பைப் பெற்றதோடு, ஸியோனிஸ வட்டாரங்களில் பெரும் எதிர்ப்பையும் உண்டுபண்ணின.

பாரம்பரிய அடக்குமுறை மற்றும் மேற்கின் கட்டற்ற தாராளவாதம் என்பவற்றின் நடுவே இஸ்லாம் நடுநிலையான கண்ணோட்டத்தில் பெண்களை எவ்வாறு அணுகுகின்றது என்பதற்கு உதாரணமாக திகழும் சுமையா கன்னூசி இஸ்லாமிய சமூக மாற்ற செயற்பாடுகளுக்கு சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்கிறார்.

# நினைவுகளின் கதகதப்பான போர்வை

சமீலா யூசுப் அலி

உதடுகள் சிரித்துக் கொண்டிருக்கின்றன...
கால்களோ காலங்களின் அந்தப் புறங்களில் நடந்து கொண்டிருந்தன...
இறந்த காலத்தின் அறைச்சுவர்கள்
ஒலிகளாலும் வாசனைகளாலும் நிரம்பியிருக்கின்றன.
மாபிள்கள் கழன்ற குளியலறையில்
ஒரு முனை உடைந்த கண்ணாடிக்கு முன் வாப்பா சவரம் செய்து கொண்டிருக்கிறார்.



குதிபோடும் பத்தாம் பிராயத்தில் குதியுயர்ந்த வெண்ணிறச் சப்பாத்துக்கள்
என் கால்களை நிரம்ப அழகாய் காண்பிக்கின்றன.
வீட்டின் பின்புற வளவில் சுற்றியபடியிருக்கும் என் பால்ய சகாவுடன்
வெட்டிப் போட்டிருக்கும் தென்னை மரக் குற்றியில் நடந்தபடி
பொய்யென்று தெரிந்தும் கேட்டுக் கொண்ட சாகசக் கதைகள்
உம்மா அடுப்படியில் ஆக்கும் போது சுடச்சுட வாய்க்குள் அள்ளிப் போட்டுக் கொண்ட அரை வேகல் இறைச்சியின் மணம்
காதில் விழும் வானொலி நாடக வரிகளில் காதலிப்பது என்பதை காது வலிப்பதென்று நினைத்த ஏழு வயதின் குழப்பம்
கண்விழிக்கும் போது அரை ஜன்னலூடே உயரத் தெரியும் குருவிக் கூடு
வாப்பா கொழும்பிலிருந்து கொண்டு வரும் விளையாட்டுப் பொருளுக்காய் அடிக்கொரு முறை மணி கேட்டு வர முன் முந்திக் கொண்ட உறக்கம்
நிலைப்படியில் ஆடியபடி உம்மாவிடம் தஃலீமுல் குர்ஆன் ஒப்புவித்தது.
வில்லும் அம்பும் செய்து தனக்குத் தானே விளையாடிக் கொண்ட ரொபின் ஹூட்
கிரிக்கெட் பித்துப் பிடித்தலைந்த நாட்களில் பரீட்சைக்குப் படிக்காது டீவிக்கு முன்னால் தவமிருந்த பதின்மம்.
மின்சாரம் அறுந்த இரவொன்றில் வெளித் திண்ணையில் குந்தியிருந்து சஹீதாவும் நானும் கதைத்த எதிர்காலக் கதைகள்
தபால்காரன் மணிச்சத்தமும் பழுப்பு உறைகள் தாங்கி வரும் நண்பிகளின் விடுமுறைக்காலக் கிறுக்கல்களும்
வீட்டுத் தொலைபேசியின் அனாமதேய அழைப்புகள் தந்த பயங்கலந்த கிளர்ச்சி
நாலடித் தொட்டிக்குள் மூவராய் குளிப்பது என்ற பெயரில் சிக்கன நீச் சலடிப்பது
நீருக்குள் மூச்சுப்பிடிக்கும் போட்டியில் சமயங்களில் புரையேறுமந்த உணர்வு
ஆளுயரக் கண்ணாடியில் நான் அணிந்ததால் முழங்கால் வரை நீண்டிருக்கும் வாப்பாவின் ஸ்கவுட் யுனிபோர்ம்
பாசிபடர்ந்த பழையக் கிணற்றுக் கட்டில் கால் குத்தி
உள் பார்த்தபடியிருக்கும் என் சிந்தனைகள்
புளிக் கொய்யாக்காய் பிளந்து உள்ளொரு உப்புக் கட்டி வைத்து உறிஞ்சியபடி வாசித்த புத்தகங்கள்
நினைவுகளின் கதகதப்பான போர்வைக்குள்
உறங்கிக் கொண்டிருக்கும் என்னை
தயவு செய்து யாரும் எழுப்பி விடாதீர்கள்...
இங்கு தான் நான் மிகப் பத்திரமாய் உணர்கிறேன்...

# நீரிழிவு ஒரு நோய் அல்ல; நோய்களின் தலைவாசல்!


நீரிழிவு என்பது ஒரு குறைபாடே என்பதால், அதை நாம் ஒரு நோயாகக் கருதுவதில்லை. அதற்காக, நீரிழிவை பொருட்படுத்தாமலே இருக்கலாமா? அதனால் தீங்கு நேரும் என்கிற முக்கியமான விஷயத்தையே பலர் கண்டுகொள்வதில்லை.

முன்னணி நிறுவனமொன்றில் உயர் பதவி வகிக்கும் இளைஞர் ஒருவருக்கு 10 ஆண்டுகளுக்கு முன் நீரிழிவு அறியப்பட்டது. இப்போது அவருக்கு வயது 38. வழக்கம்போல நீரிழிவைக் கண்டுகொள்ளாத பொதுஜனங்களில் அவரும் ஒருவர்.

எல்லா நேரங்களிலும் வேலை... ஏதேதோ உணவுகள்... தூக்கமின்மை... என இயல்பில்லாத வாழ்க்கை முறை. ஒருநாள் அலுவலக வாசலில் நுழையும் போதே ஒருவித அசௌகரியம்... வியர்வை பொங்கி வழிந்தது. அப்படியே நிலை குலைந்த அவரை மருத்துவமனையில் சேர்த்தார்கள். ஹார்ட் அட்டாக்!

சோதனைகளுக்குப் பிறகு ட்ரிபிள் பைபாஸ் சர்ஜரி செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அறுவை சிகிச்சைக்குப் பின் இன்சுலின் தெரபி எடுத்துக்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. அதோடு, அவருடைய வாழ்க்கைமுறையை உடனடியாக மாற்றம் செய்ய வேண்டிய அவசர அவசியமும் உணர்த்தப்பட்டது.

உலகில் 2014 ஆம் ஆண்டில் 49 இலட்சம் நீரிழிவு சார்ந்த மரணங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இச்சூழலில் வருந்தத்தக்க விஷயம் என்னவெனில், இவர்களில் பாதிப் பேர் இரத்தத்தில் குளுக்கோஸின்



அளவு பற்றிக் கவலைப்படுவதே இல்லை. இந்த அலட்சியம்தான் அவர்களின் கண், சிறுநீரகங்களை பழுதடையச் செய்கிறது. சாதாரண புண்களைக் கூட ஆற விடாமல் ரணம் ஆக்குகிறது. இதய நோய் அபாயத்தை அதிகப்படுத்துகிறது.

டைப் 2 நீரிழிவாளர்களில் பாதிப் பேர் இதய நோய்களால்தான் இறக்கிறார்கள். நீரிழிவு, இதய நோய்கள்- இரண்டுமே பரம்பரைச் சொத்து போல சந்ததியினருக்குப் பரவுகின்றன.

நீரிழிவு கட்டுப்படுத்தப்படாத நிலையில் என்ன [illegible] உயர் இரத்த அழுத்தமும் இதய வறைச் சுவர்களில் படிந்திருக்கும் கொழுப்பும் சேர்ந்து இரத்த நாளங்களுக்கு ஊறு விளைவிக்கின்றன. பெரும்பாலான நீரிழிவாளர்களுக்கு பருமனும் இரத்த அழுத்தமும் இருப்பது இன்னும் கொடுமை. அதனால்தான், முன்பு இரத்தத்தில் குளுக்கோஸின் அளவில் மட்டும் கவனம் செலுத்தி வந்த நீரிழிவு மருத்துவர்கள், இப்போது நீரிழிவாளர்களின் இரத்த அழுத்தம் மற்றும் கொலஸ்ட்ரோல் அளவுகளையும் கட்டுக்குள் வைக்க முயற்சி எடுக்கிறார்கள். இதன் மூலம் ஹார்ட் அட்டாக் ஏற்படாமல் தடுக்க முடியும்.

நீரிழிவோடு இதய நோய் சேரும்போது, ஒருவரது ஆயுட்காலம் 12 ஆண்டுகள் குறைகிறது. இந்தத் தகவலில் இருந்தே அபாயத்தின் அளவை உணர முடியும் அல்லவா? இன்று இதயநோய் மருத்துவரிடம் சிகிச்சை பெற வருகிறவர்களில் பாதிக்கும் மேல் 50 வயது தாண்டியவர்கள் மற்றும் நீரிழிவு கொண்டவர்கள். இந்த எண்ணிக்கை அதிகரிப்புக்குக் காரணம் உடல்நலம் பற்றிய அறியாமைதான்.

நீரிழிவு என்றால் சுகர் மாத்திரை போட்டால் போதும் என்கிற எண்ணமே பலருக்கு உள்ளது. அதைக்கூட ஒழுங்காக எடுத்துக் கொள்வதில்லை என்பது இன்னும் மோசம். வெளிப்படையான பாதிப்புகளை ஆரம்ப கட்டத்தில் அளிக்காததால் இந்த அலட்சிய எண்ணம் ஏற்பட்டிருக்கக்கூடும். அதனால்தான் மீண்டும் மீண்டும் சொல்ல வேண்டியிருக்கிறது. நீரிழிவு என்பது ஒரு நோய் அல்ல என்றாலும், ஏராளமான நோய்களை உருவாக்கும் தலைவாசல் அது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செப்டெம்பர் 11 தாக்குதல்:...

(12 ஆம் பக்கத் தொடர்)

அவர் தொடர்ந்து இதுபற்றி தெரிவித்துள்ள கருத்துக்களில் சியோனிஸ மாபியா எமது அரசியல் சாசனத்தை தூக்கி எறிந்து விட்டது. பொலிஸ் இராஜ்ஜியத்தை நிறுவியுள்ளது. அமெரிக்கர்கள் இதன் மூலம் வேவு பார்க்கப்படுகின்றனர். எமது அரசாங்கத்தின் மீது வெறுப்புணர்வு அதிகரித்து வருகின்றது. சியோனிஸ மாபியாவால் நடத்தப்படும் அமெரிக்க அரசு என்ற பெயர் உலகம் முழுவதும் பரவத் தொடங்கி விட்டது.

சியோனிஸ மாபியா தீமைகள் நிறைந்ததும் சட்டவிரோதமானதுமாகும். நன்கு தெரிந்த பொய்கள் மற்றும் ஏமாற்றுதல்கள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு போலியான யுத்தங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டு அவற்றில் அமெரிக்க சி.ஐ.ஏ. யின் செயற்பாடுகளும் முடுக்கி விடப்பட்டுள்ளன. செப்டம்பர் 11 தாக்குதல் பற்றிய உத்தியோகபூர்வ விளக்கங்களை இன்று ஒரு மடையன் கூட ஏற்றுக் கொள்ள மாட்டான். சியோனிஸ மாபியாவின் நவ கன்சர்வேடிவ் செயற்பாடுகள், புஷ்/செனி கூட்டுப் பொய்கள் என எல்லாம் சேர்ந்து கிட்டத்தட்ட மூவாயிரம் அமெரிக்க உயிர்களைப் பலியெடுத்துவிட்டன.

இந்த நிலைமைகளில் மாற்றம் கொண்டு வரப்படும் என்றும் தவறுகள் திருத்தப்படும் என்றும் ஒபாமா நிர்வாகம் உறுதி அளித்தது. ஆனால், இன்று அந்த நிர்வாகமும் புஷ்/செனி குற்றச் செயல்களைப் பாதுகாத்துக் கொண்டு அதே நிகழ்ச்சி நிரலை தொடர்ந்து கொண்டு செல்கின்றது.

''இதனை தொடர்ந்தும் தாங்கிக் கொள்ள வேண்டும் என்ற தேவை எமக்கு இல்லை. பொக்ஸ் செய்திகள் சி.என்.என். மற்றும் என்.பி.ஆர் என்பனவற்றை நாம் இழுத்து மூடுவோம். இதேபோல தாம் வாழ்வதற்காக பொய் உரைக்கும்'' இன்னும் பல சியோனிஸ மாபியா விபசாரிகளுக்கும் முடிவு கட்டுவோம். உபயோகமற்ற செய்திப் பத்திரிகைகளை வாங்குவதை நாம் நிறுத்திக் கொள்ளலாம். முழுக்க முழுக்க பொய்கள் மற்றும் ஏமாற்றுதல்களைக் கொண்டு ஸ்தாபிக்கப்பட்ட பொலிஸ் புலனாய்வு இராஜ்ஜியத்தை முடிவுக்கு கொண்டு வருமாறு நாம் கோரிக்கை விடலாம். எமது அரசில் இருந்து இஸ்ரேலிய சியோனிஸ புற்றுநோயை நாம் ஒழித்துவிடுவோம். வங்கித் துறையிலும் ஊடகத் துறையிலும் கைத்தொழில் துறையிலும் உள்ள குற்றவாளிகளுக்கு எதிராக நாம் சட்ட நடவடிக்கை எடுப்போம்'' என்று ரொபர்ட்ஸ் தனது கருத்தில் தெரிவித்துள்ளார்.

## ஜோர்தான்...

(13 ஆம் பக்கத் தொடர்)

ஜோர்தான் இஹ்வான்களின் இயக்கக் கட்டமைப்பில் காணப்படும் உள்முரண்பாடுகள் அவர்களை ஒடுக்குவதற்கான பின்புலமாக எந்தவிதத்திலும் அமைய முடியாது. எனவே, இன்று ஜோர்தானில் இடம்பெறுவது தெளிவான சர்வதிகாரமே. பிரபல ஊடகவியலாளர் டேவிட் ஹியரஸ்ட் கூறுவது போல் ஐ.எஸ். வன்முறையாளர்கள், மன்னராட்சிகள் மற்றும் மேற்குலகம் என மூன்று சாராரிடமும் இஸ்லாமியவாதிகள் அகப்பட்டுக் கொண்டுள்ளனர். மூன்று தரப்பினரும் வெவ்வேறான நியாயங்களுக்காக இஸ்லாமியவாதிகளை ஒடுக்குகின்றனர். ஐ.எஸ். தனது கருத்தியலுக்கு சவாலாக இஸ்லாமியவாதிகளை மற்றும் இஸ்லாமிய இயக்கங்களைக் கருதுகிறது; அரபு மன்னராட்சிகள் தமது அரசியல் சட்டபூர்வத்தன்மைக்கு சவாலாக இஸ்லாமியவாதிகளைக் நோக்குகின்றன; அரசியல் ரீதியாக சுதந்திரமாக இயங்குவதற்கு இஸ்லாமியவாதிகள் முயல்கின்றனர் என்ற அடிப்படையில் மேற்குலகம் இஸ்லாமியவாதிகளை சவாலாகக் கொள்கிறது. இத்தகைய சிக்கலான சூழமைவுப் பின்புலத்தில் இஸ்லாமியவாதிகளுக்குள் தோன்றும் உள்முரண்பாடுகள் இன்னுமின்னும் அவர்களை பாதிப்படையச் செய்யும் என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

## மௌனம் கலைத்த...

(7 ஆம் பக்கத் தொடர்)

திகாமடுள்ள முஸ்லிம்களின் அரசியலில் இதுவரை மு.கா., தே.கா. எனும் இரு துருவங்கள் மையங்கொண்டிருந்து, இப்போது அ.இ.ம.கா. உம் தனக்கென இங்கு பலமான வாக்கு வங்கியை ஏற்படுத்தியிருக்கிறது. சம்மாந்துறை, சாய்ந்தமருது, பொத்துவில் ஆகிய பிரதேசங்களிலேயே அ.இ.ம.காங்கிரஸ் பலமாக அத்திவாரமிட்டுள்ளது. இவை மு.கா.வின் வாக்கு வங்கிகளாக இருந்த பிரதேசங்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மைத்திரி-அதாஉல்லா இணைவு, தே.கா.வை மீண்டும் பலப்படுத்துமானால் திகாமடுள்ள எனும் முஸ்லிம் பெரும்பான்மை மாவட்டத்தில் மு.கா.வின் அரசியல் எதிர்காலம் கேள்விக் குறியாகிவிடும்.

எதிர்நோக்கியுள்ள உள்ளூராட்சித் தேர்தலிலும் சரி, மாகாணசபைத் தேர்தலிலும் சரி மு.கா.வுடன், தே.கா.வோ அல்லது அ.இ.ம.கா.வே.தான் தென்படுகின்றன. ஆனால், தே.கா.உம் அ.இ.ம.கா. உம் தமக்கிடையே உடன்பாடுகளை ஏற்படுத்தி கூட்டணியாக இத்தேர்தல்களை எதிர்கொள்வதற்கான சாத்தியங்கள் இருக்கின்றன. அவ்வாறு நிகழுமாக இருந்தால் மு.கா.வின் நிலை இன்னும் பலவீனமடையும் என்பதில் சந்தேகமில்லை.

மு.கா.வைப் பொறுத்தவரை ஆரம்பம் தொட்டு உட்கட்சி முரண்பாடுகள் பிளவுகளிலேயே முடிந்திருக்கின்றன. தலைமையின் அணி கட்சியைத் தக்கவைத்துக்கொள்ள மாற்று அணியை கட்சியை விட்டு வெளியேற்றுவது மு.கா.வின் உட்கட்சி முரண்பாடுகளின் வரலாறு. தவிசாளர் சேகு இஸ்ஸதீன் தொடக்கம் இதுதான் தொடர் கதையாக இருந்திருக்கிறது. ஆனால், 2015 பொதுத் தேர்தலின் பின்னர் மு.கா.வினுள் ஏற்பட்ட முரண்பாடுகள் விடயத்தில் தலைமையால் கூட்டாக முடிவுகளை மேற்கொள்ள முடியாமல் போனமைக்குக் காரணம், கட்சி ஏற்கனவே பலவீன நிலையில் இருப்பதையும் இப்பிளவு நிகழ்ந்தால் கட்சி மிக மோசமான நிலைக்கு தள்ளப்படுமென்பதை நன்கு உணர்ந்திருப்பதே ஆகும் என முன்வைக்கப்படும் கருத்துக்களிலும் அர்த்தமில்லாமலில்லை.

உட்கட்சி முரண்பாட்டால் கட்சி, பிளவினைச் சந்திப்பதை இப்போதைக்கு மு.கா. தவிர்த்துக் கொண்டிருந்தாலும் கட்சிக்குள் நிலவும் உயர்மட்டம் வரையிலான இணக்கப்பாடற்ற அரசியல் பாமர மக்களுக்கும் வெளிச்சம் போட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. இவ்விடயம் சமூக உரிமைகளை வென்றெடுப்பதற்கான மு.கா.வுக்கு உள்ள ஆற்றலின்மீது மக்கள் மத்தியில் பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கும். நல்லாட்சி அரசாங்கத்தின் புதிய யாப்புருவாக்கம் தொடர்பாகவும் சமூகத்தின் உணர்வுகளை சரியாகப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டிய பேராளர் மாநாடும் தேசிய மாநாடும் கட்சித் தலைமையின் அதிகாரங்களை செறிவாக்குவதை மாத்திரமே நோக்காகக் கொண்டு நிகழ்த்தி முடிக்கப்பட்டமையும் மு.கா.வின் மீதான அதிருப்தியை அதிகரித்திருக்கிறது.

ஆக, தே.கா. தலைமை பொருத்தமானதொரு தருணத்தில் ஆரோக்கியமானதொரு காய் நகர்த்தலை செய்திருக்கிறது. பொதுசன முன்னணியின் தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்றப் பிரதிநிதித்துவமும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சும் அதாஉல்லாவுக்கு வழங்கப்படவிருப்பதாகவும் பேச்சுக்கள் உலவுகின்றன. கடந்த காலங்களில் விட்ட தவறுகளை சரிசெய்து கொண்டு பிரதேசவாதத்துக்குள்ளும் அபிவிருத்தி அரசியலுக்குள்ளும் முடங்கிக் கிடவாமல் சிந்தனைகளைச் சற்று விரிவுபடுத்தி சமூக அக்கறையுள்ள அரசியலை தேசியக் காங்கிரஸ் எதிர்காலத்தில் முன்னெடுக்குமாக இருந்தால், இழந்த அதிகாரத்தை விடவும் பலமான ஒரு நிலையை அடைவதற்கான சூழ்நிலைகள் அதாஉல்லாவுக்கு திறந்தே கிடக்கின்றன.

சமூக விடுதலைக்கான இயக்கங்களாக செயற்படும் கட்சிகள் ஒருபோதும் அழிவதில்லை; தனிமனித சொத்தாக மாறிவிடும் கட்சிகள் ஒரு நாளும் நிலைத்திருப்பதுமில்லை. இதுதான் ஜனநாயக சூத்திரம் என்பதை அனுபவத்தில் உணர்ந்த அதாஉல்லாவின் எதிர்கால அரசியல் எவ்வாறு அமையப் போகிறது என்ற எதிர்பார்ப்பு பரவலாக எழுந்திருக்கிறது. அதாஉல்லா எனும் அரசியல் ஆளுமையைப் பற்றிய ஆழமான புரிதல் உள்ளவர்கள் மைத்திரி-அதாஉல்லா இணைவை சாதாரணமான ஒரு விடயமாகப் பார்க்கவில்லை. இவர்களது பார்வையை அதாஉல்லா எவ்வாறு யதார்த்தமாக்கப் போகிறார்என்பதைப்பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டியிருக்கிறது.

## பங்களாதேஷுக்கான...

(முன் பக்கத் தொடர்)



73 வயது முதியவரான நிஸாமிக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டமை திட்டமிட்ட படுகொலையாகும் என பல மனித உரிமை அமைப்புக்கள் பங்களதேஷ் அரசாங்கத்தைக் கண்டித்துள்ளன.

போர்க் குற்றங்கள் தொடர்பாக போலி குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டு நிஸாமி உட்பட இதுவரை 5 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

## மக்கள் அவரைச்...

(18 ஆம் பக்கத் தொடர்)

''ஐயாவுக்கு இங்க வசிக்கிறதுக்கு இடங் காணாது. ஐயாவுக்கு இந்த அறை பிடிக்கலன்னா, மாடி வீடொண்ணு பக்கத்துல இருக்கு. அந்த வீட்டோட மேல் மாடியை வாடகைக்கு எடுத்துத் தர முடியும். குளியலறை, கழிப்பறை எல்லாமே அதுக்குள்ளேயே இருக்கு. நாங்க ஐயாவ அங்க தங்கவைக்கிறொம்.

எங்களுக்கு வேண்டியதெல்லாம் ஐயாவ எங்களிடமிருந்து தூரமாக்காம இங்கேயே வச்சுக்கிறதுதான்.'' கோப்பிக் கடைக்காரன் சொன்னான்.

அவர் பெரியதொரு குழப்பத்துக்குள்ளானார்.

''சரி. ஏன் நீங்க எல்லோரும் என்னை இந்தப் பகுதியிலேயே இருக்க வற்புறுத்துறீங்க?''

''அது நல்ல தெளிவான காரணம். எங்களுக்கு நல்லதொரு வியாபாரமிருக்கு ஐயாவுக்கு நன்மை கிடைக்க.''

''பைத்தியமா? நானென்ன அந்தளவுக்கா உங்களோட கொடுக்கல் வாங்கல் செய்றேன்?''

''ஐயாவோட கொடுக்கல் வாங்கல் எதுவுமில்ல. கொடுக்கல் வாங்கல் செய்றது மற்றவங்களோட. ஆனா அந்த அதிர்ஷ்டத்தைக் கொண்டு வந்தது ஐயாதான். ஐயா இங்க வர்றதுக்கு முன்னாடி என்னோட கடைக்கு வந்தது ரெண்டு மூணு பேர்தான். ஐயா வந்தப்புறம் இந்தப் பகுதி மனிசக் குடியிருப்பாயிடுச்சு. இப்ப பாருங்க . . . புதிய கடைகள் தொறக்கப்பட்டிருக்கு. அவையெல்லாமே ஐயாவுக்கு நன்மை கிடைக்க நடந்தவை.'' சில்லறைக் கடை வியாபாரி விவரித்தான்.

அவர்கள் தொடர்ந்தும் அவரை வற்புறுத்தினார்கள். தேவைப்பட்டால் அவருக்கு ஒவ்வொரு மாதமும் பணம் கொடுக்கவும் வியாபாரிகள் முன்வந்தனர்.

''நன்றி. ஆனா என்னோட சேவை அந்தளவு பெறுமதியுடையதல்ல. நான் நல்ல ஆரோக்கியமா இருக்கும் போதே வேலை செய்யணும். உங்களுக்காக நான் செய்ய வேண்டியிருப்பது நான் இங்க தங்குறது மட்டும்தானே?''

''ஆமா... அவ்ளோதான். நாங்க ஐயாவோட பெறுமதிமிக்க பெயரை எப்பவுமே மறக்க மாட்டோம். ஐயா இங்க வந்ததோடே ஐயாவோட நடவடிக்கைகளைக் கவனிக்கன்னு பொலிஸார் படையொண்ணே இந்தப் பகுதிக்கு வந்துச்சு. அவங்களுக்கு சேவை செய்ய சப்பாத்துத் தைக்கிறவன், வியாபாரிகள்னு இந்தப் பக்கம் வந்தாங்க. இன்னும் கொஞ்ச நாள் போகும்போது பொலிஸ் படையோட வேலைகளைக் கண்காணிக்கன்னு இன்னொரு பொலிஸ் படையொண்ணு வந்துச்சு. அவங்களோட தேவைகளச் செஞ்சு கொடுக்க இன்னும் வியாபாரிகள் இங்க வந்தாங்க. இவங்க எல்லோருமே வியாபாரிகளிட்ட இருந்து சாமான்கள் வாங்கத் தொடங்கினாங்க.'' பழ வியாபாரி கூறினான்.

''அதற்குப் பிறகு நான் கடையொண்ணு திறந்தேன். ஐயாவுக்கு நன்மை கிடைக்க பொலிஸ்காரர்கள் அந்தி நேரங்கள்ல எங்க கடைக்கு வந்து கோப்பிக் கோப்பைகள் மூணு, நாலுன்னு குடிக்கிறாங்க.''

அவர் வேதனையோடு அவர்களைப் பார்த்தார்.

''அவர்கள் எல்லோருமே பொலிஸ்காரர்களா?''

''சிலர் பொலிஸ்காரர்கள்; சிலர் பொலிஸ்காரர்களில்லை. ஒரு இடத்துக்குப் பத்துப் பேர் வரும்போது அவங்களோட அவங்க குடும்பமும் நண்பர்களுமுன்னு அம்பது பேரளவில வருவாங்க. ஐயா இப்ப இந்த மாதிரி போய்ட்டா இந்தப் பகுதி பழைய நிலைக்கே போய்டும். எல்லாப் பொலிஸ்காரங்களுமே திரும்ப ஐயா பின்னால போய்டுவாங்க. அப்ப எங்க வியாபாரம் படுத்துடும்.'' சில்லறை வியாபாரி சொன்னான்.

'' ஐயா போகவே வேணும்னா நாங்க காசு கொஞ்சம் சேர்த்து முன்னேறுறவரைக்கும் கொஞ்ச காலத்துக்கு இருங்க. கோப்பிக் கடைக்காரன் வேண்டினான்.''

அவர் ஒரு கணம் சிந்தித்தார். எங்கு சென்றாலும் இதே நிலைமைதான்.

''சரி... நான் போகல. ஆனா நீங்க கொண்டுவந்திருக்குற பரிசுகளையெல்லாம் திரும்ப எடுத்துக் கொண்டு போங்க.''

அவர் கடதாசிப் பையைத் திரும்ப அவர்களது கையில் வைத்தார்.

பழ வியாபாரி வெளியேறும்போது மீண்டும் திரும்பினான்.

''நாங்க எங்க மத்த வியாபாரிகளிட்டயும் இந்தச் செய்தியைச் சொல்லட்டுமா?''

''ம்ம்..! நல்லது... நான் இந்தப் பகுதியிலிருந்து இப்பவே போறதில்ல. ஆனா எனக்கு உங்கக்கிட்ட இருந்து எதுவுமே வேணாம்.''

''ஐயாவுக்கு ஆண்டவன் அருள் புரியட்டும். கோப்பிக் கடைக்காரன் பிரார்த்தித்தான்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிக்கப்பட்டவர்களுக்கு குரல் கொடுக்காதவன் எழுத்தாளனாக முடியாது

நேர்காணல்: நஸார் இஜாஸ்

நாச்சியாதீவு பர்வீன் இலக்கிய உலகுக்குப் பரிச்சயமான பெயர். இவர் கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சரின் ஊடக இணைப்பாளராகக் கடமையாற்றி வருகிறார். இவரது எழுத்துப் பணியை கௌரவித்து அகில இலங்கை சிங்கள கவிஞர்கள் சம்மேளனம் இவருக்கு கௌரவமும் காவ்ய சிறீ பட்டமும் வழங்கியது. இவர் அநுராதபுரம் கலை இலக்கிய வட்டத்தின் தலைவர், இலங்கை இஸ்லாமிய ஆய்வகத்தின் உபசெயலாளர் மற்றும் அநுராதபுர மாவட்ட சிறுபான்மை அரசியல் ஆய்வகத்தின் தலைவர் என இலக்கிய சமூகப் பொறுப்புக்களில் ஈடுபட்டு வருகிறார். இவருடனான நேர்காணலை வாசகர்களுக்கு தொகுத்துத் தருகின்றோம்.



நாச்சியாதீவு பர்வீன்

**எங்கள் தேசம்:** உங்களுடைய சொந்தப் பிரதேசத்தில் இலக்கியத்திற்கான வரவேற்பு எவ்வாறுள்ளது?

**நாச்சியாதீவு பர்வீன்:** எமது பிரதேசமான அநுராதபுரத்தில் சொல்லிக்கொள்ளும் அளவிலான அங்கீகாரம் இலக்கியத்திற்கு வழங்கப்படவில்லை. நாங்கள் பெரும்பான்மை சமூகத்தின் மத்தியில் இருந்து கொண்டே தமிழ் இலக்கியம் படைக்கிறோம். இங்கு தமிழ் பேசுகின்றவர்கள் அதிகமாக கிராமப்புறங்களில்தான் வாழ்கிறார்கள். ஆரம்பத்தில் கிராமியக் கலைகளில் ஆர்வம் செலுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, மேடை நாடகங்கள், வில்லுப்பாட்டு, களிகம்படி, சிலம்பாட்டம் என்பவற்றைச் சொல்லலாம். காலப்போக்கில் அவை மங்கி மறைந்து விட்டன. ஆனால், இலக்கியத்திற்கு காலாதிகாலமாக ஓரளவிற்கு அங்கீகாரம் இருந்து வந்துள்ளதை மறுக்க முடியாது. தற்போதும் அது ஓரளவுக்கு இருக்கிறது. நவீன பொழுது போக்குச் சாதனங்கள் வாசிப்பின் தளத்திலிருந்து வாசகர்களை வேறொரு திசைக்குத் திருப்பியுள்ளதால் தீவிரமாக வாசிக்கக் கூடியவர்கள் இப்போது குறைவாகவே உள்ளார்கள். எமது பிரதேசத்தில் இலக்கியத்திற்கான வரவேற்பானது மிகவும் மந்தமாக உள்ளதாகவே கருதுகிறேன்.

**எங்கள் தேசம்:** நீங்கள் இதுவரை வெளியிட்டுள்ள நூல்கள், அவற்றுக்கு கிடைத்த விமர்சனங்கள், வரவேற்புக்கள் குறித்துச் சொல்லுங்கள்.

**நாச்சியாதீவு பர்வீன்:** நான் இதுவரை நான்கு நூல்களை வெளியிட்டுள்ளேன். நான் எழுதிய நூல்களில் சிரட்டையும் மண்ணும், மனவெளியின் பிரதி, மூன்றாவது இதயம் என மூன்று கவிதைத் தொகுதிகளையும் பேனாவால் பேசுகிறேன் என்ற தலைப்பில் ஒரு பத்தி எழுத்தினையும் வெளியிட்டுள்ளேன். அத்தோடு நான் மூன்று கவிதைத் தொகுதிகளை தொகுத்து வெளியிட்டுள்ளேன். குறித்த தொகுப்புக்களானது சமூகத்திற்கு முக்கியமானதும் ஆவணப்படுத்த வேண்டிய தேவையும் இருந்தமையே இதற்கான காரணமாகும். எம்.எச்.எம். ஷம்ஸ் நினைவுக் கவிதைகள், வேலியைத் தாண்டும் வேர்கள் (அநுராதபுர மாவட்ட கவிதைகள்), கவியில் உறவாடி (யாழ், மன்னார், அநுராதபுர மாவட்ட முப்பது கவிஞர்களின் கவிதைகள்) என்பனவே அவையாகும்.

இவைதாம் எனது அறுவடைகள். விமர்சன ரீதியாக பலர் எனது நூல்களைப் பற்றி எழுதியுள்ளார்கள். அதிலும் குறிப்பாக, 'பேனாவால் பேசுகிறேன்' பத்தி எழுத்து மல்லிகைப் பந்தல் வெளியீடாக வெளிவந்தது. இந்த நூல் பற்றி மூத்த திறனாய்வாளர் கே.எஸ். சிவகுமாரன் விதந்து எழுதியதோடு தனது நூல் ஒன்றிலும் அது பற்றி எழுதியுள்ளார். அந்தத் திறனாய்வை எனக்கான அங்கீகாரமாக நான் கருதுகிறேன். அது தவிர பேராசிரியர் செ. யோகராசா, தென்கிழக்கு பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் திறனாய்வாளர் ரமீஸ் அப்துல்லாஹ், புத்தளம் ஜவாத் மரைக்கார் ஆகியோர் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இந்த நூல் பற்றிய விமர்சன உரையை நிகழ்த்தியுள்ளனர். அத்தோடு கவிஞர் கிண்ணியா நஸ்புள்ளாஹ் ஒரு காத்திரமான விமர்சனப் பதிவை இந்த நூல் பற்றி செய்துள்ளார். எனது கவிதைத் தொகுதிகளுக்கு கிடைத்த வரவேற்புக்களை விட 'பேனாவால் பேசுகிறேன்' தொகுதிக்கு கிடைத்த வரவேற்பு மிக அதிகமாகும். இதுவே ஒரு எழுத்தாளனை மேலும் எழுதத் தூண்டுகின்ற ஒரு கருவியாகும்.

**எங்கள் தேசம்:** உங்களது இத்தனை வருட இலக்கியப் பயணத்தில் உங்களுக்குள் பாதிப்பை ஏற்படுத்திய எழுத்தாளர்கள் பற்றி சொல்லுங்கள்?

**நாச்சியாதீவு பர்வீன்:** மஹ்மூத் தர்விஷ், சுஜாதா, எச்.ஜி. வோல்ஸ், அஷ்ரப் சிஹாப்தீன், தெளிவத்தை ஜோசப், டொமினிக் ஜீவா இப்படி பலர் உள்ளனர். இவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு காரணங்களுக்காக என்னுள் பாதிப்பை ஏற்படுத்தியவர்கள். இதில் குறிப்பாக, டொமினிக் ஜீவாவின் படைப்புக்கள் எனக்குள் மிகுந்த அதிர்வையும் வியப்பையும் உண்டு பண்ணியவை. தனது அனுபவங்களை மிகவும் இலாவகமாகப் பதித்து வாசகனை வளைத்துப் போடும் யுக்தி அவரின் எழுத்துக்களில் உள்ளது. இதேபோல் தெனியானின் எழுத்துக்களிலும் இந்தப் பண்பினை அவதானிக்க முடியும். தெனியான் மல்லிகையில் தொடராக எழுதிய 'பூச்சியங்கள் பூச்சியமல்ல' பத்தியே எனது 'பேனாவால் பேசுகிறேன்' பத்திக்கு அடித்தளமிட்டது என்பதே உண்மையாகும்.

**எங்கள் தேசம்:** இன்றைய கால கட்டத்தில் இலக்கியங்களின் போக்கு மாற்றங்களுக்கு உட்பட்டு வருகிறது. இது பற்றிய உங்களது பார்வை என்ன?

**நாச்சியாதீவு பர்வீன்:** எல்லாக் காலங்களிலும் மாறாதது மாற்றம் ஒன்றுதான். அந்த சமாந்திர மாற்றம் இலக்கியத்திலும் நிகழ்கிறது. கால தேச வர்த்தமானங்களின் அடிப்படையிலேயே இலக்கியப் பிரதிகளின் மாற்றமானது இன்னொரு திசையை நோக்கிய உச்ச கட்டப் பாய்ச்சலைக் கொண்டுள்ளது. குறிப்பாக, கவிதை இலக்கியத்தில் சோலைக் கிளியின் தனித்துவமான பாணி இன்று அனைத்துத் தரப்பினராலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதையே பலரும் பின்பற்றுகின்றனர். பிறநாட்டு இலக்கியங்களின் மொழிபெயர்ப்புக்கள் நமக்குள் வித்தியாசமான சிந்தனை விருத்தியை விதைத்துள்ளன. குறிப்பாக, அஷ்ரப் சிஹாப்தீனின் மொழிபெயர்ப்புக்கள் அந்த வசதியினை நமக்கு இன்னும் இலகுபடுத்தியுள்ளன. இவ்வாறே இலக்கியப் பிரதிகளின் போக்கானது ஆரோக்கியமான திசைகளை நோக்கிப் பயணிக்கிறது.

**எங்கள் தேசம்:** உங்களுடைய இலக்கிய படைப்புக்களின் பாடுபொருள் எது சார்ந்தவையாக அதிகம் காணப்படுகின்றது?

**நாச்சியாதீவு பர்வீன்:** எனது இலக்கியப் பிரவேசம் ஆத்ம திருப்திக்காகவே ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், சமூக அவலங்களை இலக்கிய சாளரத்தினூடாக படம் பிடித்துக் காட்ட முடியும் என்ற யதார்த்தத்தை உணர்ந்ததன் பிற்பாடு எனது எழுத்துக்களை பாதிக்கப்பட்ட ஒரு சமூகத்தின் அவலக் குரலை பதிவு பண்ணும் தளமாக மாற்றிக் கொண்டேன். பாதிக்கப்பட்டவர்களுக்கு குரல் கொடுக்கும் மனோதிடம் இல்லாதவன் எழுத்தாளனாக முடியாது. எங்கள் பிரதேசத்தின் அப்பாவி மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு எனது எழுத்துக்களினூடாக குரல் கொடுத்துள்ளேன். எழுத்தினால் சாதிக்க முடியும்; எழுதுவதும் ஒரு போராட்டம்தான். இதனால் நான் உயிரச்சுறுத்தலையும் எதிர்கொண்டேன்.

# தமிழ் மொழி இஸ்லாத்துக்கு விரோதமானதா?

சமீலா யூசுப் அலி

ஒரு காலத்தில் ஆங்கில மொழியைப் படிப்பதையும் பேசுவதையும் குற்றமாகக் கருதுகின்ற மனோபாவம் இலங்கை முஸ்லிம்களிடம் இருந்தது. பிரித்தானியா இலங்கையை பிரித்தாண்ட காலம் அது.

பின் வந்த காலங்களில் சுதேச மொழிகளைப் படிப்பதில் ஆர்வம் காட்டி வந்த எம் சமூகம், தங்கள் சொந்த மொழியான தமிழிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகத் தூரமாகிப் போனது. அறபு மொழிதான் எங்கள் சொந்த மொழி என்ற சிந்தனை மரபுக்குள் சிக்குப்பட்டு தமிழ் மொழியை அப்படியே ஒதுக்கித் தள்ளி விட்டிருக்கிறோம் என்பது விசனத்துக்குரியது.

குறிப்பாக அறபுக் கல்லூரிகள், மத்ரஸாக்களுக்குள் இந்த வாதம் நிலவி வந்தது; இன்னும் வருகிறது. இயக்கங்களின் எழுச்சியோடு தமிழ் மொழி சார்ந்த முஸ்லிம்களின் அடையாளமே தொலைந்து போய் விட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

தமிழ் இலக்கிய நூற்களை வாசிப்பது சம்பந்தமாகவும் எழுதுவது சம்பந்தமாகவும் இலங்கை இஸ்லாமியவாதிகளிடம் வித்தியாசமான கருத்துக்கள் நிலவுகின்றன. இந்த



விடயத்தில் இந்திய இஸ்லாமியவாதிகள் வேறுபடுகின்றனர். தமிழக முஸ்லிம்களுக்கு தமிழை வாசிப்பதிலும் வளர்ப்பதிலும் அதீத ஈடுபாடு இருக்கிறது. தமிழில் புதிதாக வந்திருக்கக் கூடிய நூற்கள், இலக்கியங்கள் மற்றும் எழுத்தியக்கங்கள் பற்றி தமிழக முஸ்லிம்களுக்கு நன்கு தெரியும்.

அசன்பே சரித்திரமும் சிந்துநதிக் கரையினிலும்தான் தமிழில் வாசிக்க ஆகுமான நாவல்கள் என்று சொல்லித் தரப்பட்ட அறியாமைக் காலம் ஒன்றிருந்தது. நாங்கள் வாசிப்பவற்றை வெளியில் சொல்லிக் கொள்ள முடியாத ஓர் கையாலாகாத நிலையையும் அது உருவாக்கி விட்டிருந்தது.

என்னுடைய தந்தை தமிழ் இலக்கியத்தை அதன் சாரங்களை அணு அணுவாகச் சுவைத்த ஒருவர். அவரது வாசிப்பார்வம் ஒரு சிந்தனை முகாம் சார்ந்து இருந்ததேயில்லை. இது சம்பந்தமாக அவர் எங்களிடம் நிறையவே பகிர்ந்து கொண்டுமிருக்கிறார்.

அடிப்படையில் இலங்கை முஸ்லிம்கள் தமிழர்கள் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள். தமிழ் இலக்கியங்கள், நாவல்கள் வாசிப்பது தமிழைச் சுவைப்பது ஒரு இயல்பான விடயம் என்று நினைக்கிறேன். நாங்கள் பிறந்த போதும் வளர்ந்த போதும் எங்கள் செவிகளில் விழுந்து உதடுகளில் தவழ்ந்த மொழி அது.

அது இஸ்லாத்துக்கு விரோதமானது என்று சொன்னால் இஸ்லாம் பற்றிய எங்கள் புரிதல் சின்ன வட்டத்துக்கு வெளியே வளரவில்லை என்று தான் சொல்ல வேண்டும்.

இன்னும் கூட இயக்கவாதிகளிடம் நீங்கள் கடைசியாக என்ன தமிழ் நூலை வாசித்தீர்கள் என்று கேட்டால் பெரும்பாலானோரின் பதில் சில இஸ்லாமிய சஞ்சிகைகளைக் கூறுவதாகத்தான் இருக்கும். ஒரு சில விதிவிலக்குகள் இருக்கலாம்.

தமிழ் இலக்கியங்கள் சிந்துநதிக் கரையினிலேயிலிருந்து வெகுவாக வளர்ந்து விட்டிருக்கின்றன. ஆங்கில இலக்கியம் படிப்பதையும் ஷேக்ஸ்பியர், வில்லியம் பிளேக், எர்னஸ்ட் ஹெமிங்வே, ஹென்றி மிலர் பற்றிப் பேசுவதையும் இஸ்லாத்திற்கு அப்பாற்பட்டதாக நினைக்காத அதே சமூகம், தமிழின் செழுமையான இலக்கியம் பற்றியோ கோணங்கி, மனுஷ்ய புத்திரன் அல்லது எஸ். ராமகிருஷ்ணன் போன்ற படைப்பாளிகள் பற்றி உரையாடுவதையோ இஸ்லாத்திற்கு மிகத் தூரமான அல்லது இறை நம்பிக்கையை ஆட்டங்காண வைக்கின்ற விடயமாக நினைக்கிறது.

➡ 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மக்கள் அவரைச் சூழ்ந்திருக்கிறார்கள்

மூலம் : அஸீஸ் நேஸின்
தமிழில்: எம். ரிஷான் ஷெரீப்

அவர் இறுதியாகச் சிறையில் கழித்த காலம் மிகவும் கொடுமையானது. சிறையிலிருந்து விடுதலை பெற்ற பிறகு மிகவும் தொலை தூரத்திலிருந்த ஒரு பிரதேசத்திற்கு அவர் நாடு கடத்தப்பட்டார். அவர் சிறையிலிருந்தபோது அவருடைய மனைவியால் அவர் விவாகரத்து செய்யப்பட்டிருந்தார்.

அவரது எல்லா எதிர்பார்ப்புகளும் சிதறுண்டு போயிருந்தன. வாழ்க்கையைக் கொண்டு செல்லப் போதுமான பணம் கூட அவரிடமிருக்கவில்லை. வேலையொன்றைத் தேடிக்கொண்டு, அமைதியான வாழ்க்கையொன்றைக் கழிப்பதற்கு அவர் நிரந்தரமாக அரசியல் வெளியிலிருந்து விலகிக்கொள்வாரா?

எல்லாவற்றுக்கும் முதலில் அவர் ஓர் இருப்பிடம் தேடி நடந்தார். அவர் நாடு கடத்தப்பட்டிருக்கும் பிரதேசத்திலிருந்த நகரத்தில் மட்டுமல்ல, நகருக்கு வெளியேயும்கூட வீடொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு அதிக வாடகையைச் செலுத்த வேண்டியிருக்கும். செலுத்தத் தவறினால், வீட்டின் உரிமையாளன் வந்து தொந்தரவு செய்வான் என்பதால் அவ்வாறான சந்தர்ப்பமொன்றுக்கு முகம்கொடுக்க அவர் விரும்பவில்லை. மிருகக் காட்சிசாலைக்குப் புதிதாக வந்துள்ள விலங்கொன்றைப் பார்க்க வருவது போல், தன்னைப் பார்க்கவும் மக்கள் வருவார்களெனச் சந்தேகித்த அவர் அமைதியானதொரு வாழ்க்கை நடத்த எண்ணினார். அதனால் அவர் அப்பிரதேசத்தின் ஒரு மூலையில் மக்களின் நடமாட்டமே இல்லாத ஒரு பகுதியிலிருந்த வீடொன்றின் ஓர் அறையை வாடகைக்கு எடுத்தார்.

அவர் தங்கியிருந்த வீட்டுக்குச் சற்றுத் தூரத்தில் பாதையின் எதிர்ப்புறத்தில் சிறியதொரு சில்லறைக் கடை இருந்தது. அதற்கும் கொஞ்சம் தூரத்தில் பாதையின் இடது பக்கத்தில் சிறியதொரு பழக்கடையொன்றும் இருந்தது. அவர் அக்கடைகளில் தனது தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டார். சில்லறை வியாபாரியும் பழ வியாபாரியும் கொஞ்சம் கொஞ்சமாக அவருடைய நண்பர்களாயினர். அவர்களது வியாபாரம் மிகவும் சொற்பமானதாக இருந்தது. ஒரு நாளைக்கு வருகை தரும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை ஐந்து அல்லது ஆறு மட்டும்தான். அதிகமாகப் பணம் செலவு செய்யக்கூடியவர்கள் அந்தக் கடைகளுக்கு வரவில்லை. அந்த இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குக் கடையைக் கொண்டுசெல்வதற்கு தேவையான வசதிகளும் அக்கடை உரிமையாளர்களுக்கு இருக்கவில்லை.

சில தினங்களுக்குப் பிறகு, சில்லறைக் கடைக்கு முன்னால் சுடச்சுட அப்பம் விற்கும் கடை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. எந்நாளும் மத்தியான வேளையில் வரும் வியாபாரி, இரவின் இருள் சூழும் வரையில் அங்கே சுடச்சுட அப்பம் விற்றான். அதற்கு ஒன்று சில தினங்களுக்குப் பிறகு இன்னுமொரு வியாபாரி, அதற்குப் பக்கத்திலேயே பாண் விற்க ஆரம்பித்தான். பழ வியாபாரியின் கடையின் பகுதியொன்றை வாட கைக்கு எடுத்த இன்னுமொருவன், கண்ணாடி அலுமாரியொன்றில் கேக்குகளை வைத்து விற்றான். சிறிது காலம் சென்ற பிறகு, சப்பாத்துத் தைப்பவனொருவன், பழச்சாறு விற்கும் ஒரு சைக்கிள்காரன், தின்பண்ட வியாபாரி ஆகியோர் அப்பகுதியில் தமது வியாபாரத்தைத் தொடங்கினர்.

சொற்ப காலத்துக்குள்ளேயே அவரது வீட்டைச் சூழவிருந்த பகுதி, சிறியதொரு சந்தை போல் ஆகிவிட்டிருந்தது. சில்லறைக் கடைக்கும் பழக்கடைக்குமிடையில் புதியதொரு கோப்பிக் கடையும் ஆரம்பிக்கப்பட்டது. அங்கே போய் வருபவர்களின் எண்ணிக்கையும் படிப்படியாக அதிகரித்துக் கொண்டே வந்தது.

அவர் தங்கியிருந்த வீட்டைச் சூழவிருந்த பாழடைந்த வீடுகளும் அறைகளும் புதிய குடியிருப்பாளர்களால் வாடகைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இந்தப் பிரதேசத்துக்குச் சடுதியில் உதித்திருக்கும் அதிர்ஷ்டத்தை எண்ணி அவர் வியந்தார்.

அவருக்கு அவருடைய நண்பர்களிடம் கடன் கேட்பதுவும் இயலாது. அவர்களில் அநேகர் வேலையற்றவர்கள். மற்ற நண்பர்கள் இவ்வுலகை விட்டும் சென்றிருந்தனர். அவர் சில்லறை வியாபாரியிடமிருந்தும் பழ வியாபாரியிடமிருந்தும் ஏனைய வியாபாரிகளிடமிருந்தும் இடைக்கிடையே கொஞ்சம் பணம் கடனாகப் பெற்றிருந்தார். அவர் அந்தக் கடனையெல்லாம் திருப்பிக்கொடுக்க வேண்டும்.

ஒரு மாலை வேளையில் அவர் இந்தக் கடன்களையெல்லாம் திருப்பிக்கொடுத்துவிட்டு அப்பிரதேசத்தை விட்டும் செல்வது எவ்வாறெனச் சிந்தித்துக் கொண்டிருந்தபோது, யாரோ வந்து கதவைத் தட்டினார்கள். அறைக்கு வெளியே அவரைச் சந்திக்க மூவர் வந்திருந்தனர். அவர்கள் சில்லறை வியாபாரியும் பழ வியாபாரியும் கோப்பிக் கடைக்காரனும். அவர் தனது எளிய அறைக்குள் அவர்களை அழைத்துவந்தார்.

சில்லறை வியாபாரி புன்னகைத்துக்கொண்டே, அவனது கையிலிருந்த கடதாசிப் பையை மேசையின் மீது வைத்தான்.

அவர் கலவரமடைந்தார். இவர்கள் இவற்றை எடுத்து வந்திருப்பது எதற்காக? அவர்கள் இங்கு வந்திருப்பது, தான் கடனாகப் பெற்றிருந்த பணத்தைத் திருப்பிக் கேட்பதற்காகத்தான் என அவர் எண்ணியிருந்தார். ஆனால் இவர்கள் பரிசுகள் எடுத்து வந்திருப்பது ஏன்?

''ஐயா இந்தப் பகுதியை விட்டுட்டுப் போக நினைச்சிருக்கிறதா நாங்க கேள்விப்பட்டோம். அது நெசம்தானா?'' சில்லறை வியாபாரி கேட்டான்.

''ஆமா . . . அப்படியொரு எண்ணமிருக்கு.''

அவர்கள் வந்திருக்கும் காரணம் இப்போது அவருக்குப் புலப்பட்டது. அவர்களிடமிருந்து கடனாகப் பெற்றிருந்த பணத்தைத் திருப்பிக் கொடுக்காமல் தான் தப்பிச் செல்ல முயல்வதாக அவர்கள் எண்ணியிருக்கக்கூடும்.

''ஆமா. நான் இந்த அறையை விட்டுப் போகப் போறதா எப்படித் தெரிஞ்சுக் கிட்டீங்க?''

''எங்களுக்கு அக்கம்பக்கத்துலருந்து கேள்விப்பட்டுச்சு.''

''ஆனா அது பற்றிக் குழப்பமடைய வேணாம். நான் உங்கக்கிட்ட வாங்கிய கடனையெல்லாம் திருப்பிக் கொடுக்காம இங்க இருந்து போகப் போறதில்ல.''

''எங்கள வெட்கப்படவைக்க வேணாம் ஐயா. ஐயாக்கிட்ட இருந்து எங்களுக்குப் பணம் தேவையில்ல.''

ஏனது?

''நாங்க வந்தது ஐயாவோட சேவையை கௌரவிக்க. ஐயா எங்களுக்குப் பெரியதொரு சேவையை நிறைவேற்றித் தந்திருக்கீங்க.''

அவருக்கு மெலிதாக வியர்த்தது. எதுவும் பேச முடியாதபடி தொண்டையில் ஏதோ அடைபட்டது போல உணர்ந்தார்.

அது பற்றி ஞாபகப்படுத்தவும் வேண்டாம். அவர் உளறலாகச் சொன்னார்.

அவர்கள் அவர் யாரென அறிந்துகொண்டிருக்கிறார்கள். மக்களுக்காகப் போராடிய புரட்சியாளர் தான் தானென அவர்கள் எப்படியோ அறிந்துவிட்டார்கள்.

கோப்பிக்கடை உரிமையாளன் திரும்பவும் பேச்சை ஆரம்பித்தான்.

''இந்தப் பகுதியைவிட்டுப் போறதுக்கு நினைச்சிருக்கிற யோசனையை விடச் சொல்லி நாங்க தாழ்மையா வேண்டு றோம்.''

''ஆமா. நாங்க அதைச் சொல்லத்தான் வந்தோம். பழ வியாபாரி இடை நிறுத்தினான்.''

''எனக்கு வாடகை கொடுக்க வழியொண்ணு இல்ல. அதனால நான் போயே ஆகணும்.''

''எங்களுக்குத் தெரியும். பழ வியாபாரி பேசத் தொடங்கினான்.''

''எங்க எல்லோருக்குமே தெரியும். நாங்க வியாபாரிகளெல்லோருமே ஒன்றுசேர்ந்து ஐயாவின் வீட்டு வாடகையை எங்களுக்கிடையில சேகரித்து ஒவ்வொரு மாசமும் கொடுக்குறதா தீர்மானித்திருக்கிறோம். எங்க எல்லோருடைய வேண்டுகோளும் ஐயா இந்தப் பகுதியைவிட்டுப் போயிட வேணாங்குறதுதான்.''

''வாடகையப் பத்தி யோசிக்க வேணாம். நாங்க அதப் பார்த்துக்கொள்றோம். இந்தப் பகுதியைவிட்டு மட்டும் போயிட வேணாம். சில்லறை வியாபாரி இடைமறித்தான்.''

அவரது விழிகள் ஆனந்தத்தால் நிரம்பின. அவர் வழிநடத்திய மக்கள் போராட்டத்தின் முக்கியத்துவத்தைப் பல வருடங்களுக்குப் பிறகாவது உணர்ந்துவைத்திருப்பது அவரது மகிழ்ச்சியை இரு மடங்கு, மும்மடங்குகளாகப் பெருகச் செய்தது.

''அதுன்னா முடியாது.'' அவர் மீண்டும் சொன்னார்.

கோப்பிக் கடைக்காரன் திரும்பவும் கதைத்தான்.

''நாங்க இது எல்லாத்தையும் பற்றியும் கதைச்சோம். ஐயாவுக்கு மாசாமாசம் தேவைப்படுறதையெல்லாம் வியாபாரிகளுக்கிடையில சேகரித்துத் தர்றோம். என்னவாயிருந்தாலும் இந்தப் பகுதியை விட்டுட்டு மட்டும் போயிட வேணாம்.''


மூவரும் ஒன்றாக இணைந்து வற்புறுத்தினார்கள். மக்கள் இப்போது விழிப்படைந்திருக்கிறார்களென அவர் உணர்ந்தார். மக்களது உணர்வுகளில் புதியதொரு உத்வேகம் பிறந்திருக்கிறது. கடந்த காலங்களில் அவர் எடுத்துச்சென்ற மக்கள் போராட்டத்தைக் கேலிசெய்த வியாபாரிகள்கூட இப்போது அவரது மதிப்பை உணர்ந்திருக்கிறார்கள். அவரது கண்களிரண்டும் ஆனந்தக் கண்ணீரால் ஈரமாகின.

''ரொம்ப நன்றி. . . ஆனா எனக்கு உங்க உதவிகள ஏற்றுக்கொள்ள முடியாது.''

அவர்கள் தொடர்ந்தும் அவரை வற்புறுத்தினார்கள்.

➡ 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தனது உலகை வாசிக்க அலைவுறும் சிறுவன்




வண்ணத்துப் பூச்சிகளில் வழிந்தொழுகும்
கண்ணைப் பறிக்கும் வர்ணங்களில்
தானும் ஒரு வர்ணமாகியும்
சிறகுகளாகியும் பெருவெளியெங்கும்
மிக அலாதியாய் பறந்து திரிகிறான் சிறுவன்

அவனது கிளர்த்தலை சொதப்பி
வறுத்த நிலக்கடலை சுருள்களை கொடுத்து
விற்றுத் தீர்த்து வரும்படியாக
கடற்கரை முற்ற வெளிக்கு
உறுக்கி அனுப்புகிறாள் உம்மா

அவன் நிலக்கடலையை மறந்து
கடல் அலைகளில் கால் நனைப்பதும்
துரத்தும் ராட்சத அலைகளிடமிருந்து தப்புவதும்
பின் அவன் அலையை துரத்துவதுமாய்
சிறு நண்டுபோல் விளையாடுகிறான்

பின்னர் தனது வயதை ஒத்த
இன்னுமொரு சிறுவன்
விடும் காற்றாடியை கெஞ்சி கூத்தாடி வாங்கி
கொஞ்சம் விட்டு மகிழ்ந்து
நனது தீராத ஆசையை நிறைவேற்றுகிறான்

மேலும் இடைக்கிடை ரயில் ஓடுவதும்
வேறு பிராக்குகளில் மூழ்குவதுமாய்
தனது எல்லாச் சேட்டைகளினையும்
கடற்கரை மண்ணில் கவுட்டுக் கொட்டி
தெவிட்டும் வரை அலைகிறான்

அவனது கச்சான் சுருள்களை
நண்டு பிடித்துண்ண வந்த
நாய்களும் காகங்களுமாய்
கடற்கரை முற்ற வெளியெங்கும்
கத்திக் கரைந்து விற்றுத் திரிந்தன

என்னதான் பெற்றோர்கள்
அதட்டி காரியமாற்ற வைத்தாலும்
சொர்க்கமாய் தெரியும்
அவர்களது இனிய உலகத்தை மட்டுமே
மீண்டும் மீண்டும் ரசித்து வாசிப்பதில்
கடும் குறியாய் இருப்பார்கள் சிறுவர்கள்

ஜமீல் ஏ. றஹ்மான்

## தமிழ் மொழி இஸ்லாத்துக்கு...

(17 ஆம் பக்கத் தொடர்)

இது மிக மிக துரதிஷ்டவசமான நிலைமையாகும்.

தமிழைப் பற்றிப் பேசும் போது தயவு செய்து அறபினைப் பற்றிப் பேசாதீர்கள்.

அது தனியாகப் பேசப்பட வேண்டிய இன்னொரு விடயம்.

இலக்கியம் என்பது மனித வாழ்வின் அவலங்களை, இருத்தல் போராட்டங்களை, நுண்மையான மனவுணர்வுகளை அப்படியே எழுத்துக்கோ அல்லது வேறு வடிவங்களுக்கோ பெயர்க்கும் மகத்தானதொரு கருவி.

அன்றாட வாழ்க்கையில் நாம் சாதாரணமாகப் பயன்படுத்தும் மொழியில் தான் ம் இலக்கியங்கள் உயிர்பெற முடியும். ஒப்பனைகளற்று மிக யதார்த்தமாக உணர்வுகளை வெளிப்படுத்த முடியும். அந்தத் தமிழ் மொழியை விவாகரத்துச் செய்து விடுவதென்பது நம் இருப்பினை அல்லது அடையாளத்தினைத் தொலைத்து விடுவதாகும்.

ஆக, தமிழ் மொழி இலக்கியங்கள், தமிழ் நூற்கள் இஸ்லாத்திற்கு விரோதமானவை என்ற மனோநிலையில் மாற்றம் தேவை. குறிப்பாக, வளரிளம் பருவத்தினரிடம் தமிழ் மொழி பற்றிய ஆர்வமும் தூண்டுதலும் வளர்க்கப்பட வேண்டிய அவசியம் இருக்கின்றது. இஸ்லாமிய இயக்கங்கள் இதற்குப் பங்களிப்புச் செய்வது அத்தியாவசியம். இயக்கக் கட்டமைப்புக்கு வெளியில் இருக்கும் நூற்களை வாசிப்பதற்கும் உந்துதல் அளிக்கப்பட வேண்டும்.

சமூக ஊடகங்களின் வருகையோடு ஏராளமான எழுத்தாளர்கள் காளான் பூத்த மாதிரி எழுத ஆரம்பித்திருக்கிறார்கள். ஆரோக்கியமான விடயம்தான். அதே நேரம் அந்த எழுத்துக்களை வாசித்துச் செல்லும் போது ஆழமற்ற வாசிப்பும் இஸ்லாமிய எழுத்து என்ற பிழையான அனுமானங்களும் கட்டுப்பெட்டித்தனங்களும் நன்றாகவே வெளிப்படுகின்றன.

வசனங்களை சரியாகக் கோர்த்து எழுதக் கூட முடியாத, ஏராளமான எழுத்துப் பிழைகளுடன் எந்தக் கூச்சமுமின்றி எழுதிச் செல்கின்ற இந்த வங்குரோத்து நிலைமை மாறியாக வேண்டும்.

தமிழைக் கற்பதிலும் வாசிப்பதிலும் முஸ்லிம் சமூகம் தன் ஆர்வத்தை மீண்டும் புதுப்பித்தாக வேண்டும்.

# சலசலத்துக் கிடந்த வயல்!!



பாற்புக்கை சோறாக்கி
ஊரெல்லாம் சேர்ந்திருந்து
சுவைத்த காலம்
மறைஞ்சிடுச்சி!!

இரும்பு மெசின்
வந்திடுச்சி
மொத்தமாக அறுத்திடுச்சி
சூடுமில்லை
அதை மிதிக்கவில்லை
விலை மதித்து
லாரி கொண்டு மறைஞ்சிடுச்சி!!

சலசலத்துக் கிடந்த வயல்
ஒரு நாளில்
வெறிச்சோடிப் போயிடுச்சு
கதிர் பொறுக்கும் பிள்ளைகளும்
வயல் பார்த்து ஏமாந்து
வாய் பார்த்து
வீடு திரும்பிடுச்சி!!
வயற்காடு இன்று
அன்று போன்று சிறப்பில்லை

களத்துப்பாட்டு கேட்கவில்லை
கிராமத்து வாசமெல்லாம்
மெசின் வாழ்வோடு
முடிஞ்சிடுச்சி!!

முஹம்மத் ஹனீபா ஜௌஹர்
கிண்ணியா

# காஸாவில் குருதி சிந்தி போராடும் ஒரு சகோதரனுக்கு...

சகோதரனே உன் மீது சாந்தி உண்டாகட்டும்
என் கனவுகளில் உன் நினைவுகள் வந்து
என் கையாலாகா தனத்தை
கேலி செய்கிறது

உன் குருதிச் சொட்டுக்கள்
வீணாய்ப் போய் விடாது
என் பலவீனமான ஈமான்
இன்னும் வாய் பொத்தி கை கட்டி
நம் எதிரிகளுக்கு முன்னால்
அடிமையாகவே என்னை
இருத்தி வைத்துள்ளது
நும்ரூத்தை கொன்றொழித்த
ஈக்களையும் அல்லது
ஆப்ரஹாவை இல்லாமலாக்கிய
யானைப்படையையும் அல்லது
இன்னும் [illegible]
மூலமான அழிவு நம் எதிரிகளுக்கு
வரும்- எப்போது?

கலிமா சொன்ன காரணத்தினால்
நம் துயர் துடைக்க எந்த சியோனிச்
சக்திகளும்
வர மாட்டா- மாறாக
பள்ளத்தாக்குகளில் உயிருடன் நம்மை
புதைத்து
வெறி தீர்த்துக்கொள்ளும் அந்த
அரக்கர்களின் கரங்கள்

சைத்தூன் மர நிழலில்
தம்பி தங்கைகளுடன் மண் வீடு கட்டி
விளையாட முடியாத உனது நிலை
பற்றி
நான் அறிய வாய்ப்பில்லை

காஸா பள்ளத்தாக்கின் தூசுகளுக்குள்
[illegible] உன் கவலை பற்றி

யாதொன்றும் அறியா தூரத்தில்
நாம் அனுபவிக்கும் துயரங்கள்
எப்போது தீரும்- உன்னைப்போலவே
எனக்குள்ளும் எழுகின்ற கேள்வி
அடிவானத்தின் முகடுகளுக்குள்
விழுந்து
காணாமல் போய் விடுகிறது...

பொறுத்திருப்போம் சகோதரா...
ஸஹாரா பாலைவனம் கடந்து வரும்
ஒரு ஒட்டகை கூட்டத்து வீரர்களுக்காக
அல்லது நைல் நதி தாண்டி உன்னை
காக்க வரும்
உண்மையான போர் வீரனுக்காக...

அங்கேயும் இங்கேயும்
நம்மவர்கள்
காட்டிக்கொடுக்கப்படுகிறார்கள்

நாச்சியாதீவு பர்வீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் தேசம்

மலர் : 15 இதழ் : 10 மே 15 - 31

77. ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, கொழும்பு- 09. இலங்கை
தொலைபேசி: 0112 698771 / 0777 412561
பெக்ஸ்: 0112 698771, 0112 686030
மின்னஞ்சல்: engalthesamnews@gmail.com





தமிழ் முஸ்லிம் இன நல்லுறவை வளர்க்கும் பொருட்டு ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கத்தின் கலை இலக்கிய பகுதியால் ஏற்பாடு செய்யப்பட்ட தூவானம் கலை விழா அண்மையில் கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை கேட்போர் கூடத்தில் அமைப்பின் தலைவர் எம்.எல்.எம். தௌபீக் தலைமையில் நடைபெற்றது.

கலை இலக்கிய ஆர்வலர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் கலந்துகொண்ட இந்நிகழ்வில் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் பொதுச்செயலாளர் நஜா முஹம்மத் கொழும்பு தமிழ் சங்கத்தின் துணைத் தலைவர் தம்பு சிவா சிரேஷ்ட சட்டத்தரணி எம்.எஸ்.பாரிஸ், மற்றும் காப்பியக்கோ ஜின்னா ஷரிபுத்தீன் ஆகியோர் அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் வில்லுப்பாட்டு, கவிதைகள், நாடகம், பட்டிமன்றம் என பல கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றதுடன் பங்குபற்றுனர்களுக்கு அதிதிகளால் சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டன.

## முஸ்லிம்களுக்கு தடை விதிப்பது வெறும் யோசனை மட்டுமே : டொனால்ட் ட்ரம்ப் பெல்டி



அமெரிக்காவுக்குள் நுழைய முஸ்லிம்களுக்கு தடை விதிப்பது என்பது வெறும் யோசனை மட்டுமே என அமெரிக்காவின் குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசு கட்சியின் உத்தேச வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருந்தார். கடந்த டிசம்பர் மாதம், அமெரிக்காவில் முஸ்லிம்கள் நுழைவதற்கு ஒட்டு மொத்தமாக தடை விதிக்க வேண்டும் என்று கூறினார். இக் கருத்து ட்ரம்ப்க்கு எதிர்ப்பை சம்பாதித்துக் கொடுத்தது.

இப்போது ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சியின் வேட்பாளராவது உறுதியாகிவிட்ட நிலையிலும் லண்டன் மேயராக பாகிஸ்தானை பூர்வீகமாகக் கொண்ட சாதிக் கான் தெரிவு செய்யப்பட்டதையடுத்தும் முஸ்லிம்கள் தொடர்பான டிரம்பின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அமெரிக்கா வருவதற்கு லண்டன் மேயருக்கு மட்டும் விதிவிலக்கு அளிக்கப்படும் என்று டிரம்ப் கூறியிருந்தார். ஆனால் அதை லண்டன் மேயர் சாதிக் கான் நிராகரித்துவிட்டார்என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரேசில் ஜனாதிபதி பதவி நீக்கம்: நலன்காணத் துடிக்கும் அமெரிக்கா



பிரேசில் ஜனாதிபதி டில்மா ரூசெப் தற்காலிகமாக பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இதைத் தொடர்ந்து துணை ஜனாதிபதி மைக்கேல் டைமர் இடைக்கால ஜனாதிபதியாக பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

பிரேசில் வரவு செலவு கணக்கில் டில்மா ரூசெப் போலியான புள்ளி விவரங்களை பதிவு செய்து நாட்டின் பொருளாதாரம் வலுவாக இருக்கிறது என்று நாடகமாடியதாக அவர் மீது குற்றச் சாட்டுக்கள் எழுந்தன.

இந்த விவகாரம் தொடர்பாக அந்த நாட்டு நாடாளுமன்ற செனட் சபையில் ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்வதற்கான தீர்மானம் கொண்டுவரப்பட்டு செனட் சபையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. மொத்தம் 81 உறுப்பினர்கள் கொண்ட சபையில் 55 பேர் அதிபர் டில்மா ரூசெப்புக்கு எதிராக வாக்களித்தனர். இதையடுத்து அதிபர் டில்மா ரூசெப் தற்காலிகமாக பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

டில்மா ரூசெப்பும் அவரது தொழிலாளர் கட்சியும் குறிவைக்கப்பட்ட காரணங்கள் வெளிப்படையானவை. கடந்த இருதசாப்தங்களாக பிரேசிலை ஆட்சி செய்து வரும் தொழிலாளர் கட்சி, மேற்குலக நலன்களுக்கு முற்றிலும் மாறுபட்டவை. உலகளாவிய அரசியலிலும் பொருளாதாரத்திலும் பிரேசில் தன்னை ஒரு முக்கிய சக்தியாக வளர்த்துள்ளது. குறிப்பாக பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய பிரிக்ஸ் கூட்டமைப்பு, மேற்குலகுக்கு வலுவான மாற்றமைப்பாக உருவாகியுள்ளது. இக் கூட்டமைப்புக்கு பிரேசிலின் பங்கு மிக முக்கியமானது. அமெரிக்காபிரிக்ஸ்கூட்டமைப்பை அச்சத்துடன் நோக்குகிறது.

பிரேசிலில் ஆட்சி மாற்றம் அமெரிக்க நலன்களுக்கு மட்டுமன்றி, பிரேசிலின் வளங்களைச் சூறையாடத் துடிக்கும் பல்தேசியக் கம்பெனிகளுக்கும் அவசியமானது.





UNIVERSITY OF WOLVERHAMPTON | London South Bank University | PEARSON

Sharpen your **skills** with BCAS today for Colourful Careers tomorrow

**UGC அங்கீகாரம் கொண்ட UK Degree இனை இலங்கையிலேயே பூர்த்தி செய்யும் வாய்ப்பு**

TVEC approved

**BUSINESS MANAGEMENT MARKETING | HRM**
HND Leading to BSc (Hons) from the UK Universities

**QUANTITY SURVEYING**
HND Leading to BSc (Hons) from the UK Universities

**BIO-MEDICAL SCIENCE**
HND Leading to BSc (Hons) from the UK Universities

**CIVIL ENGINEERING**
HND Leading to BEng / BSc (Hons) from the UK Universities

**TELECOM ENGINEERING**
HND Leading to BEng (Hons) from the UK Universities

**COMPUTING**
HND Leading to BSc (Hons) from the UK Universities

**ELECTRICAL & ELECTRONIC ENGINEERING**
HND Leading to BEng / BSc (Hons) from the UK Universities

**LAW**
HND Leading to LLB (Hons) from the UK Universities

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

CALL 077 266 0129 | 077 283 4595

| | | |
|---|---|---|
| City Campus | 256, Galle Road, Colombo 6, Sri Lanka. | 011 236 4459 |
| Mount Campus | 54, Galle Road, Mt. Lavinia, Sri Lanka. | 011 272 8082 |
| Kandy Campus | 344, Peradeniya Road, Kandy Sri Lanka. | 081 222 4731 |
| Batti Campus | 294, 1/4, Trinco Road, Batticaloa, Sri Lanka. | 065 222 8451 |
| Wayamba Campus | 103, Dambulla Road, Kurunegala, Sri Lanka. | 037 223 3339 |
| Kalmunai Campus | 392/1, Main Street, Kalmunai, Sri Lanka. | 067 222 6899 |
| Jaffna Campus | 16, Point Pedro Road, Jaffna, Sri Lanka. | 021 221 9910 |

17 YEARS
ISO 9001:2008 CERTIFIED

HOTLINE : 011 236 4458 info@bcas.lk | www.bcas.lk



Like us on facebook
எங்கள் தேசம் facebook/engalthesamjmf



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Published by: Just Media Foundation, Printed at AJ Prints (Pvt) Ltd. 44, Station Road, Dehiwela.